543

# பூம்புகார்ப் பூங்கொடி

30 DEC 1967



TB
631,6(9)
N67
173144.

வாசன் பதிப்பகம்
மதுரை * திருச்சி.

# பூம்புகார்ப் பூங்கொடி

(உயர்நிலை வகுப்புகட்குரியது)

பேராசிரியர்
வித்துவான், மோ. சசு. பொன்னையா, எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

வாசன் பதிப்பகம்
மதுரை-1 :: திருச்சி-2

பதிப்புரிமை] 1967 [விலை ரூ. 1–25

முதற் பதிப்பு: டிசம்பர் 1967.

10·9 கி. கிராம் வெள்ளைத்தாளில் அச்சிடப்பட்டது.

ரத்னு பிரஸ், ஸ்ரீவைகுண்டம்.

# முன்னுரை

பூம்புகார்ப் பூங்கொடி என்னும் இந்நூலில் மாதவியின் வாழ்க்கை விரிவாகக் கூறப்படுகின்றது. கணிகையர் குலத்தில் பிறந்து, கலையும் நூலும் கற்றுத் துறைபோகிய கலைவல் மடந்தையாகி, ஆடல்பாடல் அழகுகளில் அற்றைநாள் புகார்நகரினரின் உள்ளத்தைக் கவர்ந்து, தலைக்கோல் தானம் பெற்ற கலையரசி மாதவி. அவள் கோவலனைக் காதலனுகப் பெற்று இல்வாழ்க்கை நடத்தி, அக்காலத்தில் ஒரு புரட்சியைத் தோற்றுவித்தாள். பிறப்பால் விளைந்த கொடுமைகளுக்குத் தன் இல்வாழ்வாம் நல்ல வாழ்க்கையைப் பலி கொடுத்தாள். நல்லுள்ளத்தோடு நுண்ணறிவும் பெற்றிருந்த அவள் பௌத்தத் துறவு நெறியை மேற்கொண்டு, தனக்கு அமைந்த துன்பவாழ்க்கையைப் பேரின்ப வாழ்க்கைக்குக் கருவியாக அமைக்க முயன்ருள்; வெற்றியும் பெற்ருள். இளைஞருக்கு மாதவியின் சிறப்பியல்புகளை விளங்கக் கூறி அவள் சமுதாய முறைமைகளையுந் தாண்டிக் கலையையும், வாழ்க்கையையும் பிணித்து வாழ முற்பட்ட சீர்திருத்தக் கொள்கையை அறிவுறுத்துவதே இந்நூலின் சிறப்பு நோக்கமாகும்.

சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இரு காப்பியங்களின் அடிப்படைக் கொள்கைகளும் குறிக்கோள்களும் இந்நூலில் எளிய நடையில் தெளிவுப்படுத்தப் படுகின்றன. இதனைக் கற்கும் மாணவருக்கு அவ்விரு காப்பியங்களையும் தெளிவுறக் கற்பதற்கு இன்றியமையாத அடிப்படை அறிவு கிட்டும்; அதனுல் அவற்றைக் கற்கும் ஆர்வம் எழும் என்பது என் கோள்.

கல்வித்துறையினரும், தமிழ்ச்சான்ருேர்களும், ஆசிரியர்களும் இதனை உயர்நிலைப் பள்ளியில் தமிழ்பயிலும் மாணவர்கட்கு அறிமுகஞ் செய்துவைக்குமாறு வேண்டுகிறேன்.

மோசசு பொன்னையா.

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

—இரவீந்திரநாத் தாகூர்.

# பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் ஸிந்துவையும்
குஜராத்தையும் மகாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன.
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | காவிரி நாடு | ... | 1 |
| 2. | பூம்புகார் | .... | 7 |
| 3. | அரசியல் | .... | 15 |
| 4. | கலையரசி | ... | 23 |
| 5. | கலை கலைக்காக | ... | 27 |
| 6. | உரிமைமோதல் | ... | 31 |
| 7. | கடற்கரைக் காட்சி | ... | 38 |
| 8. | பிரிவு | ... | 43 |
| 9. | இன்பமடல் | ... | 49 |
| 10. | மதுரைச் செலவு | ... | 53 |
| 11. | கையறு நெஞ்சத்துக் கடிதம் | ... | 57 |
| 12. | வினைவிளை காலம் | ... | 64 |
| 13. | கொலை விளைத்த கொடுமை | ... | 71 |
| 14. | கடமையும் கொள்கையும் | ... | 77 |
| 15. | துறவுநிலை | ... | 82 |
| 16. | பழம் பிறப்புணர்தல் | ... | 88 |
| 17, | மாதவியின் இறுதி வாழ்க்கை | .... | 96 |

# 1. காவிரி நாடு

## தமிழகம்

தமிழ் மொழி வழங்கும் நிலப்பகுதி தமிழகமாகும். தொல்காப்பியர் காலத்தில் வடக்கில் வேங்கட மலையும், தெற்கில் குமரியாறும், குடக்கிலும் குணக்கிலும் கடல் களும் அதன் எல்லைகளாக இருந்தன. பின்னர் நேர்ந்த கடற்கோளால் பஃறுளியாறும், பலவாய மலைத்தொடர் களும் குமரிமலையும் கடலுள் அமிழ்ந்தன. அதனால், தென் எல்லை குமரி முனையாயிற்று.

தமிழகத்தைக் குடபுலம், குணபுலம், தென்புலம் என முப்பகுதிகளாகப் பகுத்து, அவற்றை முறையே சேர, சோழ, பாண்டியர் மிகப் பழங்காலந் தொட்டு ஆண்டு வந்தனர். தொல்காப்பியர், 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு' என்று தமிழகத்தைக் குறிப்பிடுவதால் அப்பகுப்பு முறையின் பழமை புலனாகும். அரசியல் அமைப்பால் மூன்றாக விளங்கிற்றேனும், மக்கள்தம் உணர்வாலும், பண்பாலும், கொள்கையாலும், வாழ்க்கை முறைமைகளாலும் தமிழகம் ஒன்றாகவே திகழ்ந்தது. வெற்றி மேம்பாட்டை உலகறியச் செய்வதிலும், பிற நாட்டவரோடு வாணிகம் நடத்துவதிலும் மூவரும் தம்முள்

ஒத்த கொள்கையராகவே செயல்பட்டனர். இமயத்தின் பிடர்த் தலையில் வில்லும், புலியும், கயலும் ஒன்ருகவே பொறிக்கப்பட்டன. மாற்றரசருக்குத் தனித்தனியே முடங்கல் எழுதினாலும், அதில் மூவேந்தர் இலச்சினை களாகிய வில், கயல், புலி பொறித்தே விடுத்தனர். மொழியையும் கலைகளையும் வளர்ப்பதிலும், மூவரும் ஒத்த கொள்கையராகவே வாழ்ந்தனர். தமிழகத்தின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவராயினும், கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியருமாகிய கலைமக்கள் மூவர்தம் ஆதரவையும் வேறுபாடின்றிப் பெற்று வாழ்ந்தனர். ஆதலின், புலவர் பெருமக்கள் 'இமிழ் கடல்வேலித் தமிழகம்' என்றும் 'தண்டமிழ் வேலித் தமிழ்நாடு' என்றும், 'இமிழ்கடல் வரைப்பின் தமிழகம்' என்றும் தமிழகத்தை ஒன்ருகவே கண்டனர்.

## சோழவளநாடு

குணபுலம் எனப்பட்ட சோழநாடு, சோணாடு என மருவியும் வழங்கிற்று. அதன் பழைய எல்லைகளாக வடக்கில் திருப்பதியும், தெற்கில் வெள்ளாறும், கிழக்கில் கடலும், மேற்கில் காலத்திற்குக் காலம் மாறியமைந்த பல்லிடங்களும் எல்லைகளாக அமைந்திருந்தன என்று தெரிகிறது. பிற்காலத்தில் அது சிதம்பரத்திற்கு வடக்கில் உள்ள வெள்ளாற்றை வட எல்லையாகவும், புதுக்கோட்டைக்கு அருகே உள்ள தென் வெள்ளாற்றைத் தென் எல்லையாகவும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குழித்தலைப் பகுதியில் இருந்த கோட்டைக்கரையை மேல் எல்லையாகவும், குணகடலைக் கீழ் எல்லையாகவும் கொண்டிருந்தது என்று பழம்பாடல் ஒன்று கூறுகின்றது. அவ்வாருயின், இக்காலத் தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்

டங்களும், புதுக்கோட்டையின் ஒரு பகுதியும், தென் ஆற்காடு மாவட்டத்தின் வெள்ளாற்றிற்குத் தென்பாலுள்ள பகுதியும் சோழ மண்டலமாக விளங்கிற்று எனக் கொள்ளுதல் பொருந்தும்.

பெரும்பாலும் சமவெளியாகவே அமைந்த அந்நிலப் பரப்பில், ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாக ஒரு சில குன்றுகளே உள்ளன. பெருமலைத் தொடர்களோ தனி மலைகளோ யாண்டும் இல்லை. மேற்கிலிருந்து நிலம் சிறிது சிறிதாகத் தாழ்ந்து அமைந்துள்ளதால் காவிரி, கொள்ளிடம், வெள்ளாறு, வெட்டாறு, அரிசிலாறு, முடிகொண்டான் முதலிய சோணாட்டு யாறுகளெல்லாம் குணக்காக ஓடிக் கீழ்க்கடலில் கலக்கின்றன. எங்குப் பார்த்தாலும் வாய்க்கால்களும், குளங்களும் நிறைந்து அது நீர்நாடாகக் காட்சியளியாநிற்கும். பச்சைப் படாம் விரித்தாற் போன்றமைந்துள்ள வயற்பரப்பும், வானளாவி வளர்ந்த சோலைகளும், இடையிடையே அமைந்த சிற்றூர்களும், வானளாவிய கோபுரங்களைக் கொண்ட பேரூர்களும் கண்ணைக் கவர்ந்து, மனத்தை நிறைவு செய்து நிற்பதை இன்றுங் காணலாம்.

காவிரியாறு

நீல நதியின் நன்கொடையே எகிப்து நாடு என்பர். சோழநாடு காவிரியின் நன்கொடையேயாம். குடகு மலையிற் பிறந்து, கீழ்த்திசை நோக்கி விரைந்து ஓடிவரும் இவ்யாறே சோழ நாட்டின் செல்வச் செழிப்புக்குக் காரணமாகும். காந்தமன் என்ற சோழன் வேண்டுதல் கேட்டு, அகத்திய முனிவர் தம் கரகத்தைக் கவிழ்க்க, அதிலிருந்து பெருகிவந்து, சோழ நாட்டை உய்விக்கும் சோழர்தம்

குலக்கொடி அஃது என்று சீத்தலைச் சாத்தனுர் மணி மேகலையில் கூறுகின்ருர். அதனை அவர்,

'கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை'

என்றும் புகழ்ந்துரைக்கின்ருர். அதன் அழகில் ஈடுபட்ட இளங்கோவடிகள், அழகிய பெண் ஒருத்தி பூவாடை புனைந்து, கயற்கண்ணுல் விழித்து நோக்கி, இருமருங்கும் சோலை மயில்களும் குயில்களும் ஆடிப்பாடி உவகையூட்ட, மலர்மாலை புரண்டசையப் பெருமித நடைபோடுவது போல் அது செல்கின்றது என்று சிலப்பதிகாரத்தில் கூறு கின்ருர். கம்பர் பிரான், 'வருநாள் என்றும் பிழையாத தெய்வப் பொன்னி' என்று தம் காப்பியத்தில் அதன் பெருமையைப் பாராட்டினுர்.

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே பெற்றமையால் சோழநாட்டில், ஒரு வேலி நிலத்தில் ஆயிரங்கலம் நெல் விளைவதாயிற்று. அதனுல் சோழன் 'நெல்லுடையான் நீர் நாடர்கோ' என்று கொண்டாடப்பட்டான். ஒளவைப் பிராட்டியார், 'மேதக்க, சோழவளநாடு சோறுடைத்து' என்று புகழ்ந்துரைத்தார். வளத்தால் மேம்பட்ட காவிரி நாட்டை ஆண்ட சோழன் வளவனுனன். செல்வத்தின் மேல் எல்லைக்கு அவன் ஓர் எடுத்துக் காட்டானுன். 'வளவனுயினும் அளவறிந் தழித்துண்' என்னும் முது மொழியும் வழங்கி வரலாயிற்று.

'தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணு வதுஞ்சோழ மண்டலமே'

என்ப் புலவர் போற்றுந் தனிச்சிறப்பு என்றும் அதன் தனி உரிமையாயிற்று.

## பழமையும் மேம்பாடும்

சோழநாட்டின் புகழ் பண்டுதொட்டு நாகரிகம் பெற்றிருந்த உலகத்து நாடுகள் அனைத்திற்கும் எட்டிற்று. கிறித்து சகாத்தத் தொடக்கத்தில் வாழ்ந்த பிளினி, தாலமி என்போரின் நூல்களும், பெரிபிளசு என்ற நூலும், சோழநாடு மேனாட்டாரோடு கொண்டிருந்த வாணிபத் தொடர்பு பற்றி இயம்புகின்றன. அவற்றை ஆதாரமாகக் கொண்டு கி. மு. ஆறும் அல்லது ஏழாம் நூற்றாண்டு அளவிலேயே இவ்வாணிகத் தொடர்பு ஏற்பட்டிருக்கலாம் என்று வரலாற்று நூலார் கூறுகின்றனர். பெரிபிளசு என்ற நூலும் சோழநாடு கீழ்க் கடற்கரைக் கண் அமைந்து விளங்கிய நாடு என்றும், அதனை இரு பாகங்களாகப் பிரித்து இரு அரசர்கள் ஆண்டார்கள் என்றும் கூறுகின்றது. பழங்காலத்தில் உறையூரும் புகாரும் கோநகர்களாக விளங்கின என்பதும், அவ்விரு நகர்களிலும் ஆண்ட சோழர் இருவரும் தம்முள் அடிக்கடி போரிட்டனர் என்பதும் சங்கநூல்களால் அறியக் கிடக்கின்றன.

மேல்திசை நாடுகளிலிருந்தும் கீழ்த்திசை நாடுகளிலிருந்தும் வாணிகங்கருதிப் பல்வேறு மொழியினர் வந்து சோழநாட்டின் துறைமுகங்களான காவிரிப்பூம்பட்டினம், பொதுவு என்ற எயிற் பட்டினம் (இன்றைய பாண்டிச்சேரி), நாகப்பட்டினம் என்ற மூன்றிடங்களிலும் வாழ்வாராயினர். காவிரிப்பூம்பட்டினத்திலும், எயிற்பட்டினத்திலும், கிரேக்கரும் உரோமரும் குடியிருந்தனர். நாகப்பட்டினத்தில் ஒரு சீனக்குடியிருப்பு இருந்தது. அவர்களைப் பொதுவாக யவனர் என்றே குறிப்பிட்டனர். சோழ நாட்டில் யவனர் நுண் கைத்தொழிலாளராகவும்,

மாளிகைக் காவலாளர்களாகவும், அரண்மனைப் பணியாள ராகவும் பணியாற்றினர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

துறைமுகங்களில் தமிழ் நாட்டு விளைபொருள்களும் பிற நாடுகளிலிருந்து இறக்குமதியான பொருள்களும் குவிந்து கிடந்தன. ஏற்றுமதி இறக்குமதியாகும் பண்டங்களில் சோழனது அடையாள இலச்சினையாகிய புலிப் பொறி பொறிக்கப்பட்டது. சுங்கம் வசூலிப்பவர்கள் கண்ணுங் கருத்துமாகத் தம் கடமையை ஆற்றுநின்றனர். வணிகர்கள் வெவ்வேறு பொருள்களையும் வேறு பிரித்து அறிவிப்பதற்கு வெவ்வேறு கொடிகளைக்கட்டி விளம்பரஞ் செய்த வாணிக நாகரிகம் இக்காலத்தும் நமக்கு வியப் பளிக்கிறது. கடை வீதிகளில் கொள்வதும் மிகைகொள் ளாது, கொடுப்பதும் குறை கொடாது தமவும் பிறவும் ஒப்ப நாடி வாணிகம் நடத்தப்பட்டது.

# 2. பூம்புகார்

## பொதுவியல்புகள்

மிகப் பழங்காலத்தில் திருச்சிராப்பள்ளியின் அண்மையில் உள்ள உறையூரே சோழநாட்டின் தலைநகராக விளங்கிற்று. அக்காலத்தில் புகார் கடற்றுறை நகராக மட்டும் இருந்தது. பின்னர், இரண்டும் கோநகர்களாகி இரு வேறு சோழ அரசர்களால் ஆளப்பட்டன. கரிகால் பெருவளத்தான் இரண்டிற்கும் உரிமையெய்தி ஆண்டான். ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே அவன் உறந்தையைப் பிறங்கு நிலை மாடங்கள் நிறைந்த அணி நகராக்கினான். பின்னர், புகாரைச் செல்வ நகராகவும், கலைநகராகவும் அழகு திகழ் திருநகராகவும் மாற்றியமைத்தான். பின்னர், புகாரையே தன் ஒரு தனித் தலைநகராகவும் ஆக்கினான். அதனைப் பூம்புகாராக்கிய சிறப்பு கரிகாற் சோழனுக்கே உரியதாகும். குடவாயில், அழுந்தூர், கழுமலம் என்பன சோழநாட்டில் அக்காலத்திலிருந்த உள்நாட்டுப் பேரூர்கள்.

வளமிக்க புகார்நகரின் சிறப்பு, இலக்கியங்களில் பலபடப் பாராட்டப் படுகின்றது. அதன்கண் வாழ்வோர் எக்காரணங் கருதியும் அதனை விடுத்து, வாழ்வு கருதிப் பிறநகர் எதனுள்ளும் புகார் என்பதனாலேயே, அது புகார் எனப் பெயர் பெற்றது என்பர். இளங்கோவடிகள் பொதியிலும், இமயமும் பழங்குடிகள் வாழும் புகாரும் நிலை பெற்று வாழுமே யல்லாமல், அவை அழிந்து ஒடுங்கும் என்று ஆன்றோர் கூறுர் என்றார். அதன்கண், வாழ்ந்தவர் அனைவரும் இன்பமும் புகழும் ஒருங்கே பெற்றுத்

திகழ்ந்தனர். அதனை நாகருலகத்துடனும் தேவருலகத்துடனும் ஒப்பிட்டுப் போற்றுவது புலவர் மரபாய் இருந்தது.

புகார்நகர் காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் இருந்ததால் காவிரிப்பூம்பட்டினம் எனவும் பெயர் பெற்றது. ஓர் இயற்கைத் துறைமுகமாக அமைந்து விளங்கிய பல்வேறு நாடுகளிலிருந்து வந்த மரக்கலங்கள் கூடி நிற்க இடந்தந்து விளங்கிற்று. பலமொழி பேசிய பல நாட்டு மக்கள் ஆங்கு உறைந்ததால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே புகார்நகரில் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு வாழும் நாகரிக வாழ்க்கை நிலைபெற்றிருந்தது. மிகப் பழங்காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் சம்பாபதி, காகந்தி எனவும் வழங்கிற்று என்று மணிமேகலை தெரிவிக்கின்றது.

## அரண்மனை

கரிகாலன் புகார் நகரில் அமைத்த அரண்மனை வரலாற்றுச் சிறப்புடையதாக இருந்தது. வடதிசை நோக்கிப் படையெடுத்துச் சென்றக்கால், பல நாட்டரசரையும் வென்று, இமயமலையின் தலையில் புலி, வில், கயல் பொறித்து மீண்டான் கரிகாலன். அக்காலை, வடநாட்டு மன்னர் பலரும் அவனுக்குக் கலைப்பொருட்களைக் காணிக்கையாக வழங்கினர். வச்சிரநாட்டு அரசன் கொற்றப் பந்தரைக் கப்பப் பொருளாகக் கொடுத்தான். மகத நாட்டு மன்னன் பட்டி மன்றத்தைத் திறைப்பொருளாகப் படைத்தான். கரிகாலனது நட்புரிமையை வேண்டி அவந்தி வேந்தன் தோரண வாயிலைக் கையுறையாக வழங்கினான். அவை பொன்னாலும் மணியாலும் இயன்று அரிய வேலைப்பாடுகளைப் பெற்று விளங்கின. தன் அரண்

மனையில் கலைமண்டபம் ஒன்றை அமைத்து, அதில் அவற்றையும் அவையொத்த பல பொருள்களையும் அழகுற அமைத்து வைத்தான் கரிகாலன். அவ்வரண்மனை, நகரின் நடுவண் அமைந்து அதன் நடுநாயகமாகத் திகழ்ந்தது.

அரசனும், அவன் உரிமையும் வாழ்வதற்கென்று அமைந்த சோலைமாளிகை ஒன்றும் புகாரில் இருந்தது. கோடைக்காலத்தில் அஃது அரசனது உறைவிடமாக விளங்கும். அதனை இலவந்திகைப்பள்ளி என்று குறிப்பிட்டனர். அதன்கண் காற்று வசதியும், நீர் வசதியும் பொருந்த அமைந்த மண்டபம் ஒன்றும் இருந்தது. அது நீராழி மண்டபம் எனப் பெயர்பெற்றது.

பட்டினப்பாக்கம்

அரசனும் உரிமைச் சுற்றமும் வாழ்ந்த அரண்மனையைச் சுற்றிலும் இருந்த நிலவெளியில் யானைப் படைத் தலைவர்கள், குதிரைப்படைத் தலைவர்கள், தேர்ப்படைத் தலைவர்கள் காலாட்படைத் தலைவர்கள் உறைந்த பெரு மனைகளும், அகப்படைவீரர் வாழ்ந்த நெடுமனைகளும் இருந்தன. அவ்விடத்தை அடுத்து அகன்ற வீதிகளையும், இருமருங்கும் பல்வண்ண ஓவியந் தீட்டப்பட்ட பெரு மாளிகைகள் அமைந்த பெருங்குடி வணிகர்தம் குடியிருப்பு அமைந்து விளங்கிற்று. அப்பெருவீதிகளை அடுத்து அந்தணர், வீழ்குடி உழவர் முதலியோர் வாழ்ந்த நெடுந் தெருக்கள் அமைந்திருந்தன. ஒரு பால், மருத்துவர், சோதிடர், முத்துக்கோப்பவர், சங்கு அறுப்பவர் முதலிய நுண்தொழிலாளர்களின் இருக்கைகளும் தொழிற்கூடங் களும் அமைந்திருந்தன. மற்றொருபால், அரசனின் புகழைப் பாடும் சூதர், நகைவிளைக்கும் நளினக்காரர்,

ஆடல், பாடல் முதலிய கலைகளை வளர்த்த கலைமகளிர், இசைநலம் நிறைந்த கலைஞர்கள் முதலியோர் வாழ்ந்த அழகு மனைகளும் அமைந்திருந்தன.

மருவூர்ப்பாக்கம்

மருவூர்ப்பாக்கம் என்பது புறநகராகும். காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்த துறைமுகமே அதன் தலைசிறந்த பகுதியாகும். சுமத்திரா, சாவா, மலேயா, ஈழம், காழகம் முதலிய நாடுகளிலிருந்தும், எகிப்து, பினீசியா, கிரேக்கம், உரோமை முதலிய நாடுகளிலிருந்தும் வந்த பெருங்கலங்கள் கடலுள் அசைந்து கொண்டே நிற்கும். உள்நாட்டு வெளிநாட்டுப் பெருவணிகர் வாழ்ந்த மாளிகைகளும், சரக்குப் பேரறைகளும் துறைமுகத்திற்குப் பேரழகு தருவனவாக அமைந்து விளங்கின. துறைமுகப் பெரு முற்றத்தில் கடல்வழி வந்த புரவிகள் ஒருபால் காணப்பட்டன. பண்டிகளில் ஏற்றிக் கொணர்ந்த கரி மூடைகள் மற்றொருபால் கிடந்தன. வடமலைப் பகுதியிற் கிடைத்த மணித்திரள்களும் பொற்கட்டிகளும், மேல் மலையில் விளைந்த ஆரமும் அகிலும் குவிந்து கிடந்தன. கொற்கை முத்தும், குடகடல் மணியும், கங்கைத் தீரத்து விளைவுப் பொருட்களும், ஈழ மண்டலத்தினின்று வந்து இறங்கிய உணவுப் பொருட்களும், பர்மா நாட்டினின்று இறக்கப்பட்ட ஆக்கப் பொருட்களும் மலைபோற் குவிந்து கிடந்தன. பல்வேறு மொழி பேசிய கப்பலோட்டிகளும், வணிகர்களும் மிக்குக் காணப்பட்டதால் கடற்றுறையில் பல்வகைப் பண்பாடுகளும் கலந்து உறவாடிய ஓர் ஒப்பற்ற நாகரிக நிலை நிலவிற்று.

துறைமுகப் பகுதியை அடுத்து அமைந்த வீதிகளில் சந்தனம், பூ முதலிய நறுமணப் பொருள்களை விற்போர்

எங்குஞ் சுற்றித் திரிந்தனர். அவ்வீதிகளில் கைத்தொழிற் சாலேகளும், பட்டு, பருத்தி, பல்வகை உரோமங்களால் ஆகிய பல்வகை அழகுத் துணிகளே நெய்யும் சாலியர் குடியிருப்பும் ஒருபால் இருந்தன. மற்ருெருபால் பவளம், முத்து, மணி, பொன் முதலியன வற்ருல் அணி கலன் செய்து முடிக்கும் தொழிலாளர் உறைந்தனர். பிட்டு, அப்பம், கள், மீன், இறைச்சி முதலியனவற்றை விற்ற வணிகர்களும், உப்பு, வெற்றிலே, பாக்கு, கற்பூரம் முதலியனவற்றை விற்போரும் கலந்து வாழ்ந்தனர் மற்ருெருபால். ஓவியக்காரர், தையற்காரர், குலாலர், தோல் வேலே செய்வோர் ஆகிய தொழில்செய் மக்கள் குடியிருப்புக்களும் ஆங்காங்கே அமைந்திருந்தன. இவ்வாறு மருவூர்ப் பாக்கத்தில் வாணிகமும் தொழிலும் இணேந்து நிலேபெற்றன.

### நாளங்காடி

இரு பாக்கங்களுக்கு இடையே நிலவிய பெரு வெளியில் பகற்கடை வீதிகள் அமைந்திருந்தன. அங்கே கொள்வோர் கொடுப்போர் எடுத்த ஆரவார இரைச்சல் எப்பொழுதும் கேட்டுக்கொண்டே இருக்கும். அவ் விரைச்சலே இரு பெரு வேந்தர் தம்முள் முரணிப் போரிடும் போர்க்களத்து இரைச்சலோடு ஒப்பிட்டு உரைத்தார் இளங்கோவடிகள்.

நாளங்காடியின் ஒரு புறத்தில் காவற் பூதத்தின் பலிபீடம் இருந்தது. சோழ அரசன் முசுகுந்தன் இந்திரன் உதவியை நாடி வேண்டுதல் எடுத்த காலத்தில், அவனுக்கு உதவுமாறு இந்திரனுல் அனுப்பப்பட்ட பூதம் அது. அதன் உதவிக்கு நன்றியறிதலாக அக்காலந் தொட்டு அதற்குப் புகார் மக்கள் நாட்பலி யூட்டி

வந்தனர். அகநகரிலும் புறநகரிலும் வாழ்ந்த மங்கல மடந்தையர் சித்திரைத் திங்கள் முழுமதிநாள் தோறும் அவரை, துவரை, எள்ளு, பொங்கல் முதலியன படைத்துப் பூச்சொரிந்து பூசனைசெய்து அதனை வழிபடுவர். சோழவள நாடு எங்கும் பசியும், பிணியும், பகையும் முற்றிலும் இல்லையாகி, வசியும், வளனும் சுரக்க வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து பீடத்தின் முன் அவர்கள் குரவைக் கூத்தாடுவர். அகப்படை வீரரும், புறப்படை மறவரும் வீரத்தால் சோழனைக் காத்த அந்தப் பூதத்திற்குத் தம் தருகண் விளங்க ஆண்மைப் பலி செலுத்துவர். எம் இறை தீங்கிலனுகுக, அவன் கொற்றங் கொள்க என வேண்டித் தம் கருந்தலையை அறுத்துப் பீடத்தில் வைத்து வான்பலியூட்டும் அக்காட்சி கண்டார்க்கு அச்சத்தைத் தோற்றுவிக்கும்.

ஐவகை மன்றம்

பூம்புகாரில் அக்காலத்தில் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதசதுக்கம், பாவை மன்றம் என்ற ஐந்து மன்றங்கள் இருந்தன.

வெள்ளிடை மன்றம் என்பது வாணிகச் சரக்குகளைத் தேக்கி வைத்தற்குரிய ஒரு பொதுவிடமாகும். ஆங்குச் சரக்கு மூட்டைகள் குவிந்து கிடக்கும். அம்மூட்டைகளில் உரியவன் இன்னுன் என்பதைக் குறிக்கும் அடையாளமும், அதன் கொள் அளவும், அதன்கண் அடங்கிய சரக்கின் தன்மையும் முத்திரைகளாற் குறிக்கப்பட்டிருக்கும். அம் மன்றத்தைக் காவல் செய்யக் காவலர் இருந்ததில்லை; எனினும் திருடு போனதில்லை. எவரேனும் திருடும் எண்ணத்தோடு மூட்டையைத் தலைமீது ஏற்றினுல், அவர் அம் மன்றத்தைச் சுற்றிச்சுற்றி வரக்கூடுமேயன்றி, அதன்

எல்லையைக் கடந்து வெளிச்செல்லுதல் அவரால் கூடாது. அஃது அதன் தெய்வத் தன்மையாகும்.

நெடுவெளியில் அமைந்த குளத்தின் நடுவண் மண்டபம் ஒன்றிருந்தது. அதனை இலஞ்சி மன்றம் என்பர். அக்குளத்தில் கூனர், குறளர், ஊமையர், செவிடர், தொழுநோயாளர் முதலியோர் மூழ்கினராயின், அவர் குறை நீங்கி நலம்பெறுவர்.

திறந்த வெளியில் ஒளிதிகழ் நெடுங்கல் ஒன்று நின்றது. தெய்வத் தன்மை பொருந்திய அக்கல்லையுடைய அவ்வெளி நெடுங்கல் மன்றம் எனப்பட்டது. பைத்தியம் பிடித்தவரும், விடம் உண்டவரும், பாம்பின்வாய்ப் பட்டோரும், பேய்க்கோட்பட்டோரும் அந்நெடுங் கல்லைத் தொழுது வலம் வருவாராயின் குணமடைவர்.

நான்கு பாதைகள் கூடுமிடமொன்றில் ஒரு பூதத்தின் பீடம் இருந்தது. அதனைப் பூதசதுக்கம் என்றனர். கொடிய தீவினை செய்த மக்களை அப்பூதம் தன் பாசக் கயிற்றாற் கட்டித் துன்புறுத்தி உண்ணும் இயல்புடையது. அப்பூதம், 'போலித் துறவிகளையும், கற்பில்லாப் பெண்டிரையும், தம் அரசனுக்குத் துரோகஞ் செய்யும் அமைச்சரையும், பிறன்மனை நயக்கும் அறிவிலிகளையும், பொய்ச் சான்று கூறுவாரையும், புறங்கூறும் புல்லறிவாளரையும் என் பாசக் கயிற்றால் கட்டி விழுங்குவேன்', என்று ஓரமிட்டு எப்பொழுதும் ஆரவாரஞ் செய்யும். அவ் ஆரவாரவொலி புகார் நகரெங்குங் கேட்கும்.

திறந்த வெளியில் பாவை ஒன்று இருந்தது. தெய்வீகத் தன்மை பொருந்திய அப்பாவை இருந்ததால் அவ்வெளி பாவை மன்றம் எனப்பட்டது. மக்களின் உயிர்

எனத்தகும் அரசன் செங்கோல் தவறிக் கொடுங் கோலனாக மாறினாலும் நீதிமன்ற நடுவர் முறை தவறி முடிவு கூறினாலும் அப்பாவையின் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வடியும்.

இம்மன்றங்கள் ஐந்தும் புகாரில் நல்லொழுக்கமும், அறமும், முறையும் நிலைபெற்று விளங்குவதற்கு உறு துணையாக நின்றன.

# 3. அரசியல் நிலை

## கரிகாலன் காலத்திற்கு முற்பட்ட நிலை

மிகப் பழங்காலத்தில் தமிழகத்தை முடிமன்னர் ஆள வில்லை. குறுநில் மன்னர் ஆங்காங்கே உரிமையுடன் ஆண்டனர். அக்குறுநில மன்னர்கள் சிறுசிறு இனங் களின் தலைவர்களாகவே இருந்தனர். முடியரசர்கள் தம் ஆட்சியை நிறுவுவதற்கு அக்குறுநில மன்னர்களோடு அடிக்கடிச் சண்டையிட வேண்டியது இருந்தது. புற நானூறு, அகநானூறு முதலிய இலக்கியங்கள் அவ்வாறு நிகழ்ந்த சண்டைகளை ஆங்காங்குக் குறிப்பிடுகின்றன. அத்தகைய குறுநில மன்னர்களுள் மோகூரர் பழையன் மாறன், நன்னன் வேண்மான், வில்லவன் கோதை, ஓய் மான் நாட்டு நல்லியக் கோடன், தித்தன், திதியன், எருமையூரன் கங்கன், கட்டி, அன்னி, மிஞிலி முதலியோர் குறிப்பிடத் தக்கவர். அவர்களிற் பலர் பிற்காலத்தில் முடியரசருக்கு அடங்கி வாழ ஒப்புக்கொண்டு முடியரசரின் படைத் தலைவர்களாகவும், அவர் தம் ஆதரவு பெற்ற சிற்றரசர்களாகவும் வாழ்ந்தனர். பாரி, ஓரி, காரி, ஆய் முதலிய வள்ளல்கள் அவ்வாறு வாழ்ந்த சிற்றரசர்களின் பின்னவர்களே.

சோழநாட்டை ஆண்ட முடிமன்னர்கள் சென்னி கிள்ளி என்ற இருமரபினராவர். அவர்களுட் பலர் வியக் கத்தக்க பல பண்புகளைப் பெற்று மேம்பட்டு விளங்கினர். சிபி என்ற அரசன் அருளுடைமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தான். தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறவின் உயிரைக் காப்பதற்காகத் தன் உயிரைப் பருந்துக்கு

உணவாக அளிக்க அவன் முன்வந்தான். புறநானூற்றுப் பாடல்களில் அவன் தீரச்செயல் பாராட்டப்படுகிறது. இளங்கோவடிகள், ஒரு புறுவுக்காகத் துலை புகுந்து மேலோகத்தாரும் புகழ்ந்து பாராட்டும் அளவுக்குத் தன் வனப்பு மிக்க உடலை அரிந்த வெற்றி வேந்தன் என்று அவனைப் புகழுகிறார். காந்தன் என்பான் அகத்தியரை வேண்டிக் காவிரியாற்றைப் பெற்றான் என்று மணிமேகலை கூறுகின்றது. முசுகுந்தன் இந்திரனை வேண்டி மெய்க்காவல் பூதமொன்றைப் பெற்றான். அதுவே நாளங்காடி வீதியில் இருந்து நாட்பலி பெற்றது. தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்ற வீரத்தால் மேம்பட்ட சோழன், வானத்தில் அசைந்து கொண்டிருந்த மதிலை அழித்தான் என்று இலக்கியங்கள் புகழ்கின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழாவைத் தொடங்கி வைத்து, அதனை இருபத்தெட்டு நாட்கள் நாட்டுப் பெரு விழாவாகக் கொண்டாடுமாறு நிறுவியவனும் அவனே என்று மணிமேகலையால் தெரியவருகிறது.

திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு முறைதவறாது நெறிநின்று ஆண்ட சோழன் ஒருவன் வரலாறும் இலக்கியங்களில் இடம்பெறுகிறது. அவன் பெயர் மநுநீதிச் சோழன் என்று பெரியபுராணம் அறிவிக்கிறது. அவன் மகனான வீதிவிடங்கன் தேரூர்ந்து செல்லுங்கால் ஓர் இளங்கன்று தேர்க் கால்களில் அகப்பட்டு இறந்தது. அதன் தாயான பசு துயர்மிகுதியால் அரண்மனையின் முன் அமைக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பால் அசைத்தது. பசுவின் துயரைப் போக்க அப்பேரரசன் தன் ஒரே மகன் வீதிவிடங்கனை அதே இடத்தில் கிடத்தி, அவன் மேல் தேரூர்ந்து முறை செய்தான் என்பதனைப் பெரிய புராணத்தால் அறி

கிறேம். அவனே, புதல்வனே ஆழியில் மடித்தோன் என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடு கிறார்; 'மகனே முறை செய்த மன்னவன்' என்று சாத்தனார் மணிமேகலையில் குறிப்பிடுகிறார். பகைவருக்கும் நண்ப ருக்கும் ஒருபடித்தாகவே நீதி வழங்கி, மகனே முறை செய்த ஏழாரன் என்ற பெயர் தாங்கிய சோழ அரசன் ஒருவன் இலங்கையை வென்று ஆண்டதாக மகாவம்சத் தில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. ஏழாரன் என்ற அவ்வரசன் திருவாரூரில் ஆண்ட இவ்வரசனே என்று எண்ண இடமுண்டு.

## கரிகாலன் ஆட்சிக்காலம்

உறையூரில் ஆண்ட இளஞ்சேட் சென்னியின் மகனுகக் கரிகாலன் பிறந்தான். அவன் தாயின்வயிற்றில் இருந்த காலத்திலேயே இளஞ்சேட் சென்னி இறந்ததனால், தாய்வயிற்றில் இருந்தே அவன் தாயம் எய்தினான் என்று இலக்கியங்கள் கூறும். தன் உரிமையை நிலைநாட்டவும், ஆட்சி எல்லையைப் பெரிதாக்கவும் அவன் உள்நாட்டுப் போர்கள் பல நிகழ்த்தினான். எடுத்த முயற்சிகள் அனைத் திலும் வெற்றி பெற்று விளங்கியதால், சோழநாடு முழு வதையும் தன் ஒரு குடைக்கீழ் கொண்டுவருவது அவ னுக்கு எளிதாக இருந்தது.

உறையூரில் அரியணை ஏறிய கரிகாலன் அதனைப் புதுப்பித்தான். உயர்ந்து தோன்றும் பெருமனைகளும் மாளிகைகளும் நிறைந்து விளங்கிய அந்நகரில், கோயில் களையும் ஆங்காங்கே அமைத்தான். அக்காலத்தில் கடற்றுறையாக மட்டும் விளங்கிய புகார் அவன் மனத் தைக் கவர்ந்தது. அதனையும் புதுப்பித்துப் பல்வகைக் கலைகளும் ஒருங்கே காட்சியளிக்கும் காட்சி நகராக

அதனை மாற்றினான். அதன் செல்வநிலையையும் பிற வற்றையும் நோக்கி, அதுவே சோழநாட்டின் கோநகராக இருத்தற்கு ஏற்புடையது எனக் கருதி, அந்தச் சிறப்பை அதற்கே வழங்கினான். இளங்கோவடிகளும், சீத்தலைச் சாத்தனாரும் சிறப்பித்துக்கூறும் பூம்புகாரின் அழகுக்கும், மேம்பாட்டிற்கும், நாகரிக நிலைக்கும் கரிகாலனே காரண மாக இருந்தான் எனலாம்.

## கரிகாலனின் போர்ச் செயல்கள்

வெண்ணிப் பறந்தலையில் கரிகாலன் நடத்திய போர் தமிழகம் அதுவரை கண்டிராத ஒரு பெரும் போராய் இருந்தது. எதிரே நின்று போரிட்ட முடியரசராகிய சேர பாண்டியரையும், பதினொரு சிற்றரசரையும் அவன் வென்றான். அதன் பின்னர், வாகைப் பறந்தலையில் ஒன்பது சிற்றரசர் தம்முள் கூடி அவனை எதிர்த்தனர். அப்போரிலும் கரிகாலன் வெற்றி வீரனாகத் திகழ்ந்தான். அப்பெரு வெற்றிகள் அவனுக்குப் பெரும் புகழ் விளைத் தன. அதன் பின்னர் உள்நாட்டில் போரிட வேண்டிய தேவை அவனுக்கு எழவில்லை. அருவாளர், ஒளியர், பொதுவர், இருங்கோவேளிர் என்போர் அவனுக்கு அடங்கி அவன் ஆணை ஏற்று, ஆங்காங்கே தத்தம் குறுநிலங் களை ஆண்டனர். அவன் தமிழகத்தின் புறத்தே சென்று போரிட்ட காலத்தில் அவனுக்குப் படைத் தலைவர்களாக வும் அவர்களே பணியாற்றினர். சேர பாண்டியர் அவன் தலைமையை ஏற்றுத் தம் நாட்டை ஆண்டு வரலாயினர்.

உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டிய கரிகாலன் வடதிசை நோக்கிப் படை நடத்திச் சென்று, எதிர்ப்பட்ட மன்னரையெல்லாம் வென்று, இமயத்தில் புலியையும், அதனருகே கயலையும், வில்லையும் எழுதி மீண்டான். வட

நாட்டரசர் தத்தம் நாட்டுக் கலைப் பொருள்களை அவனுக்குக் கையுறையாக வழங்கி அவனைப் பணிந்தனர். பின்னர், ஈழநாட்டின் மேல் படையெடுத்துச் சென்று அதனை வென்று தன் படைத் தலைவன் ஒருவனை அந்நாட்டை ஆளுமாறு வைத்து, ஐம்பதினாயிரம் ஈழவரைச் சிறைப்பிடித்துச் சோணாட்டுக்குக் கொணர்ந்தான்.

### வளநாடாக்கிய செயல்

எட்டுத் திக்கும் வெற்றிபெற்றுத் திகழ்ந்த கரிகாலன், சோழ நாட்டில் செல்வ வளத்தையும், நல்லமைதியையும் நிலைபெறச் செய்வதில் தன் எஞ்சிய நாட்களைக் கழித்தான். சிறைப் பிடித்துக் கொணர்ந்த ஈழவரைக் கொண்டு காவிரிக்குக் கரையமைத்து, ஆங்காங்கே அணைகளும் கட்டினான். இருமருங்கும் வாழ்ந்த மக்களுக்குப் பேரழிவு செய்து அச்சமூட்டிப் பெருக்கெடுத்து ஓடிக் கடலில் பயனற்று விழுந்த காவிரி மக்களுக்கு வாழ்வளிக்கும் நல்யாறாக மாற்றப்பட்டது. உழவருக்கு அளவாக நீர் ஈந்து, பயிர்த்தொழிலுக்குப் பயன்பட்டு, உணவு விளைத்து வளஞ் சுரந்தது. புலவர், ‘செவிலித் தாய் என்ன ஓம்பும் தீம்புனற் கன்னி’ என அதனை வாயாரப் புகழ்வாராயினர்.

ஆற்றின் இருமருங்கும் இருந்த செறிந்த காடுகளையெல்லாம் அழித்து, வளங்கொழிக்கும் வயல்களாக்கினான். குளங்களை ஆங்காங்கே தோண்டி, காவிரி நீரால் அவற்றைப் பெருக்கினான். எங்குப் பார்த்தாலும் வாய்க்காலும் குளமுமாகக் காட்சியளித்துச் சோழ நாடு நீர் நாடாகத் திகழ்ந்தது. அதனால் சோழநாடு, புனல்நாடு, வளநாடு என்று மேன்மக்களால் போற்றப்பட்டது; கரிகாலன் பெருவளத்தான் என்று புகழப்பட்டான்.

கரிகாலன் காலத்தில் உப்புக் காய்ச்சுதல் முதல் விளையாட்டுப் பொருட்கள் செய்தல் ஈருக அமைந்திருந்த பற்பல கைத்தொழில்களும் அரசியல் ஆதரவு பெற்றுச் சிறந்து விளங்கின. அதனுல், உள்நாட்டு வாணிகமும், வெளிநாட்டு வாணிகமும் சிறப்புற்று ஓங்கின. செல்வம் பெருகியதால் பெருஞ் செல்வர்களின் ஆதரவுபெற்றுக் கலைகள் வளர்ந்தன. எங்கும் கலையரங்கங்களாகவும், பெருவிழாக்களாகவும் இன்பவாழ்வு களிநடம் புரிந்தது. பற்பல சமயக் கொள்கைகளும், தத்துவ உணர்வுகளும் மக்களின் மனத்தில் இடம் பெற்றுப் புத்துணர்வுகளைப் பிறப்பித்தன.

### மாவண்கிள்ளியின் ஆட்சிக்காலம்

கரிகாற்பெருவளத்தான் காலத்துச் செழிப்பும் செல்வப் பெருக்கும் சோழநாட்டு மக்கள் மனத்தில் தத்துவ உணர்வையும், கலைமனநிலையையும் இன்ப விழைவையும் தோற்றுவித்தன. பண்டுதொட்டு மக்களால் பேணிவரப் பட்ட பல பழைய மரபுகள் ஆதரவிழந்தன. சமய நிறுவனங்களும், கலை நிலையங்களும் பேராதரவு பெற்றுத் திகழ்ந்தன. வாழ்க்கை அடிப்படையில் அமைந்த அரசியல் நீதி, சமய அடிப்படைக்கும் கலை அடிப் படைக்கும் ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டது. சமயப் பெரியோரும், கலைவல்லாரும் நாட்டில் உயர் இடமும், உயர் மதிப்பும் பெற்று வாழ்ந்தனர்.

கரிகாலனுக்குப் பின்னர் இரண்டாந் தலைமுறையில் அரியணை ஏறிப் பூம்புகாரின் மன்னனுகத் திகழ்ந்தான் மாவண்கிள்ளி. அவன் ஆட்சிக் காலத்தில் சமுதாய வாழ்வின் போக்கில் மாற்றங்கள் பல கருக் கொண்டன. அதனுல், எழுந்த கொள்கை மோதல்களும், உரிமை

மோதல்களும், கடமைப் பிறழ்வுகளும் பலப்பல. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை யாத்துச் சாத்தனுர் முன்னர் அரங்கேற்றியதற்கும், சாத்தனுர் மணிமேகலையைப் பாடி இளங்கோவடிகள் முன்னர் அரங்கேற்றியதற்கும் அக்காலத்துச் சமுதாய வாழ்வும் நம்பிக்கைகளும் நிலைக்களன்களாயின.

## கலைநிலை

வளமிக்க பூம்புகாரில் கலைகள்பல முகிழ்த்தன. நுண்கலைகளை வளர்த்த நுண்ணறிவினர் செல்வர்களால் போற்றி ஆதரிக்கப்பட்டனர். அச் செல்வச் சூழ்நிலையில் கலையை வளர்ப்பதற்கென்று தனித்தனி இனத்தவர் தோன்றினர். கலை நுட்பம் மெல்லியலார்க்கு இயல்பாயமைவது ஆதலின் கலைஞருட் பலர் பெண்பாலராகவே விளங்கினர். நாளடைவில், காவிரிப்பூம்பட்டினத்தில் கலைக்கென்று ஒரு பெண்ணினம் தோன்றிற்று; அதுவே கணிகையர் குலமாகும். அவர்கள் நாட்டியக்கலையில் இணையற்று விளங்கினர். வேத்தியல் பொதுவியல் என்னும் இருவகை நாட்டியங்களுக்கும் உறுதுணையான கலைகள் அனைத்தையும் அவர்கள் கற்றுத் துறைபோயினர். அவ்வாறு அவர்களால் பேணிக் கற்கப்பட்ட இருபத்தாறு கலைகள் பற்றிச் சீத்தலைச் சாத்தனுர் உரைக்கின்ருர்.

கலையை வளர்த்த கணிகையர் பதியிலாராகவும் வாழ்ந்தனர். அவர்கள் வளர்த்த நாட்டியக்கலையைப் பாராட்டி அரசன் சிறப்புப் பட்டங்கள் வழங்கி அரச மரியாதை செய்தான். அக்காலச் சமுதாயத்தில் நிலவிய கலை நாட்டமும் இன்பப் பேற்றின் விழைவும் சமுதாயத்தில் அவர்களுக்கு ஒரு தனி இடத்தை நல்கின. பொருள் நலம் மிகப்படைத்த செல்வத் தோன்றல்கள் கலைநோக்குடன் வாழ்வது அக்கால நாகரிகமாகக் கருதப்பட்டது.

கலைவல்ல கணிகையர் தம் கலையறிவால் அவர் மனத்தைக் கவர்ந்து, அவர்களிடமிருந்து பொருள் பெறுவதைக் குறிக்கோளாகக்கொண்டு வாழ்ந்தனர். சமுதாயம் பேணிக் காத்த ஒழுக்கநெறி அவர்களால் பேணப்படவில்லை. தாம் வாழ்ந்த வாழ்க்கை முறையே உயரிய ஒழுக்கமாகும் என்ற தம்மேம்பாட்டுணர்வும் அவர்களிடத்தில் காணப்பட்டது. அறவோர்க்கு அளித்தும், அந்தணரை ஓம்பியும், துறவோருக்கு உணவு முதலியன கொடுத்து வழிபட்டும், விருந்தினரைப் பேணியும் இல் இறவாது வாழ்ந்த குடும்ப பெண்களை, அவர்கள் தங்களிலும் கீழானவர்கள் என்று கருதும் மனப்பான்மை அவர்களிடம் இருந்தது.

# 4. கலையரசி

## கணிகையர் குலம்

முத்தமிழ் முனிவரான அகத்தியர் ஒருகால் இந்திர னது பேரவைக்குச் சென்றார். அவரை வரவேற்க ஊர்வசி நடனம் இந்திரனால் ஒழுங்குசெய்யப்பட்டது. ஊர்வசி அவண் நின்ற இந்திரன் சிறுவனான சயந்தன் மேற் கொண்ட காதற் குறிப்பினளாக நடனமாடி, அக்கலையின் தெய்வீகத் தன்மையை இகழ்ந்தாள். அக்குற்றத்திற்காக அவள் அகத்திய முனிவரின் சாபத்திற்கு இலக்கானாள். அதன் விளைவால் அவள் பூம்புகாரில் கலைமகளாகப் பிறந்து நாடகக் கலையை வளர்த்து வரலானாள். அவள் வழிவந் தவளே மாதவி. சயந்தன் பெற்ற சாபத்தால்தான், மண்மீது மூங்கிலாக நின்றான். இது கணிகையர் குலத் தைச் சிறப்பிக்க எழுந்த கதை.

## ஆடல், பாடல், அழகு

ஆடல், பாடல், அழகு என்னும் முத்திறக் கலைகளுக் கும் சோழ அரசர் பேராதரவு தந்தனர். அம்மூன்றன் திறனும் ஒருங்கே நாடகக் கலையில் புலப்படும். அக் கலையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது விளங்குவோருக்கு அரசன் தலைக்கோல் தானம் அளிப்பதோடு, ஆயிரத்து எண் கழஞ்சுப் பொன்னும், பச்சைமாலை ஒன்றும் பரிசிலாக வழங்குவதும் அக்கால மரபாக இருந்தது. அரசன் செய்யும் அச்சிறப்பைப் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு புகார்நகர்க் கணிகையர் அனைவரும் தத்தம் மகளிருக்கு நாடகக் கலையறிவு புகட்டுவது வழக்கமாக இருந்தது. மாதவிக்கும் அக்குறிக்கோளோடு பயிற்சி

யளிக்கப்பட்டது. அவள் ஐந்தாம் ஆண்டு முதல் நாடகக் கலையைக் கற்கத் தொடங்கித் தன் பன்னிரண்டாம் ஆண்டில் அக்கலையில் சிறந்து விளங்கினாள்.

### நாடக அரங்கம்

நல்லிடம் ஒன்றைத் தெரிந்து, இருபத்து நான்கு விரலளவு கொண்ட [1]கோலால், எண்கோல் நீளமும், எழுகோல் அகலமும், ஒருகோல் உயரமும் அளவாக மேடையொன்று அமைப்பர். அம்மேடையில் நான்கு கோல் உயரத்தில் உத்தரப் பலகையும், இருவாயில்களும் தூண்களும் அமைப்பர்.

அவ்வாறு அமைத்துக்கொள்ளப்பட்ட மேடையை நன்கு ஒப்பனை செய்து, நால்வகைப் பூதங்களின் படங்களையும் எழுதிவைப்பர். தூண்களின் நிழல் மேடையில் விழாதவாறு நிலை விளக்குகளையும் ஆங்காங்கே அமைப்பர். ஒருமுகமாகவும், பொருமுகமாகவும் செயல்படுமாறு திரைகளை முகப்பில் அமைப்பர். அழகிய ஓவியங்கள் எழுதப்பட்ட மேற்கட்டிகளைப் பொருத்தி, அவற்றிலிருந்து முத்து மாலைகளையும், மலர்மாலைகளையுந் தொங்கவிடுவர். அவ்வாறு இலக்கண மரபு பிறழாது அமைக்கப்பட்ட அரங்குகளிலேதான் நாட்டியங்கள் நிகழும்.

### தலைக்கோல்

சோழனோடு போரிட்டுத் தோற்றோடிய மாற்றரசர்தம் கொற்றக் குடைகளின் காம்புகளாலேயே நாட்டியக் கலைப் பரிசான தலைக்கோலை அமைப்பர். காம்பின் கணுக்கள் தோறும் நவமணிகளைப் பதித்துவைத்து, இடைவெளி தோன்றாமல் தங்கத் தகட்டால் அதனை மூடி அழகு செய்வர். அத் தலைக்கோலை அகத்திய முனிவரால் சபிக்கப்பட்ட சயந்தனாக நிறுமிப்பர். அதற்குப் பின்னர், வழிபாடியற்றி, பொற்குடத்துப் புண்ணிய நன்னீரால்

1. ஒருகோல் = 28 அங்குல நீளம் (7 டெசி மீ. 11 செ. மீ.) என்பர்.

நீராட்டி, மாலையணிந்து, நன்னாளில் பட்டத்து யானை கையில் அதனை வாழ்த்திக் கொடுப்பர்; அது தலைக் கோலைத் தாங்கி நகர்வலம் வரும். ஆடலாசிரியன், இசை யாசிரியன், நாட்டியக் கலைஞன், தண்ணுமை ஆசிரியன், குழலாசிரியன், யாழாசிரியன் என்பாரும், ஐம்பெருங் குழு வினரும், எண்பேராயத்தாரும் தொடர்ந்து வர, அரசன் தேரூர்ந்து நகர்வலம் வந்து யானையின் கையிலிருந்து தலைக்கோலை வாங்கி நட்டுவன் கையிற் கொடுப்பான். நட்டுவன் தலைக்கோலுடன் அரங்கத்துட் புகுந்து, அதனை அரங்கத்தில் ஒரு தனியிடத்தில் அவைக்கெதிரே வைப் பான். அரசரும் ஏனையோரும் அவையில் தத்தமக்குரிய இருக்கைகளில் அமர்வர். அதன் பின்னர், முறையாக நாடகம் பயின்ற கலைமகளிர் தாம் கற்ற நாட்டியக் கலையை அரங்கேற்றுவர்.

## அரங்கேற்றம்

இலக்கண மரபு பிறழாது இயற்றப்பட்ட அரங்கத் தில், இசைக்கருவி வல்லார் தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்திருக்க மாதவி தன் வலக்காலை முன்னே வைத்து மிதித்தேறி, வலப் பக்கத்துத் தூணைச் சார்ந்து நின்றாள். நாட்டியத்திற்குத் துணைசெய்யும் ஆடல்பாடல் வல்ல மகளிர் இடப்பக்கத்துத் தூணைச் சார்ந்து நின்றனர். கடவுள் வாழ்த்துப் பாணியுடன் தொடங்கி, யாழ், குழல், மத்தளம் முதலிய இசைக் கருவிகள் ஒத்திசைக்க, நாட்டிய நன்னூல் முறையில் இறையும் வழுவாமல் நாட்டியத்தை ஆடிமுடித்தாள் மாதவி. அவள் ஆடிய கோலம் பொற்பூங் கொடி ஒன்று ஆடல் பாடல் வல்ல தாய், அசைந்தாடியதேபோல் அமைந்து, அவையில் வீற் றிருந்த அரசன் உள்ளிட்ட அனைவரையும் இன்பத்தோடு வியப்பில் ஆழ்த்திற்று.

தானம்

அவையின்கண் வீற்றிருந்த மன்னனும், ஆசிரியன்மாரும், அரசியற் சுற்றத்தாரும், பேரவைப் பெருமக்களும் மாதவியின் ஒப்பில்லா ஆடல் கண்டு உவகை மீதூரப் பெற்றனர். அரசனும் அவள் தகுதிக்கேற்ப இலையாலும் பூவாலும் செய்யப்பட்ட பச்சை மாலையுடன் தலைக்கோல் தானமும், ஆயிரத்தெண் கழஞ்சுப் பொன்னும் தலைவரிசையாக வழங்கிச் சிறப்புச் செய்தான்.

ஒருவழக்கம்

நாட்டியக்கலை அரங்கேற்றத்தில் அரங்கேற்றிய கலைமாதிற்கு அரசன் அளித்த மாலைக்கு விலை இது என்று அறுதியிட்டு, அதனையே அவளுக்குப் பரிசத் தொகையாகக் கூறுவர். அப்பரிசத் தொகையை அவளுக்குக் கொடுக்கவல்ல நகர நம்பிக்கு, நாட்டியம் அரங்கேற்றிய அக்கணிகையை உரிமைப்படுத்துவது அக்காலத்தில் இருந்த ஒரு வழக்கம். அம்முறைப்படியே, சோழன் மாதவிக்களித்த பச்சை மாலைக்கு ஆயிரத்தெண் கழஞ்சுப் பொன் விலையாக அறுதியிடப்பட்டது. அஃது ஒரு கூனி கையில் கொடுக்கப்பட்டு நகர நம்பியர் வழங்கும் நடுத் தெருவில் விலை கூறப்பட்டது.

கோவலன்

புகார் நகரில் பெருஞ் செல்வனுகத் திகழ்ந்த கோவலன் என்ற வாணிகன் அப் பச்சை மாலையின் விலையான அவ்வாயிரத்தெண் கழஞ்சுப் பொன்னையும் பரிசமாகக் கொடுத்தான். அதனுல் அவன் மாதவியை அடையும் உரிமை பெற்றுப் பச்சைமாலையுடன் கூனியைத் தொடர்ந்து சென்று, மாதவி மடந்தையின் மனையையடைந்தான்.

# 5. கலை கலைக்காக

## கோவலன் யார்?

காவிரிப்பூம்பட்டினத்தில் பெருங்குடி வணிகர் செல்வ மிகுதியில் அரசர்க்கும் இணையாக வாழ்ந்தனர். அவருள், தரைவணிகரின் தலைவனாகத் திகழ்ந்தவன் மாசாத்துவான். அவன் மகனே, மாதவியின் பச்சை மாலையை வாங்கி மாதவியின் மனையடைந்த கோவலனாவான். பல ஆண்டு களுக்கு முன்னரே, அவனுக்கும் கடல் வணிகர் தலைவனான மாநாய்கன் மகள் கண்ணகிக்கும் பெரியோரால் திருமணம் சிறப்பாக நடத்தி வைக்கப்பட்டது. அவர்கள் தனிமனை புகுந்து, அக்காலத்தில் த்னி வாழ்க்கை நடத்தி வந்தனர்.

கோவலன் மண்ணுலகுஞ் சிறிது என எண்ணுமாறு பெரும் புகழ் படைத்தவன். மங்கையர்தம் ஆயத்துள் அவனைச் செவ்வேள் என்று புகழ்ந்து பாராட்டிக் கூறும் அளவுக்கு அவன் ஆண்மையும், அழகும் படைத்தவன். அவன் மனைவியான கண்ணகியை அருந்ததி யன்ன கற்பினள் என்று ஆயத்து மங்கையர் பாராட்டினர். அவர்கள் இருவரும் ஒருங்கிருப்பின், ஞாயிறும் திங்களும் ஒருங்கே அமைந்திருப்பதே போன்று கண்கொள்ளாக் காட்சியாய் அமையும்.

கண்ணகியின் அழகைக் கண்டு இன்புற்றுப்பரவச மாகி, அவள் இன்னுரை கேட்க விழைந்து, அவளைப் பலபடப் பாராட்டினாலும், இன்னுரை தாரா இயல்பினள் அவள். மனையறம் புகுந்த அவர்கள் வாழ்க்கையில், கண்ணகி அறவோர்க்கு அளித்து, அந்தணர் ஓம்பி, விருந்

தெதிர் கொண்டு வாழ்ந்த வாழ்வே தனிச்சிறப்புடைய தாக விளங்கிற்று. இவ்வாறு இல்வாழ்க்கையில் அவர் களுக்குச் சில ஆண்டுகள் கழிந்தன.

மாதவியின் கலை ஆற்றல்

நாட்டு வழக்கம் இடந்தர, பெருஞ் செல்வம் வாய்ப் பளிக்க, கலைவல் கோவலன் மனையற எல்லையைக் கடந்து மாதவியின் மனையை யடைந்தான். முன்னர் கண்ணகி யின் அழகைப் பருகி, அவள் கொஞ்சுதலுக்கு ஏங்கிக் கிடந்தான் கோவலன். பின்னர், 'இயல் ஐந்தும், பண் நான்கும், பண் நின்ற கூத்துப் பதினொன்றும்' போக்கி நின்ற மாதவியின் மேல் விடுதல் அறியா விருப்புற்று, அவள் மனையிலேயே உறைவானாயினன். மேலோர் வகுத் துத் தந்த இல்வாழ்க்கையை முற்றிலும் மறந்தான்.

வரையறை இல்லா வாழ்க்கை

ஆடல், பாடல், அழகின் நுட்பம் எல்லாம் அறிந்து அவற்றைக் கலையாக வளர்த்த மாதவியின் அழகு ஒப்ப னையும், ஆடல்பாடல்களும் கோவலனது மதியை மயக்கின. உரிமையால் அவள் ஈந்த கலவியும் புலவியும், அவனை இன்பக்கடலில் திளைக்கச் செய்தன. எனினும், அவன் மனம் அவளிடமும் ஒன்றி நிலைத்து நிற்கவில்லை. மனையைத் துறந்து மாதவியை யடைந்த அவன்,மாதவியை நீங்கி நாளங்காடி வீதிகளில், எள்ளி நகையாடித் திரிந்த கூட்டத்தாரோடும், பாணர், பரத்தரோடும் கூடிக்குலாவித் திரியும் வரையறை இல்லாத வாழ்வையும் விரும்பிக் கடைப்பிடித்தான்,

இந்திரவிழா

ஆண்டு தோறும் காவிரிப்பூம் பட்டினத்தில் இருபத் தெட்டு நாட்கள் இந்திரனுக்கு விழா எடுக்கப்பட்டது.

அவ் விழா நாட்களில் தேவரெல்லாம் அவண் வந்து உறைந்து விழாக் காண்பர் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்தது. அதனால், இந்திர விழா நிகழ்ந்த இருபத்தெட்டு நாட்களும், நகர் முழுதும் ஒப்பனை பெற்று விளங்கும். வீதிகள் தோறும் பூரணக் கும்பங்களும், பொற்பாலிகைகளும், பாவை விளக்குகளும் காட்சியளிக்கும். குலைக்கமுகு, குலை வாழை, கரும்பு, வஞ்சி, பூங்கொடி ஆகியவற்றைக் கட்டவேண்டிய இடமெல்லாம் கட்டிவைப்பர். தூண்களிலெல்லாம் முத்துமாலைகளைத் தொங்கவிடுவர். தெருக்களிலும் மன்றங்களிலும் புது மணற் பரப்புவர். மாடங்களிலும், வாயில்களிலும், துகிற் கொடிகளைக் கட்டுவர். கோயில்கள் தோறும் கடவுளர்க்குப் பூசனைகள் தொடர்ந்து நடக்கும். பந்தர்களிலும், மன்றங்களிலும் அறச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும். சமய வாதிகள் பட்டிமன்றங்களில் ஏறி வாதம்புரிவர். அந்நாட்களில், பகையுஞ் செற்றமுந் தவிர்த்து மக்கள் அருள்வழி நின்று ஒழுகுவர்.

கலைவல்லார் அனைவரும் தத்தமக்குக் கைவந்த கலைகளை நிகழ்த்திக் காட்டி மக்களை மகிழ்விப்பர். ஐயாண்டு கற்ற நாட்டியத்தை அரங்கேற்றி அரசனால் சிறப்புப் பெற்ற மாதவி மடந்தையின் நாட்டியத்தைக் காண மக்களே யல்லாமல், வித்தியாதரரும் விரைந்து வந்து குழுமினர். மாதவியும் விழா மேடையில் ஏறினாள். மாயோன் பாணி முதல் பல்வகைப் பாணிகளையும் பாடி, தாள இயல்புகள் நன்கு புரியுமாறு பல்வகை இயக்கங்களோடு அவிநய விளக்கங்களுடன், ஏற்ற இசைகளையும் ஆங்காங்கே பாடி, விதி முறை பிறழாது ஆடினாள். அவள் ஆடிய கொடுகொட்டியாடல், பாண்டரங்கூத்து, அல்லியத் தொகுதி, மல்லாடல், துடிக்கூத்து, குடைக்

கூத்து, பேடியாடல், மரக்காலாடல், பாவைக்கூத்து, கடையம் என்ற பதினொறு ஆடல்களையும் தேவரும், வித்தியாதரரும், மக்களும் ஒருங்கே கண்டு மகிழ்வெய்தினர்; கோவலனும் பரவசமடைந்தான். ஆட்டம் முடிந்து தன்னுணர்வெய்திய கோவலனின் மனத்தில் சினமும், மாதவியின் மேல் வெறுப்பும் முகிழ்த்தன. மாதவியின் ஆடலையும், பாடலையும், அழகையும் கண்டு கழிப்பது தனது தனியுரிமை என்று அவன் எண்ணியிருந்தான். அவை பிறரையும் மகிழ்விப்பதை அவன் உள்ளம் ஒப்பவில்லை. கலை கலைக்காக என்ற பண்பட்ட கொள்கை அவன் மனத்தில் உருக்கொள்ளவில்லை.

# 6. உரிமை மோதல்

## கற்புடைப் பெண்டிர் உரிமை

பழந்தமிழ் சமுதாயத்தில் 'ஆடவர்க்கு உயிரெனத் தகுவது வினையே, மனைவாழ் பெண்டிற்கு உயிரெனத் தகுவார் ஆடவரே' என்ற கொள்கை நிலைபெற்றிருந்தது. திருவள்ளுவர்,

> 'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

என்று கூறி, மனைக்கு விளக்கமாய்த் திகழும் மங்கையருக்குத் தம்மைக் கற்பு நெறி பிறழாது காத்துக்கொள்ளுதல், தமது கணவரை ஏற்ற பெற்றி பேணல், தம் குடும்பத்தின் மேல் நின்ற புகழைக் காத்தல் என்ற மூன்றையும் வழித்துணை விதிகளாகத் தந்தார். கற்பு நெறியினின்று வழுவாமல் தன்னைக் காத்துக் கொள்ளுதலிலும், தன் கணவனுக்கு வேண்டுவன அனைத்தும் அளித்துப் பேணுவதிலும், தன் குடிமேல் நிற்கும் புகழ்ச் சொல்லைக் காத்து அதற்கு இழுக்கு வாராது ஒழுகுவதிலும் கண்ணுங்கருத்துமாக இருப்பதைப் பழந்தமிழ் இல்வாழ் மங்கை குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தாள். அந் நிலையில், அவளுக்குக் கொழுநனே தெய்வமாதற் குரியன் எனச் சமுதாயம் விதித்தது. மனைத்தக்க மாண்புடையராக விளங்கும் மங்கையோ, அவள் கணவன் பொருள்கள் அனைத்திலும் மேம்பட்ட பொருளாகி, அவன் உடைமைகளுள் சீரிய உடைமையாகக் கருதப்பட்டாள். தனது உயிரான கணவனின் உள்ளத்தில் உறையும் உரிமை தனக்கே உரியது என்று கற்புடைப் பெண்டிர் கருதினர்.

பிறவிதோறும் அவனைத் தனதாக்குவதிலேயே அவர்கள் பெரு நாட்டங் கொண்டிருந்தனர். கணவனின் உள்ளத்தை நுணுக்கமாக ஆராய்ந்து, அன்பால் அதனைப் பிணித்துத் தன் உரிமையை நிலைநாட்டுவதை ஒரு தனிப் பண்பாக அவர்கள் வளர்த்தனர். திருவள்ளுவ நாயனார் கூறும் புலவி நுணுக்கங்கள் அப்பண்பாடு விளைத்த ஒப்பற்ற இலக்கியமாகும்.

### ஆடவர் உரிமை

வினையை உயிரெனக் கொண்ட ஆடவருக்கு அனைத்தும் உடைமையாயினவாதலின், அவற்றை ஆளுதல் அவர்தம் தனி உரிமை எனச் சமுதாயத்தால் விதிக்கப் பட்டது. வினை ஆற்றும் ஆடவர் தம் தனி உரிமையைப் பேணாது பெண்ணேவல் மேற்கொண்டு ஒழுகுதல் கடியப் பட்டது. எனினும், பேராண்மையும், முதறிவும் பெற்ற பேரரசரும் தம் தேவியரை உசாவியே எத்தகைய பெரும் வினைக்கும் முடிவுகட்டினர். செங்குட்டுவன் தன் தேவியிடம், 'கணவன் உயிரைத்தொடர்ந்து வானுலகம் அடைந்த பாண்டிமா தேவியோ, கணவன் கள்வன் அல்லன் என்று நிறுவி, மதுரையைத் தீக்கிரையாக்கியும் சினந்தீராளாகச் செயிருடன் நம் நாட்டிற்கு வந்த கண்ணகியோ, உன் பாராட்டிற்கு உரியார் யார்? என்று உசாவினான். தேவி, 'பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' என மொழிந்ததை ஆணையாக ஏற்று, வரலாற்றுச் சிறப்புமிக்க வட நாட்டுச் செலவைத் தொடங்கிக் கண்ணகிக்குக் கல்லெடுத்துக் கோயில் கொண்டான். இது உரிமையையும் கடமையையும் உணர்ந்து கடமை ஆற்றிய பண்டைத் தமிழ் ஆடவரின் ஒழுகலாற்றிற்கு அமைந்த ஒரு சான்றாக விளங்குகின்றது.

**கோவலனின் உரிமை**

காவிரிப்பூம்பட்டினத்தின் செல்வ நிலையும், ஆங்கு நிலைபெற்றிருந்த கணிகையர் சமுதாய அமைப்பும் ஆடவர் வாழ்க்கை ஒழுங்கு முறையில் ஒரு திருப்பத்தை உண்டாக்கின. வினையே ஆடவருக்கு உயிர் என்ற நிலை மாறுவதற்கு அவை காரணமாயின. அளவிலாச் செல்வமாகிய, 'குலந்தருவான் பொருட் குன்றம்' பெற்ற கோவலன் அனைய ஆடவர் வினையை உயிரென மதியாராயினர். இன்ப வாழ்வில் திளைத்து, எள்ளி நகையாடும் கூட்டத்தோடும் பாணரோடும் ஊர் சுற்றிப் பரத்தரோடும் திரிந்த ஆடவர் அக்காலத்தில் மிகுதியாக இருந்தனர். அக்காலத்தில் புகாரில் நிலைபெற்றிருந்த கணிகையர் சமுதாயம் ஆடவர் வாழ்க்கைக் குறிக்கோளைப் பெரிதும் மாற்றியமைத்தது எனலாம். கலையின் பெயரால் பதியிலாராக வாழ்ந்து ஆடவரை நாடிக் கவர்ந்து பெரும் பொருள் பெற்று அச்சமுதாயம் நிலைபெற்றிருந்தது. அரசனும் அவர்கள் ஒழுக்க நிலையைக் கடியானாகித் தலைக்கோல் தானம் முதலியன கொடுத்து ஆதரவு நல்கினான். கணிகைக்குப் பரிசமிட்டு இல்வாழ் ஆடவர் தமக்கு உரிமைப் படுத்துவது உலகறியச் செய்த ஒழுகலாறாயிற்று. கற்பு வாழ்க்கைக்குப் பழந்தமிழர் இட்டுக் காத்த நாகரிகவேலி தகர்த்தெறியப்பட்டது. கோவலன் போன்ற இல்வாழ் ஆடவர் நாணமோ, சிறுமை யுணர்வோ சிறிதுமில்லாமல் பரிசத்தொகையைக் கொடுத்துப் பச்சை மாலையை வாங்கிக் கூனியுடன் மாதவி மனைக்குச் செல்வது ஆடவரது தனியுரிமையும் இயல்பும் என்ற நிலை புகார் நகரில் அக்காலத்தில் நிலவியது. அதனால் ஆடவரின் தனி உரிமை முனைப்பில் செயலாற்றிய கோவலனது மனத்தில் தன்னலம் ஒன்றே நிலைபெற்றி

ருந்ததேயன்றிக் கடமை உணர்வோ, சமுதாய நலமோ, கண்ணகி மாதவியர் நலமோ பற்றிய உணர்வு இல்லா தொழிந்தன. காவேரியின் கணவனுக்குக் கங்கையைப் புணர்தல் தனிஉரிமை எனப் புகார் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்நிலையிலும், தம் கணவன்மாரைப் புலந்துரையாது ஒழிதலே மங்கை மாதரின் பெருங் கற்பாகும் என்று ஆடவரால் விதிக்கப்பட்டது.

கணிகையர் உரிமை

ஆடல் பாடல் அழகு என்பனவற்றின் நுட்பம் அறிந்து அவற்றின் திறம் எல்லாம் தெரியக்காட்டி வரிசையும் பாராட்டும் பெறுதல் புகார்க் கணிகையரின் தனி உரிமையாக இருந்தது. சோழ அரசியற் பெரு விழாவான இந்திரவிழாவில், சிறப்பிடம் பெற்று விளங்கிய நாட்டியத்திற்கு உரியர் என்பதாற் பிறந்த பெருமிதமும் அவர்க்கு உண்டு. தலைக்கோல் சிறப்பு முதலிய அரசமரியாதை அப்பெருமிதத்தின் முடிமணியாய் விளங்கிற்று. சோழ நாட்டுக் கற்பு மகளிர்க்குக் கிட்டாத அம்மரபுரிமையைப் பெற்ற கணிகையர், ஏனைக் கற்புடைப் பெண்டிரினும் தங்களை உயர்ந்தவராகவே மதிப்பிட்டனர்.

கணவன் விதிக்கும் கட்டுப்பாடோ, அவன் இறந்து பட்டால் அவனுடன் இறப்பதும், எரிபுகுவதும், நோம் பியற்றி உடலை வருத்துவதுமாகிய துன்பநிலைகள் அவர் களுக்கு இல்லை. செல்வம் மிக்க ஆடவரைக் கூடிவாழ்வ தும், செல்வம் வறந்தால் அவரை விடுத்து மற்றைச் செல்வரை ஏற்பதும் அவர்க்குப் பழியெனப்பபடாமல் தனி உரிமையாகவேபட்டது. அவர்கள் பழியெனக் கொண்டது ஒன்றே ஒன்று. தம் அழகையும், ஆடலையும், பாடலையும்

உலகோர்க்குக் காட்டிப் புகழும் பொருளும் விளக்கும் தனியுரிமையை நழுவ விடுவதே அந்தப் பழிச் செயலாகும்.

## மாதவியின் உரிமை

கணிகையர் வளர்த்த கலை நுட்பங்களையெல்லாம் நன்கு கற்கும் வாய்ப்பு மாதவிக்குக் கிட்டிற்று. அவள், நாடக மகளிர் கற்றற்கு உரிய ஓவிய நூல்களையும், இயற்றமிழ் நூல்களையும், நாடக, இசை நூல்களையும் முறையாகக் கற்று மேம்பட்டு விளங்கினாள். அதனாற் பெற்ற தன்மதிப்பும் நிறையுள்ளமும் அவள் குறைவறப் பெற்றிருந்தாள். அரசு அளித்த தலைக்கோற் சிறப்பும் பிறவும் அவள் தன்மையை மேலும் உயர்த்தின. அந் நிலையில், தன் சமுதாயத்தின் குறைவு நிறைவுகள் அவளுக்குப் புலனாயின. கலையுணர்வாலும், சிறப்புக்களா லும், நுண்ணறிவாலும் தோன்றிய தலைமையுணர்வால் ஒரு சீர்திருத்தஞ் செய்ய அவள் முற்பட்டாள். அவள் பிறந்த சமுதாயமோ, அதனை ஏமாளித்தனம் என்றும், கீழ்மை யுடையதென்றும் கருதிற்று. ஏனைச் சமுதாயம் அதனைத் தீதெனக் கடிந்து ஒதுக்கியது. தன்னையடைந்த கோவ லனைத் தன் கணவனாகக் கொண்டு கற்பு வாழ்க்கை நடத்துவது தன் தனி உரிமையும் கடமையுமாகும் எனக் கொண்டாள். அது அவள் மேற்கொண்ட சீர்திருத்த ஒழுகலாறு. தனி முறையில் தனக்கெனத் தனி ஒழுங் கமைத்துக் கலை வாழ்க்கையையும் கற்பு வாழ்க்கையையும் மாசறப் பிணித்தாள் மாதவி. ஆனால் கோவலன் மன நிலையை உணர்ந்தானில்லை.

## மகவுரிமை

மாதவியைத் தன் மனைவி என்று ஏற்றுக் கொள்ளாது தன் இன்பவாழ்வுக்கும் கலை நுகர்வுக்கும் உரிய ஒரு கணிகை என்றே கோவலன் எண்ணினான். 'சலம் புணர் கொள்கைச் சலதி'யரான கணிகையரின் தன்மையே அவளுக்கும் உரிய தன்மையாக இருந்தது என்று அவன் எண்ணினானேயன்றி, அவள் சிறப்பியல்பையும்

புரட்சி மனப்போக்கையும் சிறிதும் உணர்ந்தானில்லை. மாதவியோ, கோவலனைத் தன் கணவனுகவே வரித்து வாழ்ந்தாள்.

கற்பு வாழ்வின் பொற்புறு அணிகலன் மகப்பேறே யாம். வள்ளுவர் பெருந்தகையும், மனைவாழ்க்கை மங்கல முடையதேனும், அதன் அணியெனத் திகழ்வது மக்கட்பேறே யாகும் என்று கூறி அதன் சிறப்பைப் புலப் படுத்தியுள்ளார். மாதவி மங்கல வாழ்க்கையின் நன்கலனுக மணிமேகலையைப் பெற்றெடுத்தாள். கோவலன் மாதவியை மனைவியெனக் கொள்ளாவிடினும், மணிமேகலையைத் தன் மகளென மனமொத்து ஏற்றுக்கொண்டான். ஆடிமுதிர்ந்த முது கணிகையர் 'மாதவி மகளுக்கு நாமமிடுக' என அவனிடம் கேட்ட பொழுது, உடைகலப்பட்டுத் துன்புற்ற தன் முன்னேன் ஒருவனுக்கு உதவிய மணிமேகலா தெய்வத்தின் பெயரை நினைத்து, அதனையே தன் மகளுக்குப் பெயராக வைக்குமாறு கேட்டுக் கொண்டான். கணிகையர் ஆயிரவர் கூடி மணிமேகலை என்று பெயர் வைத்து வாழ்த்தினர். அஞ்ஞான்று தன் குடி மரபுக்கும் செல்வ நிலைக்கும் ஏற்ப, மாதவியுந் தானுமாகப் பரிசிலாக மக்களுக்குப் பொன்னும் பொருளும் வாரி வாரி வழங்கினர். மாதவியைத் தன் மனைவி என்ற நிலையில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், தன் மகளின் தாய் என்ற நிலையில் மாதவி கோவலன் மனத்தில் ஒரு தனி இடத்தைப் பெற்ருள். அது விலைமகள் உரிமையிலும் உயர்ந்ததாயும், மனைவியின் உரிமையை எட்டிப் பிடிக்க முடியாததாகவும் அமைந்த ஓர் இடைப்பட்ட நிலைக்கு உரிய ஒரு தனி உரிமையாக இருந்தது.

**ஊடல் உரிமை**

ஊடுதல் கணவன் மனைவியர்தம் தனியுரிமை. இன்பப் பேறு ஒன்றே அதன் நிலைக்களன். ஏனை வெறுப்பும்

முனிவும் உடலில் அடங்கா. ஊடல் இன்ப வாழ்வின் உப்பாகும். உப்பில்லா உணவையும், உப்புமிக்க உணவையும் உண்ணுவாரில்லை. திருவள்ளுவரும், ஊடல் உணவுக்கு உப்பு அமைவதுபோல் வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்றும், உப்பு மிகுந்தால் உணவைக் கெடுத்துவிடுவதே போல், புலவி சிறிது மிகுமாயின் வாழ்க்கையைக் கெடுத்து வீணாக்கிவிடும் என்றும் அதன் இலக்கணத்தை உவமையால் விளக்கிக் கூறினர்.

மாதவியின் அழகும், ஆடலும், பாடலும் இந்திர விழாவின் நாட்டிய அரங்கில் அனைவருக்கும் பெருவிருந்தாய் அமைந்தது கோவலன் மனத்தில் வெறுப்புணர்ச்சியைப் பிறப்பித்தது. அவ்வெறுப்பை மாதவி ஊடலென்று தவருக உணர்ந்தாள். கோவலன் உவகையுறுமாறு தன் கூந்தலை ஒப்பனை செய்து, பலவித அணிகலன்களையும் அணிந்து, நீல திறப் பூஞ்சேலையை யுடுத்து, அதன் மேல் முப்பத்திரு முத்து வடங்களாலான மேகலையையும் அணிந்து தன்னை அழகு செய்தாள். இதுவரை கோவலனைப் பரவசமாக்கி அவனுக்குப் பேருவப்பு நல்கிய இவ்வகை ஒப்பனைகளும் பிறவும் அப்பொழுது ஆற்றலிழந்து அவன் ஊடலைத் தீர்க்க உதவாதது அவளுக்கு பெருவியப்பாகவே இருந்தது.

கலைபல கற்றும், சிறப்புக்கள் பல பெற்றும், சீரிய கொள்கை நலம் அமையப் பெற்றும் உலகியலை உள்ளவாறே அறியும் வாய்ப்பைப் பெற்றிலள் மாதவி. கோவலன் அடிமனத்தின் உணர்வை அறியமுடியாது அவள் தவித்தாள். இஃதோர் துமை, இஃதுயாதன் வினையோ எனவே தன் மனத்துள் மயங்கினுள்.

# 7. கடற்கரைக் காட்சி

## கடல் விளையாட்டு

சித்திரை முழுமதியன்று காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழாவுக்காகக் கொடியெடுப்பர். இருபத்தெட்டு நாட்கள் விழாக் கொண்டாடிய பின்னர் கொடி இறக்குவர். கொடி இறங்கிய மறுநாள் முழுமதி யாகு மாதலின் அதனைக் கடல் விளையாட்டு விழாவாகக் கொண்டாடுவர். புகார்த்துறையில் மலைவளமும் கடல்வளமும் மயங்கிக் கிடக்க, கலன்கள் பல நின்று அசைந்துகொண்டிருக்க, எம்மருங்கும் மக்கள் கூட்டம் திரண்டு கூடித் திளைக்கும். அரசிளங் குமரர் தம் உரிமைச் சுற்றத்தோடு விழா அயர்வர் ஒரு பால். பரதகுமார் தம் உரிமைச் சுற்றத்தோடு மற்றொரு பால் விழா அயர்வர். பல்வேறு மகளிர் கூட்டமும், ஆடல் பாடல் மகளிர் தொகுதியும் எங்கும் காணப்படும். நகரத்து மக்கள் ஆங்காங்கே எழினி வளைத்துத் தத்தமக்கு ஏற்புடை மரபில் கடல்விழாக் கொள்வர். மக்கள் ஆரவாரமும் கடலோசையுங் கூட்டிப் பேரோசையாக ஒலிக்கும்.

மகளிர் ஆயமெல்லாம் அன்று கடற்கரைக்குச் செல்வது மரபு. கணிகையர் அனைவரையும் அன்று கடற்கரையிற் காணலாம். மாதவிக்கும் கடல் விளையாட்டைக் காண விருப்பம். கோவலன் ஊடற் கோலத்தையும் வெறுப்பு மனநிலையையும் மாற்றி, இழந்த அமைதியை மீண்டும் பெற அது வாய்ப்பளிக்கு மன்றோ? கோவலனும் இசைவு தந்தான்; வைகுறு விடியலிலே கடற்கரையை நோக்கிப் புறப்பட்டனர். கோவலன் கோவேறு கழுதை

யூர்ந்து சென்றான்; மாதவி தன் தோழியருடன் பல்லக்கிற் சென்றாள். பொழுது விடியுமுன்னரே இருவரும் கடற் கரையை யடைந்தனர்.

எங்கும் விழாமனநிலை காணப்பட்டது. ஆங்காங்கே நகரப் பெருமக்கள் எழினிவளைத்து இனிதிருந்தனர். அம் முறைமைப்படியே எழினியமைக்கக் கோவலனும் மாதவி யும் இடந்தேடினர். கடற்கரையில் தாழம்பூ மணம் கமழ்ந்து நின்ற ஓரிடத்தை அவர்கள் தேர்ந்தனர். அவ் விடத்திற்குத் தாழை இயற்கை வேலியாக அமைந்து விளங்கிற்று. புன்னை தண்ணிழல் தந்து மேல் பரந்து நின்றது. தரையிற் கிடந்த மணலைப் பரப்பிச் சமன் செய்து, சுற்றுச்சூழ ஓவிய எழினியால் வளைத்துக் கொண் டனர். மேற்கட்டி பொருந்திய தந்தக்கால் அமைந்த அமளியை அதன் நடுவணிட்டனர். கோவலனும் மாதவி யும் அதிலமர்ந்து வீற்றிருக்க, ஏவலர் ஆங்காங்கே அவர் தம் ஏவற் குறிப்பு நோக்கி நின்றனர்.

**இசை**

இன்ப துன்பங்களில் பண்டைத் தமிழர் வாழ்வில் இசை சிறப்பிடம் பெற்று விளங்கிற்று. தமிழிசை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று ஏழாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவ் வேழிசைகளின் ஓசைக்கு முறையே வண்டு, கிளி, குதிரை, யானை, குயில், தேன் (வண்டுவகை), ஆடு என்பனவற்றின் குரலை உவமையாகக் கூறுவர். பழந்தமிழர் அவற்றுக்கு ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் எழுத்துக்களைக் குறியாக அமைத்து வழங்கினர். இவ் ஏழு இசைகளும் நிறைந்து விளங்கின் பண் எனப்படும். பண்களிலிருந்து திறங்கள் பிறக்கும்.

யாழ்

இசைத்தமிழுக்கு உரிய இசைக் கருவிகளை ஐந்து வகையாகப் பகுத்தோதுவர். அவை, தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்பன. அக்கருவிகள் அனைத்தினும் தலைசிறந்து விளங்கியது யாழேயாகும். யாழ் ஆதியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என நான்கு வகைப் படும். அவற்றுள், ஆயிரம் நரம்புகளையுடையதாக விளங்கிய ஆதியாழ் கடைச்சங்க காலத்திலேயே வழக்கிறந்ததாயிற்று என்பர். பத்தொன்பது நரம்புகளை யுடையதாகிய மகரயாழும், பதினுன்கு நரம்புகளையுடைய தாகிய சகோடயாழும், ஏழு நரம்புகளையுடையதாகிய செங்கோட்டியாழும் புகார்நகர் இசைவல்லாரின் சீரிய இசைக்கருவிகளாகத் திகழ்ந்தன.

யாழை ஒப்பனை செய்து அழகு பார்ப்பதில் பழந் தமிழர் பேரின்பங்கண்டனர். அதற்குப் பூமாலை முதலியன அணிந்து, ஓவியமெழுதிய போர்வையால் அதனை மூடி வைப்பர். முடத்தாமக் கண்ணியார் என்ற புலவர், நீராட் டப்பட்டு ஒப்பனை செய்யப்பட்டு மணமகள் போல் காட்சி யளித்த ஒரு யாழைக் குறிப்பிடுகின்றுர். யாழிசையை, தம்மை மறந்திருந்து சுவைத்து இன்பங்கண்ட பண்டைப் புலவர் பெருமக்கள் அதன் இசை ஆற்றலைப் பலபடப் பாராட்டியுள்ளனர். வழிப்பறியை வாழ்க்கைத் தொழி லாகக் கொண்ட கொடிய இயல்பினரான திருடரின் மற வுணர்வையும், அருள் உணர்வாக்கும் ஆற்றலுடையது அது என்று ஒரு புலவர் குறிப்பிட்டுள்ளார்.

• கோவலன் யாழிசை வல்லன். யாழிசையின் நுட்பம் அறிந்து, தன்னை மறந்து சுவைத்து இன்புறும் ஓர்

ஒப்பற்ற கலைஞன். மாதவியின் யாழிசைப் புலமை கண்டே, கோவலன் அவள்மேல் விடுதலறியா விருப்புக்கொண் டான் என்பது அமையும். மாதவி விரும்பிக் கேட்டுச் சுவைக்கப் பண்ணின் திறமெல்லாம் இசைத்து இன்புறும் இயல்பும் அவனிடம் இருந்தது.

## ஊடற்கோலத்தை மாற்றுமா?

மறத்தையும் மாற்றி அருளைப் பிறப்பிக்கும் ஆற்ற லுடை யாழிசைக்கு ஊடலை உவகையாக்கும் ஆற்றல் உண்டு என்று மாதவி நம்பினாள். கோவலனின் அடி மனத்தில் அமைந்திருந்த வெறுப்பின் விளைவான ஊடலை யும் இசை நலம் மாற்றிப் பேருவகையாக்குமோ?

அருகில் யாழைத் தாங்கி நின்ற வசந்தமாலையின் கையிலிருந்த யாழை மாதவி தொழுது வாங்கினாள். அவ்யாழ், அழகிய வேலைப்பாடமைந்த போர்வையால் போர்த்தப்பட்டிருந்தது. அதன் கோட்டில் மணங்கமழ் மலர் சூட்டப்பட்டிருந்தது. ஒப்பனை செய்யப்பட்ட மண மகள் போல் அது அழகு பெற்றுத் திகழ்ந்தது. குற்றந் தீர்ந்த அவ்யாழை, எண்வகையாலும் இசைத்துப் பார்த்துப் பண்கூற்றின் குற்றந் தீர்த்தாள் மாதவி. பின்னர் எண் வகை இசைக் கரணங்களாலும் இசை ஓர்த்துக் கோவல னிடம் அதைக் கொடுத்தாள்.

## அவள் நினைத்தது ஒன்று நடந்தது மற்றொன்று

இசை நலம் மிக்கோர் கடைப்பிடித்த நாகரிக முறை ஒன்றிருந்தது. தம்மிலும் இசைக் கலையில் உயர்ந்தோர் இருக்கும் இடங்களில் தாம் விரும்பும் இசைகளைத் தாமே மீட்டிப் பாடாமல், யாழையே அப்பெரியோர்களிடம் கொடுப்பர். அவர்கள் எந்தப் பண்ணைப் பாடுவது ஏற்

புணேடியது என்று கருதுகின்றனரோ அந்தப் பண்ணுக்கு ஏற்ற முறையில் யாழை மீட்டித் திருத்திக் கொடுப்பர். அதன்பின்னர், யாழிசைத்துப் பாடித் தாமும் மகிழ்வர்' பிறரையும் மகிழ்விப்பர். கோவலனிடம் மாதவி அவ்வாறு மீட்டித் திருத்தித் தருமாறு யாழைக் கொடுப்பதும் அவன் விரும்பும் பாணிக்கு ஏற்ப மீட்டித் திருத்திக் கொடுப்பதும் வழக்கமாக இருந்தது. அந்த வழக்கத்தின் படியே, யாழை மீட்டித் திருத்தித் தருமாறு கோவலனிடம் கொடுத்து, 'ஏவலன் பின் பாணி யாது?' என்று வேண்டினுள் மாதவி. இப்போது இதை வாசியுங்கள் என்று யான் வேண்டுகின்றேன் அல்லேன், யான் வாசிப்பதற்குத் தாங்கள் குறிப்பிடும் பண் யாது என்றே யான் அறிய விரும்புகிறேன் என்பதுபட அவ்வாறு வேண்டினுள்.

அவள் நினைத்தபடி நிகழ்ந்திருப்பின் அவள் இசை வன்மையால் கோவலன் மனமாற்றம் அடைந்திருக்கவும் கூடும்; ஆனுல், நடந்தது வேறு. கோவலன் தானே யாழிசைத்துப் பாட முற்பட்டான். அவன் மனத்தில் இருந்த வெறுப்பு அவன் பாட்டில் வெளிப்பட்டது. மாதவியின் எண்ணம் நிறைவேருது வீணுயிற்று.

# 8. பிரிவு

## கோவலன் பாடிய வரிப்பாட்டுக்கள்

வரிப்பாட்டு என்பது பண்ணும், திறனும், பாணியும், மயங்கப் பாடும் இசைப்பாட்டே ஆகும். அது தெய்வத்தைச் சுட்டிப் பாடுவதாகவும் அமையலாம், மக்களை வாழ்த்திப் பாடுவதாகவும் அமையலாம். பாடும் புலவன் இருந்து பாடும் நிலத்திற்குரிய கருப்பொருள் உரிப்பொருள்களையும் அப் பாடல்களுள் அமைத்துப் பாடுவது மரபு.

கானல் நிலத்திலிருந்து பாடத் தொடங்கியதால் கோவலன் காவிரியாற்றைப் பற்றியும், புகார் நகர் பற்றியும், கானல் வாழ்க்கை பற்றியும் அமைந்த ஆற்றுவரி, சார்த்துவரி, கானல்வரி முதலிய வரிப் பாட்டுக்களைப் பாடினான்.

## காவிரி பற்றிய பாட்டுக்கள்

சோழ நாட்டிற்கு வாழ்வளிக்கும் காவிரியை முதலில் கோவலன் புகழ்ந்து பாடினான். அதனோடு காவிரி நாடனான சோழனையும் ஒருங்கு வைத்துப் புகழ்ந்தான். வடதிசை நோக்கிச் சென்று வெற்றி வீரனாகக் கங்கையைத் தழுவினான்; தென்திசை நோக்கிச் சென்று தன் வீர மேம்பாட்டால் கன்னியையும் அவன் தழுவினான். அவன் மங்கையான காவிரி அதற்காக அவனோடு பிணக்கிக் கொள்ளவில்லை. தன் கணவன் செங்கோல் தவறாது ஆளுகின்றான், என்ற எக்களிப்பால் அவள் மன நிறைவுடன் விளங்கினாள். இருமருங்கும் பற்பல ஆரவார

ஓசைகள் கேட்க அவள் இனிது நடந்து சென்றாள். அதற்குக் காரணம் என்ன? கணவன் குற்றங் காணாமல் அவன் குணங்கண்டு மகிழ்ந்திருத்தலே மங்கையருக்குப் பெருங் கற்பாகும் என்று அவள் அறிந்திருந்ததே அதற் குக் காரணம். அவள் வாழ்க. இவை காவிரி பற்றிய கோவலனது பாட்டுக்களில் அமைந்த கருத்துக்கள்.

புகார் பற்றியவை

புகார் நகரைப் புகழ்ந்துரைக்க எண்ணிய கோவலன் அந்நகர மக்களின் வஞ்சமில்லா வாழ்க்கையை உடன் வைத்துப் புகழ்ந்து பாடினான். தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் ஒருவன் குறிப்பிட்ட காலத்தில் வர வில்லை. காலந் தாழ்த்தி வந்த அத்தலைவனை வேறொரு வனாகக் கருதி, அவனிடமே தலைவனின் கொடுமையையும் தலைவியின் வஞ்சமறியா நிலைமையையும் தோழி கூறுவ தாகப் பொருளமைந்த பாட்டுக்களைப் பாடினான் கோவலன்.

புகார் மக்கள் வஞ்ச மற்றவர்கள்; எதையும் நம்புவர். புகார்த் தலைவி தன் தலைவன் சொல்வதை அப்படியே நம் பும் தன்மையள்; அவள் வஞ்சனை யறியா மடமகள். சங்கும் முத்தும் வீசும் ஒளியை நிலவின் வொளி என்று நம்பிப் புகார்க் கடற்கரையில் ஆம்பற் பூக்கள் மலர்ந்துவிடும். அவ்வாறாயின், புகார்த்தலைவி தன் தலைவன் கூறிய பொய்ம்மொழிகளை மெய்ம்மொழிகள் என நம்பித் தன் நலனிழந்ததில் வியப்பென்ன இருக்கிறது? புகார்க் கானலில் வாழ் வண்டுகள் தாமரை மலரையும் மாதர் முகத்தையும் வேறு பிரித்தறிய முடியாதனவாய் மயங்கும். புகார்த் தலைவி தலைவனது வஞ்சமனத்தை அறியாது மயங்கியதில் வியப்பென்ன இருக்கிறது? கடற்கரையில் புகார்ப் பெண்கள் வீடுகட்டி விளையாடுவார்கள். கடல்

அலை எழுந்து வந்து அந்த வீடுகளை அழிக்கும். அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தம் மாலைகளால் அவற்றை அடிப்பார்கள். அதனால், கடற்கரை எங்கும் பூக்கள் சிதறிக்கிடக்கும். புகார்மக்கள் அப்பூக்களைப் பெண்களின் கண்கள் என்று எண்ணி அவற்றை மிதித்து மேற் செல்லாது அவ்விடத்தே நின்று விடுவர். அத்தகைய வஞ்சமறியாப் புகார் நகரத் தலைவியை ஒரு தலைவன் ஏமாற்றினான் என்று தலைவனிடத்திலேயே தோழி கூறினாள்.

## தலைவன் தோழனிடம் தலைவியைப் பாராட்டுதல்

தலைவன் தன் தோழனிடம் தலைவியைப் பாராட்டிக் கூறியதாகவும் கோவலன் பாடினான். தலைவன் தான் கடற்கரையில் கண்டு பழகிய தலைவியின் அழகைப் பல படப் புகழ்ந்து தன் தோழனிடம் பலபடப் பாராட்டிக் கூறியதாக அப்பாட்டுக்கள் அமைந்திருந்தன. தலைவியின் குணவியல்பு பற்றியும் அவள்மேல் தான் கொண்ட மையல் பற்றியும் விரித்துரைத்து, இறுதியில் அவளை நினைத்து அவள் அழகையும் இயல்பையும் ஒருங்கே புகழ்வதாக அமையும் பற்பல வருணனைகளைத் தனக்குத்தானே சொல்லிக் கோவலன் இன்புற்றான்.

## ஊழ்வினை

இப்பாட்டுக்களின் கருத்துக்கள் நெய்தல் நில உரிப்பொருளாகவும், அதன் நிமித்தமாகவும் அமைந்து கானல் வரிக்கு இன்றியமையாதனவாகக் கோவலனின் பாட்டுக்களில் இடம் பெற்றன. ஊடல் கோலத்தோடு இருந்த கோவலன் அவ்வாறு பாடியது மாதவியின் மனத்தில் வேறு கருத்தைப் புலப்படுத்திற்று. தன் மனத்தில் வேறு ஒரு பெண்ணைக் கருதியே கோவலன் அவ்வாறு

பாடினுன் என்று அவள் எண்ணினுள். காவிரியோடும், புகாரோடும் வைத்து அவன் பாடிய மங்கைமாதர் பெருங் கற்பும் புகார் மகளிரின் வஞ்சமில்லாத் தன்மையும் தன்னைக் குறை சுட்டுவதற்காகவே கோவலனுல் பாடப் பட்டன என்ற எண்ணம் அவளுக்கு உண்டாயிற்று. அவள் பேருவகை கொண்டவள் போல் வெளிக்குக் காட்டிப் புழுங்கிய மனத்தளாய் யாழை அவன் கையிலி ருந்து வாங்கிப் பாடத் தொடங்கினுள். கோவலனை அன் றிப் பிற ஆடவரை மனத்தாலுங் கருதாக் கற்புடைய மங்கையான மாதவி, தானும் கோவலன் பாடிய முறைப் படியே பாடத் தொடங்கினுள். அவள் பாடல்கள் வேருெரு காதலனை நினைத்துப் பாடும் பாட்டுக்களாக அமைந்தன. அது ஊழ்வினையின் செயலன்ருே?

காவிரி பற்றியவை

கோவலன் பாடிய முறைப்படியே மாதவியும் பாடினுள். அவள் காவிரியாற்றைப் பற்றிப் பாடிய பாட்டுக்கள், கோவன் காவிரி பற்றிக் குறிப்பிட்ட கருத் துக்களுக்கு எதிர் நியாயம் காட்டி மறுத்துரைப்பது போல் அமைந்திருந்தன. அழகிய பெண் ஒருத்தி தன்னை ஒப்பனை செய்துகொண்டு எக்களிப்புடன் நடந்து செல் கிறது போல் காவிரியாறு இனிது நடக்கின்றது. அவ் வாறு அது நடந்து செல்வதற்கு அவள் கணவனுன சோழ மன்னனது நீதி தவருத செங்கோன்மையே காரணமாகும். காவிரி நங்கை தன் இருமருங்கும் பூஞ்சோலைகளில் மயில்கள் ஆடவும், குயில்கள் இசை பாடவும், மிதந்து செல்லும் அழகிய மாலைகள் அசையவும் களிப்புற்று நடக் கின்ருள். அதற்கு அவள் கணவனின் வேற்படையின் வெற்றியேதான் காரணம். இவ்வாறு மாதவி பாடினுள்.

### புகார் பற்றியவை

மாதவியின் புகார் பற்றிய வரிப்பாட்டுக்களும், புகார் மகளிரின் வஞ்சமறியா வாழ்வைப் புலப்படுத்திப் பெண்ணினத்தைப் புகழ்ந்துரைப்பனவாகவே அமைந்திருந்தன. புகார்க்கானலில் புன்னையின்மேல் அன்னப்பறவை அமைர்ந்திருக்கும் காட்சியைக் கண்டு, அதனை முழுநிலா எனப் பிறழ உணர்ந்து ஆம்பல் பூக்கும். புகார் மகளிரும் அவ்வாறே வஞ்சமிலாத நெஞ்சத்தவராக வாழ்ந்தனர். கடற்கரையில் விளையாடும் புகார்க் குழந்தைகள் தம் விளையாட்டிடத்தை அலை அழிப்பதால் கடலைக் கைமண்ணால் தூர்க்க முயல்வர். புகார் மக்களும் அவ்வாறே வஞ்சம் சிறிதும் இல்லாத வெள்ளை மனம் படைத்தவராக இருந்தனர். இவை மாதவி புகார் பற்றிப் பாடியவை.

### ஏமாற்றிய தலைவனைப் பற்றியவை

தன்னை மறந்த தலைவனை நினைத்துப் பாடியனவாக அமைந்த பாடல்கள் தலைவிக்குத் தலைவன்மேல் உள்ள உண்மைக் காதலைப் புலப்படுத்துவனவாக அமைந்திருந்தன. தலைவி கடலையும், கடற்கரையிற் கண்ட கருப்பொருட்களையும் விளித்து, அவையும் தலைவனோடு சேர்ந்து கொண்டு தன்னோடு உறவாடித் தனக்குக் கேடு விளைப்பனவாக உள்ளன என்று தலைவி அவைகளின் மேல் குறை கூறுகின்றாள். அப் பாடல்களும் அவற்றை அடுத்து மாதவி பாடிய பாட்டுக்களும், தலைவி மனம் நொந்து புலம்பும் அரற்றல்களாகவே வெளிப்பட்டன. இறுதியில், தன்னைத் தன் காதலன் மறந்தாலும் தான் அவனை மறப்பதில்லை என்று பாடி மாதவி முடித்தாள்.

### பிரிவு

தன் அண்மையில் தன் அணைப்பில் இருந்துகொண்டே, வேறு ஒரு காதலனை நினைத்து மாதவி அவ்வாறு பாடி

ளுள் என்று கோவலன் எண்ணினுன். அவ்வெண்ணம் அவனுக்கு மாதவிமேல் இருந்த வெறுப்பைப் பன்மடங்கு அதிகப்படுத்திற்று. அதனுல், அவன் மாதவியின் காதல் வாழ்க்கையே வெறும் நடிப்பேயாகும் என்று முடிவு செய்தான். வெறுப்பு மிகுதியால், தான் அவளை அணைத்திருந்த கையை நெகிழ்த்து, 'பொழுது கழிந்தது செல்வோம்' என்று கூறிக்கொண்டே கோவலன் தன் ஏவலரோடு அவ்விடம் விட்டு அகன்ருன்.

கோவலன் முழு வெறுப்பில் பிரிந்து செல்கின்ருன் என்று அப்பொழுது மாதவி அறிந்துகொள்ள வில்லை. அதனை அறிந்திருந்தால் அவனைத் தடுத்து நிறுத்த முற்பட்டிருப்பாள். முன் இருந்த ஊடல் கடல் விளையாட்டாலும், கடற்காட்சியாலும் தணிந்திலது என்றே அவள் எண்ணினுள். அதனுல், அவள் கோவலன் வருவான் என்ற நம்பிக்கை தளராதவளாய்த் தனியளாய் வையமேறித் தன் மனையடைந்தாள்.

# 9. இன்ப மடல்

## இளவேனில்

கோவலனைப் பிரிந்த மாதவி ஆற்றாமை மீதூரப் பெற்று வருத்தத்தில் ஆழ்ந்தாள். அக்காலம் இளவேனிற் காலம் ஆதலின், அவள் மனத்துயர் மேன்மேலும் கிளர்ந்து எழுவதாயிற்று. இளவேனிலின்கண் மாலைக் காலத்து வெண்ணிலாவின் எழில்மிகு காட்சியும், இளந் தென்றலும், சோலைகளில் குயில்கள் கூவும் ஓசையும் பன்மலர் கமழும் நறுமணமும் பிறவும் மக்களுக்கு இன்ப எழுச்சியைத் தருவன. அவற்றோடு, யாழிசையுங் கூடி னால் பேரின்பமாகத் திகழ்ந்து பேரின்பம் விளைக்கும் என் பதை நாம் அறிவோம். திருநாவுக்கரசு நாயனார் இள வேனில் தரும் இன்பத்தை இறைவன் திருவடிகள் தரும் பேரின்பத்தோடு ஒப்பிட்டுப் பாடி இன்புற்றார். அவ் வின்பக்காடு மாதவிக்குத் துன்பத்தை மிகுவிக்கும் இயம தூதுவர் குழாமாக அமைந்தன.

## முயற்சி

தன் காதலனாகிய கோவலன் எப்படியும் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை மாதவி உள்ளத்தில் உறுதி யாக இடம் பெற்றிருந்தது. அவ்வெண்ணம் அவனுக்கு ஓர் இன்பத் திருமுகம் எழுதி விடுக்குமாறு அவளைத் தூண்டிற்று. இன்ப எழுச்சி மேலோங்கி இருந்த அந் நிலையில் அவள் தேர்ந்தெடுத்த எழுது கருவிகள் புதுமை யாக அமைந்திருந்தன. எழுதும் ஏடாக அவள் பயன் படுத்தியது த்ாழை மலரின் வெண் தோடாகும். எழுது கோலாக அவள் கொண்டது பித்திகை அரும்பு. நகங்

களுக்கு அழகூட்டாநின்ற செம்பஞ்சுக் குழம்பு அவ ளுக்கு மையாகப் பயன்பட்டது. அவள் தன் அகத் தெழுந்த உணர்ச்சிகளை ஒரு கவிதை மடலாக எழுதி முடித்தாள். தன் அன்புக்குரிய சேடி வசந்தமாலையிடம் அம்மடலைக் கொடுத்துத் தன் காதலன் எங்கிருந்தாலும் அவனிடம் அதைச் சேர்த்து, அவனை அழைத்துவருமாறு பணித்தாள். வசந்தமாலை பூம்புகார் வீதிகளிலெல்லாந் தேடி அலைந்து, இறுதியில் கடைவீதியில் கோவலனைக் கண்டு, பணிவுடன் அதனை அவனிடம் நீட்டினுள்.

மடல்

மாதவி எழுதிய மடல் இளங்கோவடிகளால் இவ் வாறு எழுதிக்காட்டப்படுகிறது:

'மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்;
அந்திப் போதத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வன் செவ்வியன் அல்லன்;
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படினும்,
தணந்த மாக்கள் தம்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூது அன்று, இஃது அறிந்தீமின்'

இத்திரு முகந்தாங்கிய செய்தி, பிரிவால் மாதவியின் மனத்தில் எழுந்த வேட்கையைப் புலப்படுத்தும் ஒரு தீஞ்சொற் கவிதையாகவே விளங்குகின்றது.

உலகில் வாழும் எண்ணில் கோடி உயிரினங்களின் மேலும் இப்பொழுது ஆட்சி நடத்துகிறவன் இளவேனில் இளவரசாளனை மன்மதனே யாவான். உயிர்களைத் தத்தம் துணைகளோடு கூட்டுவித்து இன்பமடையச் செய்வதே அவன் ஆட்சியின் கொள்கை. இவ் இளவே

னிற் காலத்து அந்தியாகிய கருங்களிற்றின் பிடர்மிசைத் தோன்றும் மூன்றும் பிறைச் சந்திரனும் அவனுக்கு உறு துணையாகவே செயல்படுகிறுன். அவனுங்கூட நம் போன்று பிரிந்து வாழுவோருக்கு நன்மை செய்யும் நேரியோனுக விளங்க வில்லை. ஓரிடத்திலே வாழும் தலைவன் தலைவியர் சிறிது பொழுது பிரிய நேரிடினும், நெடுந் தொலைவு சென்ற தலைவன், குறித்த காலத்தில் வாராது தணந்தாலும் மன்மதன் தன் நறும் பூக்களாகிய கணைகளைத் தொடுத்து உயிர்களை வருத்தும் இயல்பினன். இது பண்டுதொட்டு நடந்துவரும் உலகறி உண்மை; இதில் புதுமை ஏதும் இல்லை. இதனை அறிந்து கொள்வீர் களாக. இவையே அத்திருமடல் தாங்கிய செய்திகள்.

இச்செய்திகளைக் கோவலன் படித்திருப்பின் அவன் மனம் எத்தகைய நிலையை அடைந்திருக்குமோ நாம் அறியோம். மாதவி மேல் அவன் கொண்டிருந்த வெறுப் பால் அம்மடலை அவன் தொடவும் விரும்பவில்லை.

## வரிக் கூத்து

மாதவி கணிகையர் குலத்திற் பிறந்தவள் ஆதலின், அவளிடம் குலமகளிர்க்கு உரிய கற்புவாழ்க்கை கால் கொள்ளாது போயிற்று என்றே கோவலன் தவறுக முடிவு செய்திருந்தான். அத்தவறுன முடிவு மாதவியின் காதல் ஒழுக்கங்களுக் கெல்லாம் ஒவ்வோர் தவறு சுட்டிக் காட்டும் நிலைக்கு அவன் மனத்தை மாற்றிற்று. நாடகத் தமிழில் வரிக்கூத்து என்பது ஒன்று. அவரவர் பிறந்த குடிக்கும், நிலத்திற்கும் உரிய ஒழுக்கங்களை உண்மை போல் நடித்துக் காட்டுவதே அக் கூத்தின் இயல்பாகும். பொதுவாக, நாடகக் கலைஞருக்கு அக் கூத்து கைவந்த கலை. மாதவி தன் காதலனுன கோவலன்

மேல் கொண்ட உண்மைக் காதலால் அவன்மேல் பேரன்பு கொண்டு கற்பு மனைவியாக ஒழுகினுள். அவள் ஒழுக்கங்கள் அனைத்தையும், அவளுக்குக் கைவந்த நடிப்புக் கலையின் கூறுகள் என்றே கோவலன் எண்ணினுன். வசந்தமாலை மாதவியின் திருமுகத்தை நீட்டிய அளவின், கோவலன் மனத்தில் அவ்வெண்ணங்களே தோன்றின. ஆதலின், அவன் அவளிடம், கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள்வரி என்னும் எண்வகை வரிக்கூத்துக்களையே தன்னிடம் மாதவி நடித்துக் காட்டினுள் என்றும், தான் அதனை உண்மை வாழ்வாகக் கருதி ஏமாந்து விட்டதாகவும், அக்கடிதமும் ஒரு நாடகமே என்றும்கூறி அதனை மறுத்து விட்டான்.

வசந்தமாலை நொந்த நெஞ்சினளாய் மாதவியை அடைந்து நிகழ்ந்ததைக் கூறினுள். கோவலன் மடலை மறுத்தமை அறிந்து மாதவி மனம் நைந்தாளெனினும், நம்பிக்கை இழந்தாளில்லை. 'மாலை வாரார் ஆயினும் ... காலை காண்குவம்' என்று கூறித் துன்புறு நெஞ்சினளாய் மலரமளி குறுகாது வதிந்தாள்.

# 10. மதுரைச் செலவு

## கண்ணகி நல்லாள்

மாதவி விடுத்த முடங்கலை ஏற்க மறுத்துக் கண்ணகியை நாடிச் சென்றான் கோவலன். கண்ணகி நல்லாள் பழந்தமிழ் மகளிர் மேற்கொண்டொழுகிய முல்லைக் கற்புக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவள். கணவன் பிரிவு அவள் நெஞ்சில் சுடுதீயாக உறுத்திற்று என்பது உண்மையே. எனினும், அவள் வளர்ந்த சமு தாயம் கற்பித்த பண்பாட்டால் கடமை அடிப்படையில் அமைந்த திண்ணிய நெஞ்சுரத்தை அவள் பெற்றிருந் தாள். கோவலனைப் பெற்ற தாய் தந்தையருக்குப் பணி விடை செய்வதிலும், விருந்தெதிர் கோடலிலும், அற வோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல் முதலிய அறங் களிலும் நிலைத்து நின்று ஒழுகித் தன் பிரிவுத்துன்பத்தை ஓராற்றான் ஆற்றி வாழ்ந்தாள்.

பல ஆண்டுகளாகக் கண்ணகியை மறந்து வாழ்ந்த கோவலனுக்கு, மாதவியின் மேல் உண்டான வெறுப்பு மறுபடியும் கண்ணகியைப் பற்றிய எண்ணத்தைத் தோற்றுவித்தது. நாணங் கொண்ட நெஞ்சினனாய்க் கோவலன் தன் வீட்டையடைந்தான். கணவன் தீதினைச் சுட்டியுரையா உயர் பண்பினள் கண்ணகி யாதலின், இன்முகங்காட்டிக் கோவலனை வரவேற்று, உளமகிழ் கொள்கையில் மலர்ந்த முகத்தளாய் அவன் முன் நின்றாள். தன் தவற்றை நினைத்து வருந்தும் மன நிலையில் இருந்த கோவலன், தன் தவற்றுக் கெல்லாம் மாதவியே காரணம் எனக்கூறி, அவளைப் பழித்துரைக்க முற்பட்டான். அந்

நிலையிலும் அவனுக்குத் தவறுகளாகக் காணப்பட்டவை இரண்டே. ஒன்று வஞ்சம் புணர் கொள்கையளான மாதவியோடு பழகியது; மற்றது தன் முன்னோர் ஈட்டி வைத்த பெரும்பொருளை அழித்து வறுமைநிலையடைந்தது. எனவே,

> 'சலம்புணர் கொள்கைச் சலதியோ(டு) ஆடிக்
> குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைத்த
> இலம்பாடு நாணுத்தரும் எமக்கு.'

என்று நொந்து கூறுவானாயினன். கணிகையர் குலத்துப் பிறந்தும் குலமகளிர் ஒழுக்கமாகிய கற்புநெறியில் சிறிதும் வழுவாது வாழ்ந்த மாதவியை, வஞ்சஞ் செய் தலையே கொள்கையாகக் கொண்ட வஞ்சகி (சலதி) என்றான். அவளோடு வாழ்ந்து மணிமேகலையைப் பெற்று, பரிசில் பல நல்கிப் பல்லாண்டுகள் வாழ்ந்த வாழ்வை முறையற்ற வெற்றாட்டம் என்றான். அவளோடு வாழ்ந்த வாழ்க்கையே தன் முதாதையர் தேடிவைத்த பெரும் பொருள் அழிந்ததற்குக் காரணம் என்றான். தீவலம் வந்து மணந்த தன் மனைவியைத் துறந்து வாழ்ந்தமை யும், பெற்றோருக்குக் கடமை தவறிய செயலும் அந்நிலை யிலும் அவனுக்கு நாணந் தந்தனவாக அவனாற் குறிப் பிடப்படவில்லை.

மாதவியைப் பற்றியும், பொருட்கேடு பற்றியும் அவன் கூறியனவற்றைக் கண்ணகி தன் மனத்தில் எடுத்துக்கொள்ள வில்லை.

> எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கண்
> பழிகாணேன் கண்ட விடத்து.

என்று வள்ளுவர் படைத்த தலைவி தன் முன்னிலைப்பட்ட தன் கணவனின் பழியைக் காணாளாயினள். கண்ணகிக்

கும் கோவலனைக் கண்ட அளவில் அவன் கொடுமைகள் அனைத்தும் மறைந்தன; துளிர்த்துவிடும் இன்பவாழ்வு முன்னின்றது. அந்நிலையில் மாதவி பற்றியும் பொருட் கேடு பற்றியும் எண்ணுவதற்கு அவள் மனம் இடந் தருமோ? கணவனின் இன்ப வாழ்க்கைக்குத் துணைசெய் யத் தன் காற்சிலம்புகள் பயன்படுமாயின், அதுவே தனக் குப் பேரின்பமாகும் எனத் துணிந்தாள். எனவே, அவள் கடமை உணர்வினளாய், நகை முகங்காட்டி, 'சிலம்புள கொண்ம்' என்று வேண்டினாள். கண்ணகியின் இச் சீரிய பண்பாடு கோவலனுக்குப் பெண்மையின் தன்மையை முதன் முதலாகப் புலப்படுத்திற்று; அதனால், கடமை உணர்வு அவன் உள்ளத்தில் அரும்பிற்று.

### தன்னிலை உணர்வு

கோவலன் பல ஆண்டுகளாக மறந்து வாழ்ந்த பல நல்லொழுக்கங்கள் கண்ணகியின் நன்னயச் செயலால் அவன் மனத்தில் மீண்டும் வந்தேறின. முதன் முதலில் அவன் மனத்தில் அரும்பிய எண்ணம் அவர் மரபினர் மேற்கொண்ட தொழிலாகிய பொருளீட்டல் பற்றியதே யாகும். அந்த அளவில் கோவலன் கடமை உணர்வு பெற்றான். புகாரை விடுத்து மதுரைக்குச் சென்று சிலம்பை விற்று அதன் விலைப்பொருளால் இழந்த பொருளை மீண்டும் தேட அவன் உறுதி பூண்டான். அத னைக் கண்ணகியும் ஏற்று, அவன் எழுக என எழுந்து அவன்பின் சென்றாள். இரண்டாவதாக அரும்பிய எண் ணம் கடவுள் வழிபாடு பற்றியது. அவ்வாய்ப்பை இழந்த கண்ணகிக்கும் அது பெருமகிழ்ச்சியைத் தந்து நின்றது. புகார் நகரில் இருந்த திருக்கோயில்கள் தோறுஞ் சென்று அவர்கள் இருவரும் வழிபட்டனர். மூன்றாவதாக, அவன்

மனத்தில் அறநெறிகளை ஏற்கும் நிலை முகிழ்த்தது. வழித்துணையாக மூச்செல்லாம் அறமே உரைக்கும் சமணத் துறவியை ஏற்றான். அவர் உரைத்த அறங்கள் அனைத்தையும் விடாது மனங்கொண்டான்.

பெற்றோருக்கும் மாதவி மணிமேகலையருக்கும் ஆற்றாது தவிர்ந்த கடமை பற்றிய உணர்வு அவன் மனத்தில் அந்நிலையிலும் அரும்பவில்லை. புகார் நகரில் வாழ்ந்தால் தனக்கு இழிவு உண்டாகும் என்ற எண்ணத்தால் அவர்கள் மேல் தனக்கிருந்த கடமையை மறந்தான் போலும்.

புகார்நிலை

கோவலன் கண்ணகியுடன் புறம் போந்த செய்தியைக் கேட்டு அவன் பெற்றோர் அருமணி இழந்த நாகம் போன்றனர். அவன் சுற்றத்தார் அனைவரும் துயர்க் கடலில் மூழ்கினர். புகார் நகர் இராமனை இழந்த அயோத்தியானது. மாசாத்துவான் இட்ட ஆணையை ஏற்று, ஏவலர் யாங்கணுஞ் சென்று கோவலனைக் கொணரப் புறப்பட்டனர்.

மாதவி அச் செய்தியைக் கேள்வியுற்றுக் கலக்கமடைந்தாள். காதலன் வருவான் என்ற அவளது மனக்கோட்டை தகர்ந்து பொடியாயிற்று. வெளிறிய மேனியளாய் ஆறாத துன்பமீதூரப் பெற்று, இடைநிலைத் தமைந்த பள்ளியுள் உணர்வற்று வீழ்ந்துகிடந்தாள்.

## 11. கையறு நெஞ்சத்துக் கடிதம்

### கோசிகன் ஆறுதல் மொழிகள்

கோவலன் மாதவியர் வாழ்க்கையில் இல்வாழ்க்கைப் பண்புகள் நிறைந்திருந்தன. அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல் முதலியன அவர்களால் மேற்கொள்ளப் பட்டன. கோவலன் மதுரைக்குச் சென்ற செய்தியை அறிந்த நன்மக்கள் பலர் மாதவியின் வீட்டிற்குச் சென்று அவளுக்கு ஆறுதல் சொன்னார்கள். அவர்களால் ஆதரிக்கப்பட்ட மக்கள், அவர்கள் வாழ்க்கையில் உண்டான அப்பிரிவைத் தங்கள் வாழ்க்கையில் உண்டான ஓரிழப் பாகவே கருதினர். மணிமேகலையின் பிறந்தநாளைக் கொண்டாடிய அக்காலை அள்ளி வழங்கிய பரிசிற் பொருளைப் பெற்ற மக்கள் திரளில் கோசிகனும் ஒருவன். அவன் விரைந்து சென்று மாதவிக்கு ஆறுதல் மொழி கூறினான். அவனைக் கண்ட மாதவிக்கு, அவன் வழி கோவலனுக்கு ஒரு முடங்கல் விடுக்கலாம் என்ற எண்ணம் பிறந்தது.

### முடங்கல்

கோவலன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றதற்கும், குல ஒழுக்கத்திற்கு முரணாகக் கண்ணகியை வெளியூருக்கு அழைத்துச் சென்றதற்கும், தன் தாய் தந்தையருக்குச் செய்யும் கடமையை மறந்ததற்கும் மாதவி காரணம் அறியாளாய்த் திகைத்தாள். அச் செயல்களுக்கெல்லாம் தான் தான் காரணமோ என்ற எண்ணமும் ஒரு கணம் அவள் உள்ளத்தில் ஓடிற்று. கணிகையர் குலத்தில் பிறந்த தான், குலமகளிர் போல் ஒரு கணவனுடன்

வாழ்க்கை நடத்தும் உரிமை ஏற்று வாழ்ந்தது தவரு காது என்ற உறுதிப்பாடும் பூண்டாள். எனினும், கோவலன் அவற்றிற் கெல்லாம் மாதவியே காரணம் என்று தவருக எண்ணினல், அதனை அவனுக்கு உணர்த்த வேண்டுவது தன் கடமையாகும் என்றும் மாதவி எண்ணி ஞள். அந்நிலையில் அவள் தீட்டிய முடங்கல் உண்மை விளக்கமாக அமைந்த ஓர் இலக்கியப் படைப்பாக வெளிப் பட்டது. இளங்கோவடிகளின் சொற்களில் அது இவ் வாறு அமைந்தது:

அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோ(டு)
இரவிடைக் கழிதற்(கு) என்பிழைப்(பு) அறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி.

பிரிவுத் துன்பத்தால் வாழ்க்கை உண்மை நிலைகள் மாதவிக்குப் புலனுயின. தான் கோவலனைக் கணவனுகக் கொண்டு வாழ்ந்தாலும், அவன் தன்னை மனைவியாகக் கருதி வாழவில்லை என்றும் அவள் தெளிவாக அறிந்து கொண்டாள். தான் கடமை அறிந்து வாழ்ந்தாலும், கோவலன் கடமை உணர்வு சிறிதும் இல்லாது வாழ்ந்த தால் குடும்பவாழ்வு சீர்குலைந்தது என்பதையும் மாதவி உணர்ந்தாள். தன்னை மனைவி எனக் கருதாத கோவல னிடம், ஊடல் முதலிய பல்வகை உரிமைகளைக் கொண் டாடியது தனது தவறு என்றும் மாதவி உணர்ந்தாள். எனினும், தன்பால் தீதில்லாமையும், அவன்பால் குறை யுண்மையும் அவனுக்கு உணர்த்தப்படுவது எங்ஙனம்? அதனை உணர்த்த அவள் மேற்கொண்ட முயற்சியின் விளைவே அத்திருமுகம். அதில் அடங்கிய கருத்துக்கள் இவை:

'தேவரீர் திருவடிகளைத் திக்கு நோக்கிப் பணிகின்றேன். இம்முடங்கலில் கூறப்படும் பண்படாத சொற்களை அருள்கூர்ந்து மனங்கொளல் வேண்டும். மாசற்ற அறிவு படைத்த மேலவரே! பெற்றோருக்குச் செய்யுங் கடமையை மறந்து, உயர்குடிப்பிறந்த கற்பு மனைவியோடு இரவிலே நகரைத் துறந்து புறம் போதற்குக் காரணமான தவறு யாது? அது என் தவறோ என்று நினைத்து என் மனம் செயலற்றுத் துன்புறுகின்றது. என் தவறெனினும் மன்னித்துப் பொறுத்தருள்தல் வேண்டும். நம் குடிப் புகழுக்கும் இழுக்கு வராதவாறு போற்றுதல் வேண்டும்.'

முடங்கலை எழுதி முடித்துத் தன் கூந்தலால் இலச்சினை இட்டுத் தன் 'கண்மணி அனையானுக்குக் காட்டுமாறு கோசிகன் கையிற் கொடுத்தாள் மாதவி. கடிதத்தைப் பெற்ற கோசிகன் கோவலனைத் தேடி மதுரை நோக்கி விரைந்தான்.

## உருக்குலைந்த கோவலன்

புகார் நகரத்திலிருந்து மதுரை நோக்கிப் புறப்பட்ட கோவலன் கண்ணகியருக்கு வழித்துணையாக அமைந்தார் கௌந்தியடிகள். அவர் வழிநெடுகிலும் எடுத்துக்கூறி வந்த அறவுரைகளைக் கேட்டுக் கொண்டே வழி நடந்தனர் இருவரும். தனது கடந்த கால ஒழுக்கங்களை நினைத்துக் கோவலன் தனக்குள்ளே சஞ்சலப்பட்டான். கவலையற்றப் புகார் இளைஞரோடு திரிந்த அவனது நிலை முற்றிலும் மாற்றம் பெற்றது. தன்மான உணர்ச்சி அவன் கடமையில் தவறிய இடங்களை எல்லாம் உறுத்திக் காட்டிற்று. உருமாறிப் புது மனிதனாக வழி நடந்து வந்த கோவலன் மதுரைக்கு அண்மையில் இருந்த ஓர்

அந்தணர் குடியிருப்புக்கு அருகில் வந்து சேர்ந்தான். அவ்விடத்தில் கண்ணகியைக் கௌந்தியடிகளோடு அமர்த்தித் தனியான ஓர் இடத்திற்குச் சென்று கவலை நிறைந்த நெஞ்சினனாய் ஒரு மாதவிச் செடியின் கீழ் இருந்தான். அந்த மாதவிச் செடி முதுவேனிற் காலம் தொடங்கி விட்டதால் பூக்களை உதிர்த்து வாடி வதங்கி நின்றது.

## கோசிகன் கோவலனைக் கண்டான்

அவ்விடத்திற்கு வந்த கோசிகன் உருக்குலைந் திருந்த கோவலனைக் கண்டு, கோவலனோ அல்லனோ என்று ஐயங் கொண்டான். அந்த ஐயத்தைத் தீர்ப்பதற்கு ஓர் உபாயத்தை அவன் கையாண்டான். அந்த மாதவிச் செடியைப் பார்த்துச் சொல்பவன் போல், 'கோவலனது பிரிவால் கொடுந்துயர் எய்தி வருந்தும் மாதவியே போல் நீயும் இளவேனில் நீங்கி முதுவேனில் வர, அதன் கொடுமைக்கு ஆற்றாது பூக்களை உதிர்த்து வாடினை போலும்' என்று சொன்னான். கோசிகன் கூறிய மாதவி பற்றிய செய்தி தன் செவியில் விழுந்ததும் கோவலனது முகத்திலே ஒரு மாற்றம் தோன்றியது. அதனைக் கூர்ந்து நோக்கிக் கொண்டு நின்ற கோவலன் கோசிகனிடம், நீ கூறியது என்ன என்று வினவினான். கோசிகன் மேற் கொண்ட முறை நற்பயன் விளைத்தது. மாதவிச் செடியின் கீழ் நின்றது கோவலனே என ஐயமற அறிந்து கொண்டான் கோசிகன்.

## கோசிகன் முடங்கலைக் கொடுத்த முறை

கோசிகன் கோவலனது மனநிலையை நன்கு தெரிந்த பின்னரே மாதவியின் முடங்கலை அவனிடம் சேர்க்க விரும்பினான். வசந்தமாலை கொடுத்த முடங்கலைக்

கோவலன் மறுத்த செய்தி அவனுக்கு முன் எச்சரிக்கையாக அமைந்திருக்கலாம். எனவே கோசிகன் முதலில் கோவலன் விட்டுச் சென்ற அவன் பெற்றோர் அவன் பிரிவால் அடைந்த துன்ப நிலையைச் சுட்டினான். அடுத்து அவன் உறவினர் அடைந்த மனக் கலக்கத்தைக் குறிப்பிட்டான். பின்னர், புகார் நகரமே இராமனை இழந்த அயோத்தி போல் அவல நிலையுற்றிருந்த செய்தியைக் கூறினான். இறுதியில் மாதவி அடைந்த பெருந்துயரைப் பொருந்தக் கூறினான். அவற்றால் கோவலன் மனம் மாதவியின் கடிதத்தை ஏற்கும் நிலையை அடைந்தமையை நன்கு அறிந்த பின்னரே, அவள் கொடுத்தனுப்பிய முடங்கலைப் பணிவுடன் அவன் கையில் கொடுத்தான். அம் முடங்கலில் கூந்தல் இலச்சினை இடப்பட்டிருந்தது. மாதவி வழக்கமாகப் பயன்படுத்திய வாச நெய்யின் மணம் அம்முடங்கலைக் கையில் ஏந்திய அவன் நாசியில் பட்டது. கண்ணகியை அடைந்ததிலிருந்து தன் கடமையை ஓராற்றான் உணருந்தன்மை பெற்றிருந்த கோவலனுக்கு மாதவியின் கூந்தல் மணம் கடமை உணர்வையும், உரிமையையும் ஒருங்கே புலப்படுத்திற்று. ஆதலின் கோவலன் அம்முடங்கலை ஏற்று அதனைப் பிரித்துப் படித்தான். மாதவியின் உயரிய பண்பு அந்நிலையில் அவனுக்குப் புலனாயிற்று. கண்ணகியைக் குறைகூறாது அவளோடு இரவிடை ஊர்விட்டுப் புறம் போந்த செயலுக்காக வருந்தும் அவளது குடிமான உணர்வை, அவன் தன் மனத்துள்ளே மெச்சினான். பெற்றோரைப் பேணாது வெளியூருக்குப் போந்ததால் உண்டான கடமை தவறிய ஒழுக்கத்தைச் சுட்டிக்கூறிய அவளது பண்பட்ட கற்பு மேம்பாட்டை ஒரு கணம் தனக்குள்ளே சிந்தித்தான். அவள் தீயவள் என்று அவன் கொண்டிருந்த தன் முடிவை

மாற்றி, அவள் தீதிலள் என்று கோவலன் வாய்விட்டுக் கூறினான். நடந்தவற்றிற்கெல்லாம் தனது தீய ஒழுக்கங் களே காரணம் என அவன் ஒப்புக் கொண்டான். மாதவி யின் வஞ்சம்புணர் நடிப்பு வாழ்வே தனது குலப்பெரு மையும், குன்றுப்பொருளும் கெட்டமைக்குக் காரணம் என்று எண்ணியிருந்ததால் இருந்த தளர்ச்சியும் நீங்கப் பெற்றான். தன் வாழ்வில் குறுக்கிட்ட இரு பெண்மணி களின் உயரிய பண்புகளையும் மதிப்பிட்டறியும் மன நிலையையும் கோவலன் பெற்றான். அஃது அவனுக்கு வழிகாட்டியாகிக் கடமை உணர்வை நெறிப்படி புகட்டி நின்றது.

## பெற்றோருக்குத் திருமுகம்

மாதவி தீதிலாதவள் என்பதை உணர்ந்த அளவிலே தன் குற்றம் தன் கண்முன் நிற்கக் கண்ட கோவலன் அதனை நீக்க முற்பட்டான். பெற்றோர் துன்பத்தைத் தீர்ப்ப தெங்ஙனம்? மாதவியின் முடங்கல் தான் தன் பெற்றோ ருக்கு எழுத வேண்டுவனவற்றை யெல்லாம் குறை வறப் பெற்று விளங்கினமையைக் கோவலன் உணர்ந் தான். கோசிகனிடம் அம்முடங்கலைக் கொடுத்து, தன் பெற்றோரை வணங்கி அவரிடம் அதைச் சேர்க்குமாறு அவன் வேண்டினான்.

கோவலன் பெற்றோருக்கு அது பொருந்துமாறு: 'தேவரீர் திருவடிகளைத் திக்கு நோக்கிப் பணிகின்றேன். இம்முடங்கலிற் காணுஞ் செய்தியைத் திருவுள்ளத்திலே கொண்டருள்தல் வேண்டும். குரவர் பணிவிடைகளைத் தவிர்ந்ததோடு, குலப்பிறப்பாட்டியோடு இரவிலே புகாரை விட்டுப் புறப்பட்டுவந்த தவறுஞ் செய்தேன். இவ்விரண் டாலும் திருவுள்ளத்தில் தளர்ச்சி உண்டாகி இருத்தலைக்

கடிந்தருள்தல் வேண்டும். இங்ஙனம் யான் என் தவற்றினை அறியாது மயங்கிக் கையற்றுக் கூறும் இவ்விண்ணப்பத்தைப் பேதைமை காரணமாக எழுந்த சொற்களென்றே போற்றுதல் வேண்டும்.

அவ்விண்ணப்ப மடலை ஏந்திய கோசிகன் புகார் நோக்கி வழிப்பட்டான். கோவலன் கண்ணகி, கௌந்தியருடன் மதுரை நோக்கிச் சென்றான்.

# 12. வினைவிளைகாலம்

## நல்லார் இருவர்

கோவலன் வாழ்க்கையில் குறுக்கிட்ட மங்கை நல்லார் இருவரும் மாதருக்கு அணிகலனாக விளங்கிய மாண்புடையோரே. தாம் வாழ்ந்த சூழ்நிலைக் கேற்ப இருவரும் வெவ்வேறு ஆசாரங்களை மேற்கொண்டு வாழ்ந்தனர். பழங்குடி மக்கள் மேற்கொண்ட இல்வாழ் நெறியின் முறைமையில் இறையுந் தவருது கண்ணகி வாழ்ந்தாள். கணவனைத் தெய்வமாகப் போற்றி, அறக் கடமைகளை விடாது நடத்திக் குடிக்குப் புகழ் விளைப்பதே அவள் குறிக்கோளாக இருந்தது. கணிகையர் குலத்திற் பிறந்த மாதவி, தன் குலத்தினர் போற்றி வளர்த்த கலையைக் கற்றுத் துறைபோய வித்தகியாகத் திகழ்ந்தாள். தன் நுண்ணறிவால் தன் குல ஒழுக்கத்தின் இழிவை அறிந்து, குலமகளே போல் கற்புவாழ்க்கை மேற்கொண்டு ஒழுகினுள். துன்பம் மிக்க காலத்தும் பிறரைத் தூற்ருத பெருந்தன்மை இருவரிடமும் நிலைபெற்றிருந்தது. மாதவியைக் கண்ணகி குறை கூறவில்லை; கண்ணகியை மாதவி குறை கூருது வாழ்ந்ததோடு, மனமார அவள் நடத்திய கற்பு வாழ்க்கையைப் புகழ்ந்தாள்.

## கோவலன் நல்லவனே

கோவலன் வாழ்ந்த காலத்துச் சமுதாய நிலை அவனது வாழ்க்கையில் அமைந்த தவறுகளுக்குக் காரணமாக இருந்தது. செல்வச் செழிப்பும், கலை வாழ்க்கையும், புகார் நகரத்தின் பழைய வாழ்க்கை முறைக்கு முரணான

ஒரு புதுச் சூழ்நிலையைப் பிறப்பித்தது. பண்டையோர் போற்றிய இல்வாழ் நெறியை அவன் அடிமனம் பாராட்டியது; கலை நுகர்ச்சியை அவன் மேல் மனம் நாடிற்று. இரண்டிற்கும் உரிய இடத்தை வரையறுத்து உறுதிப்படுத்தி வாழும் அடிப்பட்ட நிலை அற்றைநாள் சமுதாயத்தில் இல்லாததால், கோவலன் வாழ்வு அவ்விரண்டுக்கும் இடையில் நிலைகுலைந்து ஊசலாடிற்று. வீரம், கொடை அருளுடைமை என்னும் உயர் குணங்கள் அவனிடம் குறைவற அமைந்திருந்தன.

மணிமேகலையின் பிறந்த நாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கோவலன் இரவலருக்குப் பொன்னை வாரி வாரி வழங்கினான். அன்று பரிசில் பெற வந்த தளர்ந்து வயது முதிர்ந்த ஓர் அந்தணன், மதயானை ஒன்றின் கையில் அகப்பட்டுக்கொண்டான். அதனைக் கண்ட கோவலன் உடனே பாய்ந்து சென்று அவ் யானையின் கையுட் புகுந்து அந்த அந்தணனை விடுவித்தான். யானை அந்தணனை விட்டுவிட்டுக் கோவலனை வளைத்துப் பற்றிக் கொண்டது. அஞ்சா நெஞ்சனான கோவலன் அதன் கொம்பைப் பிடித்து, அதன்மேல் ஏறி, அதன் முதுகில் அமர்ந்து, அதன் மதத்தை அடக்கினான்.

பெண் ஒருத்தி தன் குழந்தையைத் தொட்டிலில் இட்டு அதன் அருகில் தான் வளர்த்த கீரிப்பிள்ளையைக் காவல் வைத்து, நீர் கொணரச் சென்றாள். அவ்வேளையில் அக் குழந்தையைக் கடிக்கப் பாம்பு ஒன்று வந்தது. பாம்பைக் கண்ட கீரிப்பிள்ளை அதனைக் கொன்று, பெருமகிழ்ச்சியுடன் அப்பெண்ணின் வரவை எதிர்நோக்கித் தலைவாயிலில் காத்திருந்தது. இரத்தக் கறைபடிந்த முகத்துடன் இருந்த கீரிப்பிள்ளையைக் கண்ட அம்மாது, தன் குழந்தையை அது கடித்துக் கொன்றுவிட்டது எனப்

பிறழ உணர்ந்ததால் குடத்தை அதன் மேல் போட்டு அதனைக் கொன்றுவிட்டாள். உயிர்க் கொலை செய்த அப்பெண்ணணங்கின் கையுணவை உண்ணுவதும் தீவினை யாகும் என்று கருதி வடமொழி வாசகம் ஒன்றை எழுதி அவள் கையில் கொடுத்துவிட்டு, அத்தீவினையைத் தொலைப்பதற்காக வடதிசை நோக்கிச் சென்றான் அவள் கணவன். அப்பெண் அவ் வடமொழி வாசகத்தைக் கையில் ஏந்திப் பொருட்கொடை செய்து அறக்கடன் ஆற்றுவார் உண்டோ என்று தெருவெல்லாம் வேண்டித் திரிந்தாள். கோவலன் அவ்வாசகத்தை ஏற்று அதிற் கண்ட முறைமைப்படியே பொருட்கொடை செய்து அறக் கடன் நிறைவேற்றி, அவளும் அவள் கணவனும் இனிது இல்லறம் நடத்த அருள் செய்தான்.

புகார் நகரத்தில் வாழ்ந்த கற்புடைய மகள் ஒருத்தி மேல் ஓர் இளைஞன் பொய்ப்பழி சுமத்தினான். அதனைக் கேட்ட அவள் கணவன் அவள் மேல் ஐயங்கொண்டான். அவள் சதுக்கப் பூதத்தினிடம் முறையிட்டாள். சதுக்கப் பூதம் தன் பாசத்தால் அவ் விளைஞனைப் பிணித்து உண்ணத் தொடங்கிற்று. அவ்விளைஞனின் பெற்றோரின் துயர் கண்டு கோவலன் அவனை விடுவித்துத் தன்னை உண்ணுமாறு அப்பூதத்தை வேண்டினான். பூதமோ, 'நரகன் உயிருக்கு நல்லுயிர் கொண்டு பரகதி இழக்கும் பண்பு ஈங்கு இல்லை' என்று கூறி மறுத்து அவனை உண்டு விட்டது. எனினும், கோவலன், அவன் பெற்றோருக்கு வேண்டுவன எல்லாங் கொடுத்து மகன் முறையில் அவர்களை ஆதரித்து வந்தான். இவற்றை யெல்லாம் நேரிற்கண்ட மாடலன் 'நீ இம்மைச் செய்தது யானறி நல்வினை' என்று அவனை வாயாரப் போற்றுவானாயினன்.

பாண்டியன் நல்லன்

சிலம்பை விற்று அதன் விலைப்பொருளை வாணிப முதலாகக் கொண்டு மதுரையில் வாணிகம் நடத்தி, இழந்த தன் வான் பொருளை மீண்டும் ஈட்டுவதற்காக மதுரையை நோக்கிப் புறப்பட்டான் என்பதை முன் அறிந்தோம். கௌந்தியடிகளுடன் கோவலனும் கண்ணகியும் ஓடமேறி வையையைக் கடந்து மதுரையை அடைந்தனர். மதுரையில் மாதரி என்ற ஆயர்குல மாது நல்லாளின் குணமேம்பாட்டை அறிந்திருந்த கௌந்தி யடிகள் அவர்களிருவரையும் அவளுடன் அனுப்பி வைத்தார். இருவரும் அவள் வீட்டில் தங்கினர். மாதரி உதவிய பல்வகைப் பண்டங்களாலும் கண்ணகி ஆக்கிய உணவைக் கோவலன் உண்டான். கழிந்த நிகழ்ச்சிகளை எண்ணி இருவரும் வருந்தினர். தனிக்குடி புகுந்த தம்பதிகள் போல் அவர்கள் இருவரும் ஒரு நாளை மாதரி வீட்டில் கழித்தனர். மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர் பண்டு தொட்டுச் செங்கோல் தவருத நல்லாட்சியாளராகவே ஆண்டு வந்தனர். பாண்டியன் காதில் மறையோதும் ஓசை கேட்பது வழக்கமே யன்றி ஆராய்ச்சி மணி ஓசை என்றுமே ஒலித்ததில்லை. அவன் குடிகள் அவனைப் பழிதூற்றியது எக்காலத்தும் இல்லை.

மதுரையில் வாழ்ந்த கீரந்தை என்ற ஒருவன் வேற்று நாட்டிற்குச் செல்லுங்கால் தன் மனைவியிடம் 'ஆட்சி வேலி உன்னைக் காக்கும் அஞ்சற்க' என்று தேறுதல் மொழிகள் சொல்லிச் சென்றான். மாறு வேடங்கொண்டு ஊர்காவல் மேற்கொண்ட பாண்டியன் காதில் அச்சொற்கள் விழுந்தன. அன்று தொட்டு அவ்வீட்டிற்குப் பாண்டியன் சிறப்புக் காவல் நடத்தினான். வினைமுடித்துத் திரும்பி வந்த கீரந்தை ஓரிரவு தன்

வீட்டினுள் இருந்து தன் மனைவியோடு அளவளாவிக் கொண்டிருந்தான். அவ்வீட்டிற்குள் ஆண் குரல் புதிதாகக் கேட்கப்பட்டதால், அரசன் கதவைத் தட்டி விட்டான். மறுகணம், கேட்கப்பட்ட குரல் கீரந்தை யுடையதே என்று உணர்ந்து கொண்டான். நுண்ணறிவு கைவந்த பாண்டியன் ஐயந்தவிர்த்தற்காக அத்தெருவி லிருந்த வீடுகளின் கதவுகளை யெல்லாம் தட்டிச் சென் ருன். மறுநாட் காலையில் என்றும் நிகழாத அவ் வடாத செயல் பற்றி அத் தெருவினர் அரசனிடம் முறையிட் டனர். நீதி தவருத பாண்டியன் கதவைத் தட்டின தன் கையைத் தன் உடைவாளாற் குறைத்துக் கொண்டான்.

புகார் நகரத்து அந்தணன் பராசரன் என்பான் சேர மன்னனின் கொடைவன்மை பற்றிக் கேள்வியுற்று அவனை யடைந்து பாடி, நன்கலன்கள் பல பரிசிலாகப் பெற்ருன். அவன் சோழநாட்டிற்குச் செல்லும் வழியில் பாண்டி நாட்டுத் தங்கால் என்னும் ஊரில் தங்கிஞன். அவ்வூர்ச் சிறுவர் அனைவரும் அவனைச்சூழ்ந்து கொண் டனர். அச் சிறுவர்களைக் கண்டு மகிழ்ச்சிகொண்ட பராசரன் தன்னேடு வேதம் ஓத வல்லாருக்கு நன்பொருள் தருவதாகக் கூறிஞன். அச்சிறுவருள் ஒருவஞக இருந்த தக்கிணுமூர்த்தி என்ற சிறுவன், ஏற்ற முறையில் வேத மோதிப் பராசரனிடம் அணிகலன்கள் பலவற்றைப் பரிசி லாகப் பெற்ருன். அவற்ரேடு வீடுதிரும்பிய தக்கிணு மூர்த்தியை ஊர்காவலர் மறித்து, அவன் கையிலிருந்த அணிகலன்களைத் திருட்டுப் பொருள் என்று கூறிக் கைப் பற்றி, அவனையும் சிறையிலிட்டனர். அதனைக் கேட்ட றிந்த அவன் பெற்ரேரான வார்த்திகன், பெருந்துய ருற்ருன். தாயான கார்த்திகை அழுது புலம்பிஞள். அதனுல் ஐயைகோயிற் கதவு என்றுமில்லாத புதுமையாக

அடைத்துக்கொண்டது. ஐயைகோயிற் கதவு அடைத்துக் கொண்ட செய்தி பாண்டியனுக்குப் பெருந்துயரை விளைத் தது. 'கொடுங்கோலும் உண்டு கொல்' என்று அவன் ஐயுற்றான். ஏவலர்வழி உண்மையை உணர்ந்த பாண்டி யன் வார்த்திகன் மனைக்குச் சென்று நிகழ்ந்ததைப் பொறுக்குமாறு வேண்டினான். அவனுக்கு வயல்சூழ் தங்கால் என்னும் ஊரையும், விளையுள் தவறாத வயலூரை யும் தானமாக ஈந்தான். கோபந்தணியுமாறு ஐயை முன் வீழ்ந்துவணங்கினான்; ஐயை சினந்தணிந்தாள்; கோயிற் கதவு திறந்தது.

## கோவலன் கொலையுண்டான்

பாண்டியன் பழம்பதியாம் மதுரையில், மாதரி வீட்டில் தங்கி இருந்த கோவலனும் கண்ணகியும் ஆயர் பாடியில் வாழ்ந்தவருக்குக் கண்ணனும் இராதையும் போற் காணப்பட்டனர். உணவாக்குவதற்கு வேண்டிய பொருட்களைப் பெற்றுத் தான் ஆக்கிய பொருளைக் கோவ லனுக்கு முறைப்படி படைத்துக் கடமை செய்வதற்குக் கண்ணகிக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. உணவருந்தி ஒருங்கிருந்த காலை, இருவரும் தம் வாழ்வில் நிகழ்ந்தன பற்றி எண்ணினர். தன் தவறுகளையெல்லாம் திண்ணிய கற்பின் கண்ணகிக்கு முன் எடுத்துக்கூறி அவள் மேம் பாட்டைப் பாராட்டினான் கோவலன். இறுதியில், அவள் காற் சிலம்புகளில் ஒன்றைப் பெற்று, 'மாறிவருவல்' என்று கூறி மறுகிற் சென்றான். அக்காலை தீ நிமித் தங்கள் பல நிகழ்ந்தன. அவற்றைக் கோவலன் கூர்ந்து நோக்கினான் இல்லை.

நன் மக்களும் நல்லாட்சியும் நிலைபெற்றிருந்த மதுரையில் துன்மதியில் வல்ல பொற்கொல்லன் ஒருவனும்

இருந்தான். சூழ்ச்சியால் அரசியின் காற்சிலம்புகளுள் ஒன்றைத் திருடியிருந்த தன் குற்றத்தை யார்மேல் சுமத்தலாம் என்று எண்ணி அவன் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். கோவலன் கையிற் சிலம்பைக் கண்ட அவனுக்குத் தன் திட்டத்திற்குக் கோவலனை இரையாக்கலாம் என்ற எண்ணம் தோன்றிற்று. கோவலன் கையிலிருந்த சிலம்பை வாங்கி அதனை மதிப்பிடுபவன் போல் கூர்ந்து நோக்கி, அது அரசிக்கே ஏற்புடையது என்று கூறித் தன் குடிலில் கோவலனை இருத்தி, அரண்மனைக்குச் சென்றான். அரசனிடம் களவுபோன அரசியின் சிலம்பைத் திருடிய திருடனைத் தான் கண்டு பிடித்து விட்டதாகவும், அவன் தன் குடிசையில் இருப்பதாகவும் தெரிவித்தான். நீதிநெறி தவருத பாண்டியன் அன்றிருந்த சூழ்நிலையில் ஆழ்ந்து சிந்தியாதவனுகி வாயிழந்தான். தன் மனைவியின் சிலம்பு அக்கள்வன் கையில் இருப்பின், அவனைக் 'கொன்று அச்சிலம்பைக் கொணர்க ஈங்கு' எனக் கூறினுன். அரசன் ஆணை பெற்ற கொலைவினைஞர் இருவர், கோவலனைக் கொன்று சிலம்பை அரண்மனையிற் சேர்த்தனர். இது வினைவிளை காலக் கொடுமை யன்ருே!

# 13. கொலை விளைத்த கொடுமை

## மதுரையில் நிகழ்ந்தவை

கோவலன் கொலையுண்ட செய்தி மதுரையில் பரவிற்று. அச் செய்தியைக் கண்ணகிக்கு அறிவிக்க அனைவருந் தயங்கினர். 'அரண்மனைச் சிலம்பைத் திருடிய கள்வனென்று கோவலனை அரசன் கொலை குறித்தனன்', என்று மாதரியின் மகளான ஐயை ஓராற்ருன் அச் செய்தியைக் கண்ணகிக்கு உரைத்தாள். அவலச் செய்தியைக் கேட்ட கண்ணகி பொங்கி எழுந்து வீழ்ந்து புரண்டு தன் செங்கண் சிவப்ப அழுதாள். அவிழ்ந்த கூந்தலளாய்த் தெருவிலோடி, ஞாயிற்றை நோக்கி, 'காய்கதிர்ச் செல்வனே! என் கணவன் கள்வனே?' என்று வினவினாள். 'கள்வனல்லன், அவனைக் கள்வன் என்ற இவ்வூர் எரியுண்ணும்' என்றது ஒரு குரல்.

தன் மற்றைச் சிலம்பைக் கையிலேந்தி மதுரை மறுகெல்லாம் மன்னன் அநீதியை எடுத்துக் கூறி முறையிட்டுச் சென்ருள் கண்ணகி. பின்னர், அவள் 'காதற் கணவனைக் காண்பேன், அவன் வாயில் தீதற்ற நல்லுரை கேட்பேன்' என்று கூறிக்கொண்டே கொலைக்களம் நோக்கிச் சென்ருள். கொலைக்களத்தில் புழுதியில் புரண்டு கிடந்த தன் கணவன் உடலைக் கட்டித் தழுவிக் கொண்டு கண்ணகி அழுது புலம்பினுள். அவள் துயரநிலை இறந்து கிடந்த கோவலனையும் எழுந்து நிற்கச் செய்தது. எழுந்து நின்ற கோவலனின் அடிகளில் விழுந்து அவன் இணையடிகளைப் பற்றிக் கொண்டு அழுதாள் கண்ணகி. அவனே, 'இருந்தைக்க' என்றுரைத்து வானவர் குழாத்தோடு வானுலகடைந்தான்.

கணவன் உயிரோடு தொடர்ந்து செல்லாது கடமையால் தடுத்து நிறுத்தப்பட்டாள் கண்ணகி. அறக் கற்பினள் மறக்கற்பினளானாள். கணவன் கள்வன் அல்லன் என்று நிருபிப்பதையே தனது பெருங்கடமை எனக் கொண்டாள் அவள். அநீதி செய்த அரசனிடம் நியாயம் கேட்க அவள் அரண்மனை நோக்கி விரைந்தாள். அவள் சென்ற கோலம் கண்டார்க்குக் காளிதேவியை நினைவுறுத்தியது. அரசியோடு அரியணையிலிருந்த பாண்டியன் 'கண்ணீரோடு என் முன் வந்த நீ யாரோ?' என்று வினவினான். கண்ணகி, ஆராய்ச்சி இல்லாத மன்னனே! யான் புகார் நகரினள்; மாசாத்துவான் மகனும், என் காற் சிலம்பை விலைபகர்ந்த விடத்து உன்னாற் கொலை செய்யப்பட்டவனுமான கோவலன் மனைவி என்று சீற்றத்தோடு பதில் இறுத்தாள். அவள் நிலையுணர்ந்த அரசன், 'பெண்ணணங்கே, கள்வனைக் கொல்லுதல் கொடுங்கோலன்று; செங்கோல் நெறியேயாகும்' என்று உரைத்தான். கள்வன் அல்லன் தன் கணவன் என்பதை நிருபிக்க முற்பட்ட கண்ணகி, 'என் காற்சிலம்பே என் கணவன் கையில் இருந்தது. அதில் உள்ள அரிகள் மணிகளாக உள்ளன' என்று எடுத்துரைத்தாள். அரசியின் காற்சிலம்பு முத்து அரிகளைக் கொண்டவை ஆதலின், உண்மையை அறிவதற்கு அவள் கூறியவை ஏற்புடையன என்பதை உணர்ந்து, பாண்டியன் கோவலனிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிலம்பை உடைக்குமாறு ஆணையிட்டான். சிலம்பு உடைக்கப்பட்டது. அதனுள்ளிருந்த பரல்களான மணிகள் இடமெல்லாம் தெறித்தன; அரசன் வாயிலும் தெறித்தன. உண்மையும், அரசன் அநீதியும் உடன் வெளிப்பட்டன. 'பொற்கொல்லன் சொற்கேட்டு முறைதவறிய யானோ அரசன்? யானே

கள்வன். தென்னவர் செங்கோன்மை என்முதல் பிழைத்ததே' என்று உழைந்து கூறி அரசன் வீழ்ந்து உயிர் துறந்தான். வளைந்த செங்கோலை அவன் தன் உயிராகிய ஆணியால் நிமிரச் செய்தான். பாண்டியன் தேவி, 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதுஇல்' என்று கூறி, அரசன் இணையடிகளில் விழுந்து உயிர்விட்டாள்.

அரண்மனையிலிருந்து சீற்றஞ் சிறிதுங் குறையாதவளாகக் கண்ணகி வெளிப்பட்டாள். 'நான்மாடக் கூடல் நன்மகளிரே, மைந்தரே, வானக் கடவுளரே, மாதவரே கேளுங்கள், என் கணவனுக்குத் தவறிழைத்த இந்நகரைச் சீறினேன்; குற்றமிலேன்' எனக் கூறி மதுரையில் தீ எழச் செய்தாள். அவள் அங்கியங் கடவுளுக்கு இட்ட ஆணைப்படியே மதுரையில் வாழ்ந்த பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவியர் அனைவரும் ஊறின்றிக் காக்கப்பட்டனர்; ஏனையோர் தீக்கு இரையாயினர். கண்ணகி மதுரையின் மேற்கு வாயில் வழியே வெளிச்சென்று சேரநாடடடைந்து பதினன்கு நாட்கள் கழிந்த பின்னர் கோவலனுடன் வானவர் வரவேற்க விண்ணுலகு அடைந்தாள்.

கோவலன் கொலையுண்ட செய்தியையும், வளையாத பாண்டியன் செங்கோல் வளைந்தமையையும் அறிந்த மாதரி, 'அடைக்கலம் இழந்தேன் இடைக்குல மடந்தை' கோவலன் தீதிலன், கோன்முறை பிழைத்தான் என்று கூறி, நடு இருள் யாமத்தில் எரியகம் புகுந்தாள்.

கௌந்தியடிகள், துறவியே யாயினும் தம்மோடு பழகிய கோவலன் கண்ணகியரின் துயர்நிலையால் மிகவும் வருந்தினர். அரசன் கொடுமையை நினைத்துச் சீற்றங் கொண்டு, அவன் உயிர் துறந்தமையை அறிந்து ஓராற்

ருன் அதனைத் தாங்கினர். எனினும், தம்மோடு தொடர்பு கொண்டு அவர் இருவரின் தீவினை உருவெடுத்தமைக்காக உண்ணு நோன்பிருந்து உயிர் துறந்தார்.

### மாடலன் வாய்ச்சொல்

திருச்செங்கானத்தைச் சேர்ந்த மாடலன் என்ற அந்தணன் பொதியினை வலம் செய்து குமரியில் நீராடி மதுரை வந்து சேர்ந்தான். மதுரையில் புறஞ்சேரியில் கௌந்தியடிகளுடன் கோவலனையும் கண்ணகியையும் கண்டான். புகார் நகரில் முன்னர் செல்வநிலையில் கோவலனைக் கண்ட மாடலனுக்கு, மதுரையில் அவனைக் கண்ட காட்சி பெருந்துன்பந் தருவதாயிற்று. புகாரில் அவன் ஆற்றிய ஆண்மைச் செயல்களையும், அருட் செயல்களையுங் கூறி, மனைவியுடன் வெளியூரில் ஆதர வற்ற நிலையில் அவனைக் கண்டதற்காகப் பெரிதும் வருந் தினன். அவற்றிற்கெல்லாம் கோவலனின் முன்வினை காரணமோ எனவும் ஐயுற்ருன். மறுநாள் கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டு அதிர்ச்சியுற்ருன்.

மதுரையை விட்டுப் புகார் போந்த அவ்வந்தணன் கோவலனுக்கு உறவினராக அவ்வூரில் வாழ்ந்தோர் அனை வருக்கும் கோவலனது கொலை பற்றிய செய்தியை அறி வித்தான். அச்செய்தியைக் கேட்டுப் புகார் நகரினர் புலம்பி மருகினர். பலர் உயிர் துறந்தனர். தான் அத் தகைய துயர் நிலைக்குக் காரணமாயிருந்தமையால், அத் தீவினையைத் தீர்த்தற்பொருட்டுக் கங்கையாட வடக்கு நோக்கிப் புறப்பட்டான் கோசிகன்.

### புகார் உற்ற துயர்

கோவலனின் தந்தையாகிய மாசாத்துவான் கோவலன் கொலையுண்டு இறந்த செய்தியையும், நீதி தவறியதற்

காகப் பாண்டியன் இறந்த செய்தியையும், அவன் தேவி அவனோடு மடிந்த செய்தியையும், பிறவற்றையும் கேட்டு அளவில்லாத் துயரத்துள் ஆழ்ந்தான். பெருவணிகனுகிப் பெரும்பொருள் திரட்டிய அவனுக்கு உலக நிலையாமை உடன் விளங்கிற்று. தன் பொருள் அனைத்தையும் தானமாக ஈந்தான். இந்திர விகாரமே தனக்கு உறை விட மாதற்கேற்றது எனத் துணிந்தான். புகார் நகரில் இந்திரனால் நிருமிக்கப்பட்டு ஏழாக அமைந்திருந்த பௌத்த கோயில் இந்திர விகாரம் என்று வழங்கிற்று. அக்கோயிலில் வானத்தில் உலவும் தருமசித்தர் அமர்ந்து புத்தர் பிரானின் அறவுரைகளை மக்களுக்கு விளங்கச் சொல்லுவர். அவ்விடத்தில் பிறப்பறுத்து வீடுபேறடை வதற்காகத் துறவுநெறி நின்ற ஐம்பதின்மர் உறைந் தனர். மாசத்துவானும் அவருடன் சேர்ந்து துறவி யானுன். மாசாத்துவான் மனைவி தன் மகன் இறந்ததால் விளைந்த துயருக்கு ஆற்ருளாய் உயிர் துறந்தாள்.

கண்ணகியின் தந்தையான மாநாய்கன் கடல் வணிகர் தலைவன். கோவலன் கண்ணகியர் மதுரையில் அடைந்த கொடுமை அவனுக்குத் துறவு உள்ளத்தை ஈந்தது. தேடி வைத்திருந்த பெரும்பொருளைத் தானஞ் செய்து அவன் அருகதானத்தை அடைந்தான். அருக தானத்தில் சமணத் துறவிகள் பொய்யும், புலாலும், பற்றுந் துறந்து வதிந்தனர். அவர்கள் அனைவரும் மெய் அறிந்த பெரியோர். அவர்கள் அருகர், சித்தர், ஆசா ரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்ற ஐவரும் உறையும் அருகன் கோயிலில் வழிபாடியற்றுவர். மாநாய்கனும் அத்துறவிகளுள் ஒருவனுகிப் பிறப்பறுக்க முயல்வானு யினுன். கண்ணகியின் தாய் அத்துயர் பொறுளாய் உயிர் விட்டாள்.

கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட மாதவிக்கு உலகமே இருண்டது. வாழ்வை இழந்த அவளுக்குத் துறவொன்றே புணையாக முன்னின்றது. கணிகையர் குலத்தில் பிறந்ததால் தான் விரும்பி ஏற்ற இல்வாழ்வு குலைந்த அந்நிலை அவள் மனக்கண் முன் காட்சி யளித்தது. தன் மகள் மணிமேகலையின் எதிர்காலம் பற்றிய கவலையும் கடமையுணர்வும் அவளைப் பிடித்து உலுக்கின.

---

# 14. கடமையும் கொள்கையும்

## தாபத நிலை

கணிகையர் குலத்தில் பிறந்தாலும் பழங்குடிப் பிறந்த கற்பு மகளிரே போல் கோவலனையே தன் வாழ்க்கைத் துணைவனாகக் கொண்டு, அன்போடு பொருந்திய இல்வாழ்க்கை நெறி நிற்க முனைந்தவள் மாதவி. கோவலனை இழந்த அவள், அக்காலத்தில் கணவனை இழந்த கற்புடைப் பெண்டிர் மேற்கொண்டு ஒழுகிய ஒழுக்க நெறியாகிய தாபத நிலையை மேற்கொண்டு வாழ்தலையே விரும்பினாள். குலமகளிர் கணவன் இறந்தால் அவனுடன் இறப்பர்; அல்லாக்கால், அவன் உடலோடு எரியகம் புகுவர். கணவன் விட்டுச் சென்ற கடமையை அவன் இறந்த பின்னரும் இருந்து ஆற்றி நோன்பு வாழ்க்கையை மேற்கொண்டு கைம்மை வாழ்வு வாழ்வதும் உண்டு. கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிறுவும் கடமை யுடையவளாக இருந்தமையின், கோவலனுடன் உயிர் துறவாதமைந்தாள். கடமையை நிறைவேற்றிய பதினான்காம் நாள் கண்ணகி தன் கணவனோடு கூடினாள். மணிமேகலையின் வாழ்வு மாதவியைக் கைம்மை நோன்பியற்றி வாழ்வதைக் கடமை எனப்புகட்டி நின்றது. எனவே, கணவனை இழந்த கற்புடைப் பெண்டிர் கைம்மை நோன்பியற்றி வாழும் தாபத நிலையே தன் எதிர்காலத்திற்கு ஏற்றதென அவள் தெரிந்து கொண்டாள். பல்வேறு ஒப்பனைகளால் அழகுக்கு ஒளியாகப் பேணிக் காக்கப்பட்ட தன் கூந்தலை மாதவி களைந்தாள். அழகுசெய்யும் பிற ஒப்பனைகளையும், அணிகலன்களையும்

அவள் அறவே துறந்தாள். தாபதர் வாழும் மலர் மண்டபத்தில் மணிமேகலையுடன் மாதவி உறைவாளாயினுள்.

## குலமகளிர் மேம்பாடு

மணிமேகலையின் எதிர்காலம் பற்றிய எண்ணம் மாதவியை வாட்டிற்று. தன் மகள் தான் பெற்ற பெருந்துயர் தவிர்த்து வாழவேண்டும் என்று அவள் எண்ணினுள். தன் வாழ்வே போல் அவள் வாழ்வும் பயனற்றுக் கழிந்துவிடுமோ என்று அவள் அச்சங்கொண்டாள். கணிகையர் குடியிற் பிறந்ததால் தனக்கு அமைந்த ஒழுக்கத்தை மணிமேகலைக்கு உரிமை செய்ய அவள் விரும்பவில்லை. கோவலன் மகளான மணிமேகலைக்கு, கோவலன் மனைவியான கண்ணகியின் ஒழுக்கத்தையே உரிமைப்படுத்துவது நேரிது என அவள் துணிந்தாள். கணவன் கொலையுண்ட செய்தியைக் கேட்டு அழுது புலம்பி, அவன் கள்வன் அல்லன் என்பதை அரசன் முன் முறையாக நிறுவி, கொடுமை இயற்றிய மதுரையைத் தீக்கு இரையாக்கிய கற்புக்கரசி கண்ணகியின் மகளே மணிமேகலை என்று மாதவி வாயாரக் கூறினுள். கணிகையர் குலப் பிறப்பால் புகார் மக்கள் தனக்கு உரிமைப் படுத்திய திருந்தாச் செய்கையோடு பொருந்திய தீத்தொழில் மணிமேகலைக்கு உரிய அன்று என்று பலரும் அறியச் சொன்னுள். பிறப்பு அடிப்படையிலேயே வாழ்க்கை அமைதல் வேண்டும் என்று கட்டுப்படுத்தும் சமுதாயக் கொடுமைக்கு மணிமேகலையைத் தப்புவிக்க அவள் தாய்மை உள்ளம் கண்ட வழி அது.

## சமுதாயக் கொடுமை

அவ்வாண்டு நிகழ்ந்த இந்திரவிழாவிற்கு மாதவியும், மணிமேகலையும் செல்லவில்லை. கணிகையர் குலத்தில்

பிறந்த பெண்டிர் அனைவரும் இந்திர விழாவில் கலந்து கொள்வர். கலைவல் பெண் யாரேனும் இந்திரவிழாவில் கலந்து கொள்ளாது இருப்பின், அச்செயல் குல ஒழுக்கம் இழுக்கிய முறைகேடு என்றே புகார் மக்களால் கருதப் பட்டது. அத்தகைய செயலைப் புகார் மக்கள் நாகூசாது இகழ்ந்துரைத்தனர். மாதவியும் மணிமேகலையும் இந்திர விழாவிற்குப் போகாததால் எழுந்த இகழுரை புகாரில் பரவிற்று. ஆடிமுதிர்ந்த மடந்தையாக இருந்த சித்தி ராபதி என்னும் மாதவியின் தாய்க்கு அது பெருநாணத் தைப் பிறப்பித்தது. மாதவியையும் மணிமேகலையையும் இந்திரவிழாவில் கலந்து கொள்ளுமாறு செய்யும் முயற்சி யில் அவள் இறங்கினாள். ஊரார் கூறும் இகழுரையை மாதவிக்கு எடுத்துக் கூறினால் உடனே அவள் மகளுடன் இந்திரவிழாவுக்கு வருவாள் என்று பேதை மனம் அவளுக்குக் கூறிற்று. வசந்தமாலை என்னும் மாதவியின் தோழி மூலம் ஊரார் கூறும் பழிச் சொல்லை மாதவியிடம் எடுத்துக் கூற அவள் விழைந்தாள். வசந்தமாலை சித்திரா பதியின் கருத்தை ஏற்று மலர் மண்டபத்தில் மாதவியைக் கண்டு, 'நாடக மகளிர்க் கென்று வகுத்து அமைத்துள்ள கலைகள் அனைத்தையும் முறைப்படிக் கற்றுக் கைதேர்ந்த அழகுடைய கணிகையாகிய மாதவி தாபதக் கோலங் கொள்வது நாணந்தருஞ் செயலேயாகும் என்று ஊரார் இகழ்ந்துரைக்கின்றனர்' என்று கூறினாள். வசந்த மாலை தூது சித்திராபதி நினைத்த பயனை விளைக்கவில்லை.

சித்திராபதி கணிகையாகப் பிறந்து கணிகை யாகவே வாழ்ந்தவள். கணிகையர் கணிகையராகவே வாழவேண்டும், பழங்குடியிற் பிறந்த பெண்டிரே பத்தி னிப் பெண்டிராய் வாழ்வதற்கு உரியர், கணவன் இறந் தால் தாபதநிலை ஏற்று வாழ்வதும் பத்தினிப் பெண்

டிர்க்கே உரியது என்றும் அவள் கருதினுள். அக்காலச் சமுதாயத்தில் நிலவிய கொள்கையும் அஃதே யாகும். தான் தாபதநெறி நிற்கவும், தன் மகளைத்தான் விரும்பிய நல்லறத்தில் புகுத்தவும் மாதவிக்கு உரிமை இல்லை என்று புகார் மக்கள் கருதினர்; அவ்வாறே சித்திராபதி யும் கருதினுள்.

பிறப்பொழுக்கம் குன்றுது அவரவர் குல ஒழுக்கங் குன்றுது அவரவரை வாழவைப்பது அரசன் கடமை என்ற எண்ணமும் அற்றை நாள் புகாரில் இருந்தது. எனவே, மாதவியின் தவருன போக்கைத் தடுத்து நிறுத்துவது அரசன் கடமையாகும் என்ற உறுதியான எண்ணம் சித்திராபதிக்கு உண்டாயிற்று. அதனை எடுத்துக் கூறி அரசனிடம் குறைவேண்டி நிற்கச் சித்திராபதி துணிந் தாள். அந்த முயற்சியில் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இருந்தது. அரசனுல் மாதவி யின் தாபத ஒழுக்கத்தைத் தடுத்து நிறுத்தி அவளை வழிப் படுத்தத் தவறினுல், 'குல ஒழுக்கங் குன்றிய நாடக மகளிர் செங்கல் ஏற்றப்பட்டு நாடக அரங்கத்தைச் சுற்றிவந்து, அரங்கக் கூத்தியர் மனையகம் புகாது வடு வோடு வாழ்வதேபோல் யானும் வாழ்வேன்' என்று வஞ்சி னங் கூறி அரண்மனை நோக்கிச் சித்திராபதி சென்றுள். அவ்வேகத்தில் சென்ற அவள், அரசனிடஞ் செல்லாமல் அரசகுமாரனுன உதயகுமரனிடம் சென்று,

'மாதவி மணிமே கலையுடன் எய்திய
தாபதக் கோலம் தவறின் ருே'

எனக் கேட்டு முறைவேண்டினுள். சித்திராபதியின் அம் முயற்சி அவள் கருதிய பயனை விளைக்கத் தவறியது; ஆனுல், மணிமேகலைக்குப் பெருந்துன்பத்தை வகுத்து அமைத்தது.

## மாதவியின் மனக்கோள்

குலமகளிர் மேற்கொண்ட இல்வாழ்க்கை நெறியை மாதவி பாராட்டினாள்; உயர்நெறி என மதித்து ஒழுகினாள். எனினும், துறவு நெறிப்படுவதே மணிமேகலைக்குப் பொருந்துவதாகும் என அவள் எண்ணினாள். மணிமேகலையின் அழகுக்குத் தன் மனத்தைப் பறிகொடுத்து, அவளைக் காதலித்த அரசகுமரனான உதயகுமரனுக்கும் தன் மகளைத் துணைவியாக்க மாதவி விரும்பவில்லை. மாசாத்துவான் மகனான பெருஞ் செல்வத்துக் கோவலனைக் காதலித்தும், கற்பு வாழ்க்கை நடத்தியும், கணிகையர் குலத்திற் பிறந்தமையால் தன் வாழ்வு புகழின்றிக் கழிந்தது அவளுக்கு எச்சரிப்பாக அமைந்தது. அரசன் மகனை மணந்தாலும் மணிமேகலையின் வாழ்வு அவ்வாறே ஆகலாம் அன்றோ? எனவே, மணிமேகலையைத் துறவு நெறியாகிய மிக்க நல் அறத்தில் வழிப்படுத்துவதில் அவள் கண்ணுங் கருத்துமாய் இருந்தாள்.

# 15. துறவுநிலை

## பௌத்த நெறி

மாதவி பெண்மை நலன் குறைவறப் பெற்று, கலையையும் கற்பையும் அணியாகப் பூண்டு வாழ்ந்த நங்கை. அக்காலச் சமுதாயக் கொடுமையால் உரிமை வாழ்க்கை வாழும் பேறு கிட்டாமல் இகழுரைக்கும் பெருந் துயரத்திற்கும் அவள் ஆளானாள். காதலனை இழந்து இம்மையில் இழந்த இன்பவாழ்வை மறுமையிற் பெறலாம் என்ற உள்ள உறுதியுடன் கற்புடை நல்லார் மேற்கொள்ளும் தாபத நிலையும் அவளுக்கு உரியது அன்று என்று சமுதாயம் கருதிற்று. கைம்மை நோன்பு இயற்றிய மாதவியின் செயல் நாணத் தக்கது என்று ஊரார் கூறித்திரிந்தனர். அவள் பிறந்த குலத்தால் விளைந்த அக் கொடுமையின் பிடிப்பில் நின்று தப்பி, அமைதியையும், உரிமையையும் பெற்று வாழும் ஒரு நெறியை அவள் உள்ளம் நாடி நின்றது. அந்நிலையில், பௌத்த சமயம் பற்றிய எண்ணம் அவள் மனத்திலே இடம் பெற்றது. துன்பக் கடலைக் கடப்பதற்கு அஃது ஒன்றே உறுபுணையாகும் என அவள் உறுதி பூண்டாள்.

## அறவண அடிகள்

அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் அறவண அடிகள் என்ற பௌத்தத் துறவி ஒருவர் இருந்தார். அவர் நெடுநாள் வாழ்ந்து, பல தலைமுறைகளில் நிகழ்ந்த செய்திகளை நேரிற்கண்ட பேரறிவு மிக்க பெருமுதுதுறவி. வடக்கில் கங்கையாறு முதல், தெற்கில் இலங்கை

யில் உள்ள பாதபங்கயமலை வரை உள்ள நிலப்பரப் பெங்கும் பலகால் சென்று பௌத்த நெறியைப் போதித்த பெரியார் அவர். பௌத்த நெறி முறைகளையும், ஒழுக்க நியதிகளையும் மக்கள் மனங்கொள்ளுமாறு அறிவுறுத்தி அவர் வெற்றியுங் கண்டார். இறந்தகால நிகழ்கால எதிர்கால உணர்வையும், வானூடெழுந்து இடம்விட்டு இடஞ்செல்லுதலுமாகிய தேரக்குரிய ரித்தி (சித்தி) களையும் அவர் பெற்றிருந்தார். அரசனாலும், அரச குடும்பத்தின ராலும் நன்கு மதிக்கப்பட்டிருந்த அவர், புகாரில் இருந்த ஒரு பௌத்தப் பள்ளிக்குத் தலைவராகவும் இருந்தார். பிற் காலத்தில் அவர் காஞ்சிபுரத்தில் தங்கிப் பௌத்த சமயத் தைப் போதித்தார் என்று மணிமேகலை கூறும். காஞ்சி புரத்தில் அறப்பணஞ்சேரி என்னும் ஒரு தெரு இன்றும் உள்ளது. அது அவர் நினைவாக அமைந்த அறவணஞ் சேரி என்ற பெயரின் மருஉ என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.

### வாய்மை கேட்டாள்

கோவலனை இழந்து மன அமைதி குன்றி, வழியறி யாது மயங்கி நின்ற மாதவி, மணிமேகலையுடன் அறவண அடிகள் வாழ்ந்த பௌத்தப் பள்ளிக்குச் சென்று அவர் காலில் விழுந்து வணங்கினாள். வயதால் முதிர்ந்து, ஒழுக்க நிலையில் கனிந்து, அருள் ஒழுகும் முகத்து அடி களிடம் மாதவி தன் மனத்தைத் திறந்து தன் துன்ப நிலை களையும், தனக்குற்ற சமூகக் கொடுமைகளையும், தன் மகள் மணிமேகலையைப் பற்றிய தன் கவலையையும் சொல் லிச் சரணடைந்தாள். அடிகள் அவள் நிலையை அவ ளுக்கு உணர்த்தி அவளைப் பௌத்த நெறிப்படுத்த விரும்பினர்.

வீடுபேறடைவதற்கு ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளவேண்டிய உண்மைகள் நான்கு. அவை: நோய், நோய் காரணம், நோய் நீக்கும் வாயில், நோய் நீங்கும் வழி என்பனவே. அவற்றுள் நோய் எனப்படுவது இவ்வுலகத்தில் பிறந்தார் அடையும் பிணி, மூப்பு, சாக்காடு, துன்பம், புலம்பல், கவலை, கையறுநிலை ஆகிய எல்லாத் துன்பங்களுக்கும் புலன்களால் உண்டாகும் பற்றுக்களே காரணம் என்று அறிந்துகொள்ளுதலேயாகும். நோய் காரணம் என்பது துன்பம் விளைவிப்பதற்குக் காரணமாக இருப்பவைகளை உணர்ந்து கொள்ளுதலேயாகும். நோய் நீக்கும் வாயில் என்பது நோயையும், நோய் காரணத்தையும் நன்கு அறிந்து அவற்றிற்கு ஆசைதான் காரணம் என்பதை நன்கு உணர்ந்து, நோய் நீக்கும் வாயிலை உணர்ந்து கொள்வதாகும். நோய் நீங்கும் வழி என்பது நோயையும், நோய் காரணத்தையும், நோய் நீக்கும் வாயிலையும் உணர்ந்து துன்பத்தைப் போக்கி, வீடு பேருகிய நிர்வாண நிலை அடைவதற்கு மேற்கொள்ளும் வழிகளாகும். இந்நான்கும் பௌத்த சமயத்தவரால் நான்கு வாய்மைகள் என வழங்கப்படும். அறவண அடிகள் மாதவிக்கு அவற்றைத் தெளிவாக விளக்கிக் கூறி, துன்பத்தைப் போக்கிப் பேரின்பமாகிய வீடுபேற்றிற்கு வழிகாட்டினார்.

**சீலம் உணர்ந்தாள்**

வாய்மைகள் நான்கினை உணர்ந்தவர்கள் மேற்கொண்டு ஒழுகுவதற்காகப் பௌத்த சமயத்தில் சீலங்கள். வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பஞ்ச சீலம், அட்ட சீலம், தசசீலம் என மூவகைப்படுத்தி யுரைப்பர். அவை முறையே ஐந்து, எட்டு, பத்து நல்லொழுக்க விதிகளைப் பெற்று விளங்கும். அம்மூன்று வகைச் சீலங்களுள் இல்லறத்தாருக்கு உரியது பஞ்சசீலமே. பஞ்ச

சீலத்தின் ஐயொழுக்கங்கள் இவை: உயிர்களைக் கொல்லா மலும் அவற்றிற்குத் தீங்கு செய்யாமலும் இருத்தலோடு அவற்றிடம் அன்பாக இருத்தல் வேண்டும். பிறர் பொருளுக்கு ஆசைப்படாமலும், அவற்றைத் திருடாமலும் இருத்தல் வேண்டும்; கற்பு நெறியில் மட்டும் இன்பம் துய்த்தல் வேண்டும்; உண்மையே பேசுதல் வேண்டும், பொய் பேசவே கூடாது; அறிவு மயக்கத்தையும் சோம் பலையும் உண்டாக்கும் இயல்புள்ளனவாகிய மதுவகைகளை உண்ணுதல் கூடாது என்பனவே.

இவ்வைந்து ஒழுக்க நெறிகளே இல்லறத்தாருக்கு உரியன. கணவனோடு வாழ்ந்து, கணவனை இழந்து, மகள் வாழ்வு பற்றிய கடமை உணர்வும் பெற்று விளங்கிய மாதவிக்கு, இல்லறத்தார்க்கு உரிய பஞ்ச சீலமே ஏற்றதென்று தெரிந்து, அதனை அவளுக்கு உப தேசஞ் செய்தார் அறவண அடிகள்.

## பௌத்தத் துறவியானாள்

கோவலன் இறந்த செய்தி கேட்ட அளவில் மாதவி மேற்கொள்ள உறுதி பூண்டது இல்வாழ் பெண்டிரின் ஒழுக்க நெறியாகிய தாபதநிலையேயாகும். இப் பிறப்பில் இழந்த இன்பத்தைக் கணவனோடு மறுபிறப்பில் குறை வறப் பெறுவதற்காக இயற்றப்படும் கைம்மை நோன்பே அத்தாபத நிலையாகும். அறவண அடிகளிடம் வாய்மை கேட்டுச் சீலம் உணர்ந்தபின் பிறப்பால் வருவது துன்பமே என்ற தெளிவு மாதவிக்குப் பிறந்தது. அத் தெளிவின் முன் தாபதநிலை ஒரு பொருளற்ற துன்ப நிலையாகவே காட்சியளித்தது. அத்துன்பநிலை வருங்காலத் துன்பத் திற்கு நிலைக்களனாகும் மறுபிறப்பிற்கே வித்திடுவதால் அதனைக் கடிந்து ஒதுக்குவதே அறிவுடைமை என்று அவள்

கருதினாள். எனவே, அதனை விடுத்துப் பிறவாநிலையாகிய பேரின்பத்தை விளைக்கும் துறவு நிலையை மேற்கொள்ள உறுதி பூண்டாள் மாதவி. அவள் உறுதியை அறிந்த அறவண அடிகள் அவளுக்கு ஆசிகூறி, மணிமேகலைக்கும் அவளுக்கும் மாதவர் உறைந்த தவப் பள்ளியில் இடமளித்தார்.

## துறவோடு தாய்மை

பிற துறவிகளுக்கு இல்லாத பொறுப்பு ஒன்று மாதவிக்கு இருந்தது. எத்தகைய ஆதரவும் இல்லாமல், தனக்கு நேர்ந்த அதே சமுதாயக் கொடுமைக்கு இரையாகும் நிலையில் இருந்த மணிமேகலை பற்றிய கடமை அடிப்படையில் எழுந்த எண்ணமே அந்தப் பொறுப்பாகும். பருவ நலனும் எழிலும் ஒருங்கே பெற்றிருந்த மணிமேகலையை மாதவர் பள்ளியில் தன்னோடு வாழச் செய்வது எங்ஙனம்? அவளைத் துறவு நெறியில் புகுத்துவது அவ்வளவு எளிய செயலோ?

மக்கள் தாங்கிய உடல் எவ்வளவு வனப்புடையதாக இருந்தாலும், அதன் உண்மை நிலையை உணர்ந்த முதறிவினருக்கு அது இழிவுடையதாகவே காணப்படும். வினைப் பயனால் தோன்றி, வினையையே விளைக்கும் தன்மையை உடையது மனித உடல், அதற்குச் செய்யப்படும் பல்வகை ஒப்பனைகளையெல்லாம் நீக்கப்பட்டால் வெறும் தசைபிண்டமாகவே எஞ்சி நிற்கும். மூப்பு, இறப்புக்களையும், கொடும்பிணிகளையும் அது தனக்கு உரியனவாகப் பெற்றுள்ளது. அது பல்வகை ஆசைகளுக்கும் உறைவிடமாகத் திகழ்ந்து பகையும் சினமும் வாழ்வதற்கென்று அமைந்த குடியிருப்பு இடமாக விளங்குகின்றது. பலவகைத் துன்பங்களையும், கவலை,

கையறவு, புலம்பல் முதலியவற்றையும் தனது உடைமைப் பொருட்களாகச் சேர்த்து வைத்துள்ளது. அவற்றை யெல்லாம் வாழ்க்கையில் தெரிந்திருந்த மாதவிக்கு அறவண அடிகளின் உபதேசம் முழுப்பயன் விளைத்தது. மனித வாழ்வின் தன்மையை ஒரு சிறிதும் அறியாத மணிமேகலைக்கு அவற்றை உணர்த்துவது யாங்ஙனம்? பருவ மங்கையான மணிமேகலையின் மனத்தில் அவை உற்று உறுபயன் விளைக்குமோ? கணிகையர் குலத்தில் பிறந்தால் தன்னை எதிர் நோக்கிக் காத்திருக்கும் சமுதாயக் கொடுமைகளுக்கும், உடலின் புனமை அறியா இளைஞருக்கும் மணிமேகலையை விலக்கிக் காத்துத் தான் மிக்க நல்லறம் என்று கண்ட துறவு நெறியில் புகுத்த மாதவி ஆவன செய்ய எண்ணங் கொண்டாள். பௌத்த சமயம் உறுதுணை நல்கும் என்ற நம்பிக்கையும் அவளுக்கு இருந்தது.

# 16. பழம் பிறப்புணர்தல்

## ஏதுநிகழ்ச்சி எதிர்ந்தது மணிமேகலைக்கு?

தவப்பள்ளி வாழ்க்கை மாதவிக்கும் மணிமேகலைக்கும் புத்தம்புதிய சூழ்நிலைகளை அளித்தன. அறவுரை கேட்டலும், அறவோர்ப் பணிதலும், மலர்தொடுத்துப் பகவனுக்கு அணிந்து வழிபடுவதும் அவர்கள் இருவரும் மேற்கொண்ட ஒழுக்கங்கள். நகரில் நடந்த பற்பல விழாக்களும், கொண்டாட்டங்களும் அவர்களுக்குப் பொருளற்ற நிகழ்ச்சிகள் ஆயின.

அவ்வாண்டு புகாரில் நடந்த இந்திர விழாவிற்கு மாதவியும் மணிமேகலையும் செல்லவில்லை. ஊரார் அதனை ஒரு குறையாகக் கொண்டு பலபடப் பழித்தனர். மாதவியின் தாயான சித்திராபதிக்கு மாதவியும் மணிமேகலையும் தவப்பள்ளியில் உறைவதும், துறவு நெறியை மேற்கொண்டு ஒழுகுவதும், விழாக்களில் கலந்து கொள்ளாதிருத்தலும் பெருந்துன்பத்தை விளைத்தன. ஊரார் கூறும் பழிச்சொல்லை மாதவிக்குக் கூறுமாறு அவள் சுதமதிக்குக் கூறினாள். சுதமதியும் சித்திராபதி போன்றே எண்ணினாள் ஆதலின் அவள் சொன்ன செய்தியை அவள் விருப்பப்படியே மாதவிக்கு உரைத்தாள். மாதவிக்கு ஊரார் கூறிய பழிச்சொல் நாணந் தருவதாக இல்லை. மிக்க நல்லறம் என்று அவள் மேற்கொண்ட துறவு நெறிக்கு, விழாக்களில் ஆடல் நிகழ்த்துவது முரணானது என்பதைச் சுதமதிக்கு எடுத்துக் கூறினாள். மணிமேகலை விழாக்களில் கலந்துகொள்ளாமைக்கும் மாதவி ஏற்ற ஒரு காரணத்தைக் கூறினாள். மணி

மேகலையைக் கணிகையர் குடியிற் பிறந்தவள் என்று எண்ணி இருக்கும் சமுதாயத்தின் கருத்து பிழைபட்டது என்பதைச் சுதமதிக்கு அவள் உணர்த்தினுள். மதுரையில் கோவலன் கொல்லப்பட்டதை அறிந்து, தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிறுவி, கொடுமை விளைத்த மதுரையைத் தீக்கு இரையாக்கி, சேர நாடடைந்து கணவன் எதிர்கொள்ள விண்ணுலகடைந்த குலமகளான கண்ணகியின் மகளே மணிமேகலை என்று மாதவி கூறினுள். அத்தகைய உயர்குடிப் பிறப்புடைய மணிமேகலை விழாவில் ஆடுவாளோ? அவள் இந்திரவிழாவில் நாட்டியம் ஆடாததை அலராக உரைப்பதன் பொருந்தாமையை மாதவி தெளிவாக விளக்கிக் கூறிச் சுதமதியை விடுத்தாள்.

கோவலன் மதுரையில் கொலை செய்யப்பட்ட செய்தியை மாதவி சுதமதிக்குச் சொல்லிக்கொண்டிருந்தபொழுது மணிமேகலையின் காதிலும் அது விழுந்தது. மலராத அரும்பில் அடங்கி இருக்கும் நறுமணம் ஏற்ற செவ்வியில் வெளிப்படுவதே போல், மணிமேகலையின் உள் அடங்கி இருந்த முன் வினைக் காரணங்கள் கோவலன் கொலைச்செய்தி வழி நற்பயன் கொடுக்க வெளிப்பட்டன. கோவலன் கொலைச் செய்தியே மணிமேகலைக்கு நற்பயன் விளைக்கும் ஏதுநிகழ்ச்சியாயிற்று. கொலைச் செய்தி கேட்டு அழுதாள் மணிமேகலை. அவள் கண்ணீர் பட்டு அவள் தொடுத்துக் கொண்டிருந்த பூமாலை தூய்மை இழந்தது. அவள் மனத்துயரைப் போக்குவதற்காக, மாதவி அவளைப் புது மலர்க் கொய்துவருமாறு சுதமதியுடன் அனுப்பினுள். இருவரும் அறவோர் வனமான உவவனத்திற்கு மலர் கொய்யச் சென்றனர். அவ்வுவவனம் துறவோர் மட்டும் செல்வதற்கு உரிய தவவனம்.

மணிமேகலையும் சுதமதியும் நகர வீதி வழியே உவவனத்தை நோக்கிச் சென்றதை அறிந்தான் உதய குமரன். பலநாட்களாகத் தன் மனத்தே குடிகொண்டிருந்த மங்கை அன்று தவத்தோர் உறைவிடத்தை விட்டு உவவனம் நோக்கிச் சென்றது அவனுக்கு உவகையையும், வியப்பையும் பிறப்பித்தது. அவளை எவ்வாறேனும் தன்வயப்படுத்தும் எண்ணத்தோடு அவன் அறவோர் வனம் என்றும் பாராமல் உவவனத்துள் சென்றான். அவன் வரவை முற்கூட்டியே உணர்ந்து கொண்ட சுதமதி, மணிமேகலையை அவண் இருந்த ஒரு பளிங்கு அறைக்குள் அடைத்துக் காத்தாள். தன் எண்ணம் கைகூடாமையால் உதயகுமரன் வருந்தினன். மாலைப் பொழுதாகி எங்கும் இருள் பரந்ததால், மணிமேகலை உவவனத்திலிருந்து வெளி வருங்கால் அவளைக் கவர்ந்து கொள்ளும் நோக்கத்தோடு உவவனத்தை விட்டு வெளிச் சென்றான்.

## மணிமேகலா தெய்வம்

கோவலன் குடும்பத்தினருக்குக் குலதெய்வமாக அமைந்து விளங்கியது மணிமேகலா தெய்வமாகும். அஃது அவன் முன்னோருள் ஒருவனைக் கப்பல் சேதத்திலிருந்து காப்பாற்றி உதவியது. அதன் பெயரே மணிமேகலைக்கு வைக்கப்பட்டது. மணிமேகலைக்குப் பெயர் வைக்கப்பட்ட அன்று இரவு அது மாதவியின் கனவில் தோன்றி, நனவில் உரைப்பதேபோல் மணிமேகலையின் எதிர்காலம் பற்றி உரைத்தது. மாதவிக்கு மகளாய்ப் பிறந்த அக்குழந்தை வளர்ந்து காமனைச் செயலற்றுப் போகச் செய்யும் என்றும், உலகத்தின் துன்பத்தைக் கெடுக்கும் ஒரு தவக் கொடியாக விளங்கும் என்றும் அது கூறிப் பாராட்டியது. மாதவிக்கு மணிமேகலை மேல்

இருந்த பொறுப்பு மணிமேகலா தெய்வத்திற்கும் இருந்தது. காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து ஐம்பது யோசனைத் தூரத்தில் உள்ள மணிபல்லவத் தீவே அதன் உறைவிடமாக இருந்தது. பூம்புகாரில் இந்திரவிழாக் கொண்டாடப்படும் இருபத்தெட்டு நாட்களும் அது புகாரிலேயே தங்குவது வழக்கம். இந்திரவிழாக் கொண்டாடாது புகார் மக்கள் சோர்ந்துபடின் அதனை அழிப்பதற்கு ஆணையும் அது பெற்றிருந்தது.

உவவனத்தில் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் மணிமேகலா தெய்வத்திற்குப் புலனாயிற்து. உதயகுமரன் மணிமேகலைமேல் வைத்த உள்ளத்தானுக உவவனத்திலிருந்து வெளிச் சென்றதையும், சித்திராபதி வழி அவளை அடைய அவன் திட்டமிட்டிருந்ததையும் அத்தெய்வம் அறிந்து கொண்டது. சித்திராபதி உதயகுமரன் திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்குவாள் என்பதும் அதற்குத் தெரியும். மணிமேகலைக்கு உதவும் கடப்பாடுள்ள அத்தெய்வம் உவவனம் நோக்கி விரைந்தது. மாயவித்தை செய்யும் ஒரு மடந்தையின் வேடந்தாங்கி உவவனத்துள் சென்று, அவண் இருந்த பாதபீடிகையை வணங்கி நின்றது. அதன் அருகில் மணிமேகலையும் சுதமதியும் வாட்டமுற்று நிற்கக் கண்டு, அதற்குக் காரணம் என்ன என்று வினவிற்று. சுதமதி நடந்தவை அனைத்தையும் கூறினுள். அவற்றைக் கேட்ட மணிமேகலா தெய்வம், உதயகுமரன் மனக்கோளையும், அவன் வகுத்துள்ள திட்டத்தையும் அவர்களுக்குத் தெரிவித்து, அவனிடமிருந்து தப்புவதற்காக, முனிவர் உறைவிடமான சக்கரவாளக் கோட்டத்திற்குச் செல்லுமாறு வழிப்படுத்தியது. அதன் பின்னர், மணிமேகலைக்குச் சக்கரவாளக் கோட்டத்தின் வரலாற்றை, மனித வாழ்க்கையின் நிலையாமையை அறி

வுறுத்தும் வகையில் விரித்துரைத்தது. அந்நிலையில், சுதமதி தூங்கிவிடவே, மணிமேகலாதெய்வம் தன் வித்தையால் மணிமேகலையை மயக்கித் தழுவி எடுத்து ஆகாயவழியாக மணிபல்லவத் தீவுக்கு எடுத்துச் சென்று, அங்கே வைத்தது.

மணிமேகலையைப் பாதுகாப்பாக மணிபல்லவத் தீவில் வைத்த மணிமேகலாதெய்வம், மறுபடியும் புகாரை யடைந்தது; மணிமேகலையை நினைத்தவாறே துயிலற்றுக் கிடந்த உதயகுமரனின் முன் தோன்றி, அவனுக்கு அரச நீதி உரைத்து, தவத்திறம் பூண்ட மணிமேகலை மேல் அவன் வைத்த எண்ணத்தை ஒழிக்குமாறு கூறிற்று. அதன் பின்னர், உவவனத்தில் தூங்கிக்கொண்டிருந்த சுதமதியைத் துயிலெழுப்பி அவளிடம் தன் வரலாற்றைக் கூறி, மணிமேகலைக்குப் பௌத்த நெறியைத் தழுவும் நற்காலம் வந்ததால் அவளை மணிபல்லவத் தீவில் வைத் திருப்பதாகவும் கூறிற்று. மணிமேகலை பழம் பிறப் புணர்ந்து அற்றைக்கு ஏழாம் நாள் புகார்க்குத் திரும்பி வருவாள் என்றும் அது தெரிவித்தது. அச்செய்திகளனைத் தையும் மாதவிக்கு அறிவிக்குமாறும், மணிமேகலா தெய்வமாகிய தான் முன் மணிமேகலைக்குப் பெயர் வைக் கப்பட்ட நாளில் அவள் கனவில் தோன்றி மணிமேகலை யின் எதிர்காலம் பற்றிச் சொன்ன அடையாளச் செய்தியை நினைவுறுத்துமாறும் வேண்டிற்று.

சுதமதி, பின்னர் உலக அறவியின் ஒரு மருங்கில் இருந்த தூணின் முன் சென்றாளாக, அதன் கண் இருந்த பாவை ஒன்று அவள் முற்பிறப்பு வரலாற்றை அவளுக்கு உணர்த்திற்று. முற்பிறப்பில் மாதவியும் தானும் தாரை யும் வீரையும் என்ற பெயரினராக உடன் பிறந்து

துச்சயன் என்ற அரசனை மணந்தனர் என்றும், மணிமேகலையே அப்பிறப்பில் அவர்களுக்குத் தங்கையாக இருந்த இலக்குமி என்றும் கந்துநிலைப் பாவையால் அறிந்தாள். பொழுது புலர்ந்தபின் சுதமதி மாதவியை யடைந்து நடந்தவற்றை யெல்லாம் விடாமற் கூறினாள்.

## மணிமேகலை பெற்ற பேறுகள்

மணிபல்லவத்தில் தன்னந் தனியளாய்க் கவலையோடு தந்தையை நினைத்துப் புலம்பி நின்ற மணிமேகலைக்குப் பழம்பிறப்பு உணர்த்தும் புத்த பீடிகை தோன்றிற்று. அதனைக் கண்ட அளவில் மணிமேகலை தன்வயம் இழந்து, கைகள் தலைமேல் குவிய ஆனந்தக் கண்ணீர் உகுத்து அதனை மும்முறை வலம் வந்தாள். அந்நிலையில் அவளுக்குப் பழம் பிறப்புணர்ச்சி பிறந்தது. அதன் பின்னர் தோன்றிய மணிமேகலா தெய்வம் முற்பிறப்பில் அவள் கணவனாக இருந்த இராகுலனே உதயகுமரன் என்றும், அவள் உடன்பிறந்தவர்களாக இருந்த தாரையும், வீரையுமே மாதவியும், சுதமதியும் என்றும் பழம்பிறப்பு வரலாறுகளைத் தெளிவுறக் கூறிற்று. அதனோடமையாமல், வேற்று வடிவங்கொள்ளவும், ஆகாயவழியாய்ச் செல்லவும், பசியற்றிருக்கவும் உதவும் மந்திரங்கள் மூன்றையும் மணிமேகலாதெய்வம் மணிமேகலைக்கு அருளியது.

பழம்பிறப்புணர்ந்த மணிமேகலை மணிபல்லவ மணற் குன்றுகளிடையே திரிகையில் தீவதிலகை என்ற தெய்வ மாது அவள் முன் தோன்றினாள். அவள் தன் வரலாற்றைக் கூறிக் கோமுகிப் பொய்கையின் சிறப்பையும், அதிலிருந்து புத்தர் பிறந்த நாளாகிய அன்று அமுதசுரபி வெளிப்படுஞ் செய்தியையும் கூறினாள். அமுதசுரபியின் சிறப்பை எடுத்துரைத்த தீவதிலகை, அதனைப்

பெறும் பகுதி மணிமேகலைக்கு உண்டு என்பதையும் தெரிவித்தாள். அவ்வுரைகளைக் கேட்ட மணிமேகலை கோமுகிப் பொய்கையை வலஞ்செய்து நின்றாளாக அமுத சுரபி அவள் கையில் புகுந்தது. அமுதசுரபியைப் பெற்ற மணிமேகலை புத்ததேவனைப் பலபடப் புகழ்ந்து நின்றாள். தீவதிலகை பசியின் கொடுமையை எடுத்துக்கூறி, மணி மேகலை வானூடாகப் புகார் செல்வதற்கு விடையுந்தந்து நீங்கினாள். மணிமேகலை புகாரடைந்து நடந்தவை அனைத்தையும் மாதவிக்கும் சுதமதிக்கும் கூறி, முற் பிறப்பு வரலாற்றையும் அவர்களுக்குக் கூறி அவர்களை வியப்பில் ஆழ்த்தினாள். பின்னர் மூவரும் அறவண அடிகளைத் தரிசிக்கச் சென்றனர்.

## அறவணர்த் தொழுதல்

மாதவி, சுதமதி, மணிமேகலை ஆகிய மூவரும் அறவண அடிகளைக் கண்டு மும்முறை பணிந்து வணங் கினர். மணிமேகலை, அடிகளிடம் உவவனத்தில் உதய குமரனால் நிகழ்ந்தது முதல் மணிபல்லவத்தில் பழம்பிறப் புணர்ந்தது, மந்திரங்கள் பெற்றது, அமுதசுரபி பெற் றது முதலியன ஈருக நடந்த அனைத்துச் செய்திகளையும் அறிவித்தாள். மணிமேகலாதெய்வம் தாரைவீரை என்பார் பழம்பிறப்பு வரலாற்றை அடிகளிடம் தெரிந்துகொள்ளு மாறு பணித்த செய்தியையும், ஆபுத்திரன் வரலாற்றை அடிகளிடம் அறிந்து கொள்வாய் என்று தீவதிலகை உரைத்த செய்தியையும் மணிமேகலை அடிகளிடம் தெரி வித்தாள்.

## பழம்பிறப்பு வரலாறு

முன் ஒருகால், அறவண அடிகள் பாதபங்கய மலை யை வழிபட்டு மீண்ட பொழுது துச்சயன் என்ற அரசனை ஒரு சோலையில் கண்டார். அவனிடம் அவன் மனைவி

யரான தாரைவீரை என்பார் நலம் உசாவினுர். அவன் மனக்கலக்கத்துடன், மதுவுண்ட மயக்கத்தில் வீரை யானை முன் விழுந்து, அதனுல் கொல்லப்பட்ட செய்தி யையும், அத்துயர் தாங்காமல் தாரை உயர்ந்த ஒரு மாடத்தின் மீதேறி அதினின்று விழுந்து இறந்த செய்தி யையும் துன்பத்துடன் சொன்னுன். அவற்றைக் கேட்ட அடிகள் அந்நிகழ்ச்சிகளுக் கெல்லாம் அவர்களின் பழம் பிறப்பு வினையே காரணம் என்றுகூறி, அதற்காக வருந்துவதில் பயனில்லை என்று ஆறுதல் மொழி கூறினுர். அந்தத் தாரையும் வீரையுமே நாடகத்தில் வேடங் களைந்து மறுவேடந் தாங்கிப் புதுக்காட்சியில் காணப்படுவது போல் மாதவியும் சுதமதியுமாகக் காட்சி யளித்தனர் என்று அவர்தம் பழம்பிறப்பு வரலாறு உரைத் தார். தாரையும் வீரையும் பாதபங்கயமலையை வழி பட்ட புண்ணியத்தால் பிற்காலத்தில் மணிமேகலையுடன் கூடி மாதவியும் சுதமதியும் புத்ததேவரின் திருவடியைத் தொழுது வணங்கி, வினை நீங்கப்பெற்று வீடடைவர் என்றும் அடிகள் வருவது உரைத்தார். அடிகள் அமுத சுரபியுடன் நின்று கொண்டிருந்த மணிமேகலைக்கு மக்களுச்கும் தேவருக்கும் ஒத்த ஓர் அறமாகிய பசிப்பிணி தீர்த்தலின் மேம்பாட்டை எடுத்துரைத்து, ஆபுத்திரன் வரலாற்ருேடு அமுதசுரபியின் வரலாற்றையும் விரித் துரைத்தார். உயிர் மருந்தாகிய அமுதசுரபியைப் பெற்ற மணிமேகலை எல்லா உயிர்களின் பசிப்பிணியையும் தீர்த்தற்கு விரைதல் வேண்டும் என்று அடிகள் வழிப் படுத்தினுர். மணிமேகலை அடிகள் ஆணையை ஏற்றுப் பிக்குணிக் கோலம் பூண்டு, கற்புமிக்க ஆதிரை கையால் முதல் பிச்சை ஏற்று, ஊரார் அனைவரும் வியக்க 'யாவரும் வருக' என அழைத்து உண்பித்தாள்.

# 17. மாதவியின் இறுதி வாழ்க்கை

## மணிமேகலை சிறைப்பட்டாள்

மணிமேகலையின் அமுதசுரபியிலிருந்து முதன் முதலாக அமுதம் பெற்று உண்ட காயசண்டிகை என்ற வித்தியாதர மங்கை பன்னீராண்டுகளாக வருந்திய யானைத்தீ என்னும் பெரும்பிணி நீங்கப்பெற்றாள். தணியாத கொடும்பசி தணியப் பெற்ற அவள் மணிமேகலையை வணங்கி ஆகாய வழியாக வித்தியாதர நாட்டை நோக்கிச் சென்றாள். ஆனால், தவறாக விந்தத்தின் மேற் பறந்து சென்றதால், விந்தாகடிகையின் வயிற்றில் அடக்கப்பட்டாள்.

காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த பசிப்பிணியுற்ற அனைவரும் அமுதசுரபியின் அமுதம் உண்டு பசிப்பிணி நீங்கினர். மணிமேகலை அறவோடு தாங்கி அமுதூட்டி நின்ற செய்தியை உதயகுமரன் அறிந்து உலக அறவியுள் இருந்த அவளிடம் 'நீ தவக்கோலம் பூண்டதேன்''? என வினவினான். முற்பிறப்பில் தன் கணவனாக இருந்தவன் ஆதலின், மணிமேகலை அவனை வணங்கி, 'யாக்கையின் இழிநிலை அறிந்து, மிக்க நல்லறம் விரும்பி மேற்கொண்டேன்' என்று பதிலிறுத்து வேற்று வடிவம் கொள்ளற்குரிய மந்திரத்தை உச்சரித்துக் காயசண்டிகை வடிவில் வெளிப்போந்தாள்.

வித்தியாதர நாட்டில் காயசண்டிகை வரவுக்காகக் காத்திருந்த அவள் கணவனான காஞ்சனன் அவளைத் தேடிக் கொண்டே காவிரிப்பூம்பட்டினம் வந்து சேர்ந்

தான். அங்கே, பூதசதுக்கத்திலும், பூஞ்சோலைகளிலும், முனிவர்வாழ் தவச்சாலைகளிலும், மன்றங்களிலும், அம்பலங்களிலும் அவளைத் தேடி இறுதியில் அவள் வடிவில் அறவோடு தாங்கி உணவளித்து நின்ற மணிமேகலையை அவளெனப் பிறழ உணர்ந்து அவளண்டை குறுகினன். அவள் அண்மையில் நெருங்கி காஞ்சனன் அவள் கையிலிருந்த அமுதசுரபியைப் பலபடப் புகழ்ந்தும், தமது பழைய வாழ்க்கைச் செய்திகளை எடுத்துரைத்தும் அவள் கவனத்தை ஈர்க்க ஆவனசெய்தும் அவள் அயலான் என நோக்குவதைக் கண்டு வியப்புற்றான். அவண் நின்ற அரசன் மகனுன உதயகுமரனுக்கும் மணிமேகலை இளமையின் நிலையாமையையும், யாக்கையின் இழிநிலையையும் அன்புடன் கூறித் தெளிவுறுத்தியது அவனுக்குச் சினத்தை பிறப்பித்தது. அரசகுமரனை அவ்விளைஞனை ஒழித்துக்கட்டினல் அன்றிக் காயசண்டிகை தன்னை அடையாள் என்ற உறுதியோடு, அவனைக் கொல்லுவதற்காக, உலக அறவியுள் ஒளிந்திருந்தான் காஞ்சனன். தான் எண்ணியவாறே அவ்விடத்திற்கு வந்த உதயகுமரனைக் காஞ்சனன் வாளால் வெட்டித் தன் திட்டத்தை முடித்துக்கொண்டான்.

உதயகுமரன் இறந்ததை அறிந்த மணிமேகலை தான் மேற்கொண்டிருந்த காயசண்டிகை வேடத்தைக் களைந்து, புலம்பி வெய்துயிர்த்து அவன் உடலைக் கட்டித் தழுவ அருகே சென்றாள். அவண் இருந்த கந்திற்பாவை அவளைத் தடுத்து நிறுத்தி, உதயகுமரன் வெட்டுண்டு இறத்தற்கென்று அமைந்து கிடந்த பழவினையை எடுத்துக் கூறித் தன் வரலாற்றையும் கூறிற்று. பின்னர் அது மணிமேகலையின் வேண்டுகோளின்படி, பிற்காலத்தில் அவளுக்கு நிகழ இருந்த நிகழ்ச்சிகளையும்

தெரிவித்தது. அப்பாவையின் உரைகேட்ட மணிமேகலை ஓராற்ருன் கவலை நீங்கப்பெற்ருள். அரசன் அச்செய்தியை அறிந்து உதயகுமரன் உடலைப் புறங்காடு அடைவித்து, மணிமேகலையைச் சிறைப்படுத்திஞன்.

## சிறை வீடு

இராசமாதேவி தன் மகன் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த மணிமேகலையைக் கொல்லத் திட்டமிட்டாள். அரசனிடம், நயவஞ்சகமாகப் பேசி அவளைச் சிறையினின்று விடுவித்துத் தன் அரண்மனைக்குக் கொண்டுவரச் செய்தாள். முதலாவதாக, அவளைப் பைத்தியம்பிடித்தவள் என்று ஊரார் அறியுமாறு செய்யவேண்டுமென்று கருதி அவளுக்கு மயக்க மருந்து ஊட்டிஞள். மறுபிறப்புணர்ந்த மணிமேகலை அதனை உண்டும் அறிவு மயங்காமல் இருந்தாள். இரண்டாவதாக, அறிவில்லா இளைஞன் ஒருவஞல் அவள் ஒழுக்கத் தூய்மைக்கு மாசுண்டாக்கத் திட்டமிட்டாள். நினைத்த வேடம் எடுக்கும் மந்திரம் பெற்றிருந்த மணிமேகலை, அம்மந்திரத்தை உச்சரித்து ஓர் ஆடவன் வேடம் தாங்கி இருந்ததால் அவ்விளைஞன் மூலம் அரசி செய்ய நினைத்திருந்த கொடுமைத் திட்டம் தோல்வியுற்றது. இறுதியாக, மணிமேகலை நோய்வாய்ப்பட்டமையால் உணவு உண்ணுளாயிஞள் என்று கூறி அவளைப் புழுக்கறையில் அடைத்து வைத்தாள். ஊண் ஒழி மந்திரத்தை உச்சரித்தும் அதன் வன்மையால் மணிமேகலை சிறிதும் கலக்கமற்று இருந்தாள். அவற்றை அறிந்த இராசமாதேவிக்கு வியப்பும், நடுக்கமும் உண்டாயின. மகனை இழந்த துன்பத்தால் செய்த அக்கொடுமைகளை எல்லாம் மன்னித்தருளுமாறு தெய்வத் தன்மை பெற்று விளங்கிய மணிமேகலையை அரசமாதேவி வேண்டிஞள். அரசியிடம், உதயகுமரன் முற்பிறப்பில்

தன் கணவனாக இருந்த செய்தியைக் கூறி, தன் முற் பிறப்புக் கணவனின் தாயின் தீவினையைப் போக்கி நல் வழிப்படுத்தவே வேற்றுருக் கொண்டு, ஆகாய வழியாகச் செல்லாது அவண் இருந்தமையையும் அவளுக்குப் பஞ்ச சீலமும் உரைத்து அவளை வணங்கினாள்.

மணிமேகலையின் நிலைமையை அறிந்த மாதவியும் சுதமதியும் அறவணஅடிகளுடன் அவளைச் சிறைமீட்கும் எண்ணத்தோடு இராசமாதேவியிடம் சென்றனர். இராச மாதேவி அவர்களை வரவேற்று, அறவண அடிகளுக்கு உரிய மரியாதை செய்து, அவரை ஆசனத்தில் அமர்த்தி னாள். பின்னர் அவர், பிறப்பும், மூப்பும், பிணியும், இறப் பும் மனித வாழ்வின் இயல்பான கூறுகளே என்று கூறி, இராசமாதேவிக்குப் பன்னிரு நிதானங்களையும் உப தேசித்து, நல்லறம் பேணி நல்லறம் கடைப்பிடித்து ஒழுகுமாறு பணித்தார். அந்நிலையில் மணிமேகலை அடிகள் முன் தோன்றி அவரை வணங்கி, அவண் இருந்த இராசமாதேவி, மாதவி, சுதமதி ஆகியோரை அறவண அடிகள் அறவுரைவழி நிற்குமாறு வேண்டிக் கொண்டு, உதயகுமரனைக் கொன்ற கொலைகாரி என்று தன்னை ஊர் தூற்றுவதை விரும்பாததால் வானூடாக ஆபுத்திரன் நாடு அடைந்தாள்.

## பூம்புகாரின் அழிவு

சோழ அரசனுக்கு நாககன்னி பீலிவளை பெற்ற குழந்தையைக் கம்பளச் செட்டி வசம் ஒப்புவித்துச் சோழ னிடம் சேர்க்குமாறு அவள் வேண்டினாள். கம்பளன் குழந்தையுடன் பெருமகிழ்ச்சியுடன் காவிரிப்பூம்பட்டினம் நோக்கிக் கப்பலில் வந்துகொண்டிருந்த பொழுது கப்பல் உடைந்து போயிற்று. கப்பலில் இருந்து தப்பிச் சோழ

நாடு போய்ச் சேர்ந்தோர் சிலர் குழந்தை பற்றிய செய்தியைச் சோழனுக்கு அறிவித்தனர். குழந்தைமேல் இருந்த அன்பு மிகுதியால் அவன் கடற்கரையை அடைந்து அதைத் தேடிக்கொண்டே அலைந்து திரிந்தான். புகார் மக்கள் ஆண்டுதோறும் கொண்டாடி வந்த இந்திரவிழா அவ்வாண்டு கொண்டாடப்படவில்லை. அதனால், மணிமேகலா தெய்வம் சபிக்க, கடல் பொங்கி நகரை அழித்தது. அரசனும் அரசியற் சுற்றமும் வேறிடஞ் சென்றனர். அறவண அடிகளும் மாதவி சுதமதியரும் எவ்விதத் துன்பமும் இல்லாமல் வஞ்சிமாநகரம் சென்றனர். அச் செய்தியை ஆபுத்திரன் நாட்டிலிருந்து மணிப்பல்லவம் வந்திருந்த மணிமேகலையிடம் தீவதிலகை என்ற தெய்வ மாது செப்பினள். அதனைக்கேட்ட மணிமேகலை தன்னோடு இருந்த புண்ணிய இராசனைத் தன்நாட்டிற்குச் செல்லுமாறு பணித்துத், தான் வஞ்சிமாநகரம் நோக்கி வான வழியே சென்றாள்.

## வஞ்சி நிகழ்ச்சிகள்

வஞ்சியை அடைந்த மணிமேகலை நகர்ப்புறத்தே இருந்த கண்ணகி கோயிலுள் சென்று கண்ணகியை வணங்கினாள். கண்ணகி பழவினையால் தானும் தன் கணவனும் அடைந்த துன்பங்களை யெல்லாம் கூறி, காரிப்பூம் பட்டினத்தில் உள்ள இந்திரவிகாரம் ஏழினைத் தானும் தன் கணவனும் ஏத்திய புண்ணியத்தாலே தேவர்களான உண்மையை அறிவித்தாள். கண்ணகி மணிமேகலைக்கு எதிர்காலத்தில் நடக்க இருந்த பலவற்றை எடுத்துரைத்தாள். அதன் பின்னர், மணிமேகலை ஒரு முனிவர் வேடம்தாங்கி வஞ்சியுள் புகுந்தாள். வஞ்சியுள் அக்காலத்தில் வாழ்ந்த பல்வகைச் சமய வாதிகளையும்

கண்டு அளவை வாதம் முதல் பூதவாதம் ஈருகவுள்ள கொள்கைகள் அனைத்தையும் அறிந்தாள்.

பற்பல சமய உண்மைகளையும் அறிந்துகொண்ட உண்மையோடு, அறவண அடிகளையும் மாதவி சுதமதி யரையும் காணுதற்கு எழுந்த வேட்கையோடு பௌத்த முனிவர் தங்கியிருந்த தவச்சாலையுள் சென்றாள். அங்கே, தவஞ்செய்து கொண்டிருந்த மாசாத்துவானை அவள் கண்டு, அவனைப் பணிந்து, அவனிடம் தன்வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், தான் பெற்றுள்ள பேறுகளையும், அறவணஅடிகளைக் காணும் வேட்கையோடு வஞ்சி வந்தமையையும் கூறினாள். அவற்றைக்கேட்ட மாசாத்துவான் அன்போடு தன் வரலாற்றையும், வேறுபல செய்திகளையும் விளங்கக்கூறி, அறவணஅடிகள் மாதவி சுதமதியருடன் காஞ்சிமாநகருக்குச் சென்ற செய்தியையும் கூறினான். காஞ்சியில் மழை இல்லாமையால் உணவு இல்லாது உயிர்கள் வறுமையுற்று வாடினதையும், அதனால் உயிர்கள் பல இறந்து பட்டதையும், அந்நகரில் இல்லா மாக்களுக்கு ஈவோர் இல்லாதே போயினமையும், அதனால் முனிவர் பலர் அந்நகர் விட்டு வஞ்சி சென்று வாழ்வதையும் அறிவித்து, காஞ்சிக்கு உடனே சென்று உயிர்களைக் காப்பது மணிமேகலைக்குக் கடனாகும் என்றான். மாசாத்துவான் உரைகேட்ட மணிமேகலை, அவனை வணங்கி விடை பெற்றுச் செல்வநிலை கெட்டு, அழகு குன்றிப் பொலிவிழந்து இருந்த காஞ்சிமாநகர் நோக்கி வானூடாகச் சென்றாள்.

### காஞ்சி வாழ்க்கை

அக்காலத்தில் காஞ்சியை இளங்கிள்ளி என்ற ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவன் அந்நகரின் நடுவண்

புத்த சைத்தியம் ஒன்றைக் கட்டினான், அவனுக்குக் கந்திற்பாவை அவன் எதிர்காலத்தில் செய்யவேண்டுவன பலவற்றை முன்னறிவித்தது. மழை வறண்டு வாட்ட முற்று இருந்த அந்நகரில் தெய்வத்தன்மை யுள்ள ஒரு பாத்திரத்துடன் ஒரு மடந்தை தோன்றுவாள் என்றும், எடுக்க எடுக்கக் குறையாத உணவைச் சுரக்கும் அப் பாத்திரத்தால் அவள் உலகை உய்விப்பாள் என்றும் அப்பாவை அவனுக்குக் கூறிற்று. மேலும் அது, அம் மாது தங்குவதற்காகக் கோமுகி என்னும் பொய்கையை யும், அதனையுடைய மணிபல்லவத் தீவும் காஞ்சிக்கு வந்தன என எண்ணத்தக்க முறையில் நகர வீதியில் ஒரு பொய்கையையும், அதனைச் சூழ ஒரு சோலையையும் உண்டுபண்ணுமாறும் கூறிற்று. அத்தெய்வம் கூறிய வாறே அரசன் புத்த சைத்தியத்தின் தென்மேற்குத் திசையில் பொய்கையையும் சோலையையும் அமைத்து அத்தெய்வமாதின் வரவுக்காகக் காத்திருந்தான்.

வஞ்சியிலிருந்து சென்ற மணிமேகலை காஞ்சியின் நடுவிலிருந்த புத்த சைத்தியத்தை வணங்கி, அதன் தென்மேல் திசையிலிருந்த சோலையுள் தங்கினாள். அவள் பசியுற்றிருந்த அனைவருக்கும் அமுதசுரபியி லிருந்து அமுதம் வழங்கி அவர் இன்முகங் கண்டு மகிழ்ந் தாள். மணிமேகலை பற்றியும், அவள் தாங்கிய தெய்வத் தன்மை பற்றியும் அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. அச் செய்தி கேட்ட அரசன் கந்துநிலைக் கடவுள் குறிப்பிட்ட மாது அவளே என உணர்ந்து அவளை வணங்கத் தன் அமைச்சருடன் விரைந்து சோலைக்குச் சென்றான். சோலை யில் மணிமேகலையைக் கண்ட அரசன் நாட்டில் நிலவிய பசிக்கொடுமையையும், அதனால் அவன் அடைந்த துன்பத் தையும், கந்திற்பாவை கூறிய செய்தியையும் கூறி,

அதன் வேண்டுகோளின்படித் தான் அமைத்த பொய்கையையும் சோலையையும் அவளுக்குக் காட்டினுன். மணிமேகலை தன் பழம்பிறப்புணர்த்திய புத்தபீடிகையை அச் சோலையில் நிறுவித்து, மணிமேகலா தெய்வத்திற்கும், தீவதிலகைக்கும் கோயில்களையும் உண்டாக்கி அவற்றிற்குப் பூசையும் விழாவும் நிகழ்த்தி, அமுதசுரபியால் மக்களை ஊட்டி வந்தாள்.

அறவண அடிகள் அந்நிகழ்ச்சிகளையெல்லாம் கேட்டு, மாதவியோடும் சுதமதியோடும் மணிமேகலை இருந்த அவ் அறச்சாலையை அடைந்தார். மணிமேகலை எதிர்கொண்டு விரைந்து சென்று அவர்களை வணங்கி, 'யான் செய் புண்ணியம் அனைத்தும் தப்பாது பலிப்பதாக' என வேண்டி அறவண அடிகளைப் பணிந்தாள். வணங்கிப் பணிந்த மணிமேகலையிடம் அறவண அடிகள் பூம்புகாரைக் கடல் உண்ட வரலாற்றையும், பிற நிகழ்ச்சிகளையும் கூறினுர். மணிமேகலை அச் செய்திகளைத் தீவதிலகை மூலம் தான் முன்னரே உணர்ந்தமை கூறி, பற்பல சமய வாதிகளின் கொள்கைகளையும் கேட்டு, அவற்றின் பொருந்தாமை உணர்ந்து நின்ற தனக்கு உண்மைப் பொருளை உரைக்குமாறு அறவண அடிகளிடம் வேண்டினுள்.

## பௌத்த சமய உண்மைகள்

அறவண அடிகள் அறம் உணரும் பக்குவ நிலை பெற்று நின்ற மாதவி, சுதமதி, மணிமேகலை என்ற மூவருக்கும், காட்சி அனுமானம் என்னும் இரு அளவைகளின் இலக்கணத்தையும், அவற்றின் போலிகளையும் உண்மை அறிவு பெறும் கருவிகளாக முதற்கண் உபதேசித்தார். அவ்வுபதேசம் பெற்ற அம்மூவரும் புத்தம் சரணங்

கச்சாமி, தர்மம் சரணங்கச்சாமி, சங்கம் சரணங்கச்சாமி என்ற மும்மணிகளையும் மும்முறை வணங்கி அறவண அடிகளைச் சரணடைந்தார். பௌத்த சமய நெறி உணரும் மனநிலை பெற்ற அவர்களுக்கு அடிகள் பௌத்த சமய அறமுரைத்தார். 'உயிர்கள் அறிவற்று இருந்த காலத்தில் தேவர்கள் வேண்ட புத்ததேவன் துடிதலோகத்தில் இருந்து இவ்வுலகத்தில் அவதரித்தான். அரசமரத்தடியில் அமர்ந்து தத்துவத்தை ஆராய்ந்து உணர்ந்தான். மாறனை வென்று, முக்குற்றங்களையும் அறுத்து விளங்கிய அவன் அருளிச் செய்த கட்டுரையே பன்னிரு நிதானங்கள்' என்று தெளிவுற எடுத்துக் கூறிப் பேதமை முதலிய பன்னிரு நிதானங்களின் தோற்ற ஒடுக்கங்களையும், பிறவற்றையும் உபதேசித்தார். அடிகள் அம்மூவரின் மனத்திருள் நீங்குமாறு அவர்கள் உள்ளத்தில் ஞான ஒளியையும் ஏற்றினர். மூவரும் நோன்பு மேற்கொண்டனர்.

## கட்டுரைப் பயிற்சிகள்

கீழ்வருந் தலைப்புக்கள் பற்றி இரண்டு பக்க அளவில் கட்டுரைகள் எழுதுக.

1. தமிழகமும் காவிரி நாடும்
2. பூம்புகாரின் அமைப்பும் சிறப்பும்
3. கரிகால் பெருவளத்தானின் ஆட்சி மேம்பாடு
4. பண்டைச் சோழர் நாட்டியக் கலைக்குச் செய்த சிறப்பு
5. அக்காலச் சமுதாயத்தில் அமைந்திருந்த பல்வகை உரிமைகள்
6. இந்திரவிழா
7. கடல் விளையாட்டு
8. கோவலனும் மாதவியும் பாடிய வரிப்பாட்டுக்கள்
9. இன்ப மடல்
10. கையறு நெஞ்சத்துக் கடிதம்
11. பாண்டியன் நல்லவன்
12. கோவலன் கொலையும் அதனால் விளைந்த கொடுமைகளும்
13. மாதவி மேற்கொண்ட தாபதநிலை
14. பௌத்தத் துறவு நெறி
15. மணிமேகலா தெய்வம்
16. மணிமேகலை சிறைப்பட்டது விடுதலை பெற்றதும்
17. காஞ்சி வாழ்க்கையும் பௌத்த உண்மைகளும்
18. மாதவியின் மேம்பாடு
19. வளநாட்டுச் செல்வ மேம்பாடு
20. கோவலன் வாழ்க்கை

RGR / 1082

